## TAMIL SPEAKING LAWYER

**Personal Injury Lawyer**

INJURED IN A **ROAD ACCIDENT** ?

ACCIDENT AT WORK OR PUBLIC PLACE

WE ACT ON "NO WIN NO FEE" BASIS

www.nmflawyers.co.uk

NM NOT MY FAULT – Accident & Injury Claims – Ask for RAJ

Raj Rajamohan - 078 1089 7754



BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

# ORU PAPER

FREE

PAPER - 11 ♦ ISSUE - 243 ♦ FRIDAY 05 JUNE 2015



## LONDON ACCIDENT CLAIMS LIMITED

70 Windmill Road, Croydon, CR0 2XP

வாகன விபத்தா? உங்கள் தவறில்லயைா?

Driver / Passenger – within last 3 years

3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட

- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)

Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்

NO WIN NO FEE *

* Other Insurance charges may apply

Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667

Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk



உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM





Photo: tamil.com


## JOB 4 U

**JJ Recruits & Services Ltd**

உங்களுக்குத் தகுந்த வேலை இல்லையா ?

கவலை வேண்டாம் JJ Recruitsஐத் தொடர்பு கொள்ளவும்

தகுந்த சம்பளத்துடன் { Chef, Waiter, Kitchen Porter } Hotels இல் உடனடி வேலை வாய்ப்புக்கள்

JJ RECRUITS

Register online today:
w : www.jjrecruits.co.uk
or contact us more information
t : 020 3092 4388
m: info@recruits.co.uk

உலகளாவிய வகையில் 14 நாடுகளில் 40,000 மாணவர்க்கு ஒரே பாடத்திட்டம் !, ஒரே தேர்வு !, ஒரே சான்றிதழ் !!

வளர்தமிழ் அனைத்துலகத் தமிழ்ப் பொதுத்தேர்வு 2015

ஐக்கிய இராச்சியத்தில் மட்டும் 26 தேர்வு நிலையங்களில் நான்காயிரம் வரையான மாணவர்கள் பங்கேற்கும் தேர்வு

06/06/2015 சனிக்கிழமை காலை 10.00 மணி

வளர்தமிழ் 1 தொடக்கம் - வளர்தமிழ் 12 வரை

Web : www.tedc.org.uk

TEDC UK- 020 8432 6009 / 077 7175 3525

## R & C PROPERTY LAWYERS LLP & NOTARY PUBLIC

CONVEYANCING SERVICES:
- Residential and Commercial Conveyancing
- Last will

NOTARIAL SERVICES:
- Power of Attorneys, Notarisation of documents
- Affidavits , Oaths/ Statutory Declarations / Affirmations

Contact: SEN THAVARAJA LLB (Hons)
Solicitor & Notary Public

Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

Telephone: 020 8772 4920

10a Upper Tooting Road , London SW17 7PG

## Gateway to Serendipity

Fly To Sri Lanka

Oman Air fr £414 Inclusive of Taxes
Etihad Airways fr £454 Inclusive of Taxes
Turkish Airlines fr £447 Inclusive of Taxes
Qatar Airways fr £463 Inclusive of Taxes

Call us on 0203 151 0310

Also Fly on, Jet Airways, Gulf Air, Kuwait Airways, SriLankan, Emirates

*Above fares are inclusive of all taxes and subject to availability.

SERENDIB LANKA TRAVELS LTD
22a Woodford Avenue, Gants Hill, Ilford. IG2 6XG
Tel: 020 3151 0310
info@serendib-lanka.co.uk www.serendib-lanka.co.uk

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.

We have a flexible schedule, including appointments in the evenings and weekends.

தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்

HSFC HARLEY STREET FERTILITY CLINIC

Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838

Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

## சென்னையிலிருந்து UK விசா

- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா

இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்

UK Immigration Specialist

Poul & Minnaa 044 4261 3698

New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்

Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors

020 8215 1205

- இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
- எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.

Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

## WANT TO BE A DOCTOR?

Didn't get a place?
Don't worry you haven't missed out..
We will help you to find the right place

STUDENT LOANS ARRANGED

For more details
020 8863 4684

Web : www.mashaconsultants.co.uk


ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# AIKON ACCOUNTANTS LTD

**Our Services**

- *Preparation of accounts for companies and individuals/ for companies house*
- *Preparation of annual accounts and working with auditors*
- *Reporting to lenders and other external parties*
- *Preparation of management accounts*
- *VAT Computation and filing*
- *Self-assessment returns*
- *Corporation Tax computation and filing*
- *HMRC correspondence and representation*
- *Company Formation and VAT registration*
- *PAYE – Preparation of Payroll and filing returns*
- *Scenario Testing & feeding through to forecasts*
- *Budgeting & Variance Analysis*
- *Financial Planning and Analysis*
- *Evaluation of the internal controls and propose suitable solutions in order to eliminate weaknesses.*
- *Cash flow forecasts & Projected Accounts*
- *Restructuring*
- *Mergers and Acquisitions*
- *Due diligence*
- *Investment and Project Appraisal*
- *Assisting Foreign companies establishing in the UK*
- *Assisting UK companies expanding and establishing overseas*
- *Assisting with securing finance for business growth*

**FAST GROWING ACCOUNTANTS IN LONDON FOR ALL YOUR NEEDS!**

For a no obligation, FREE consultation Call us on 02031891884

accounts@a-accountants.com - www.a-accountants.com

Exclusive offer for our Takeaway customers. If you order your takeaway meal through our new website **www.fushia-restaurant.co.uk,** we will give you a **30% Discount!.**

This offer is only available to online orders until the end of March 2015 (T&Cs apply)

**Slow Cooked Lamb shanks** **£9.95 Only**

With a rich rosemary and mint sauce or spicy sauce



FUSHIA

TEL - 020 8680 8833

3, Brighton Road, South Croydon, Surrey, CR2 6EA

web : www.fushiauk.com Mail : info@fushiauk.com

newlife

Home of Fertility, Immunology & Women's Health

## Newlife Fertility Clinic

20 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொண்டு குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்கிடுங்கள்



Access Fertility நிறுவனத்துடன் இணைந்து வழங்கும் விசேட விலைகழிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

We provide the best affordable infertility treatments (IVF, IUI, ICSI)

www.newlifeclinic.org.uk

T : 01372 738 932

The Pines, 2 The Parade, Epsom KT18 5DH

# King Waffle & Catering



நடமாடும் உணவகம்

உங்களது இடத்துக்கு வந்து சாப்பாடு தருவோம்

07816859744

உங்கள் வீட்டு விழாக்கள், திருமணம், பிறந்தநாள், அரங்கேற்றம் மற்றும் அனைத்து விதமான வைபவங்களுக்கும், கலாசார நிகழ்வுகளுக்கும் மண்டப நிகழ்வுகளுக்கும் தரமான உணவு வகைகள் பரிமாற நாடவேண்டிய ஒரே இடம்

Contact for Mobile Restaurant - K.Kugan 07816859744

# காணி உடன் விற்பனைக்கு

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில் அருகாமையில் மெயின் வீதியில் கல்யாண மண்டபம், அல்லது கடைகள் கட்டக்கூடிய 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

Mob : 0044 7952 214 945



REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

# UK COOL AND SHOPFITTING Ltd.



168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK

MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk



## Summer Offer





**New and Used Fridge for Sale**

**New Fridge 3.75 Meter**

**£3900 + VAT**

**UK COOL & SHOPFITTING**

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**MOVING & DEVILERY**

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

7 Days 24 HRS Services & Repair

# தூவல்



## தயாள குணம்..

அன்புள்ள ஆசிரியருக்கு,

பாசமுள்ள பாட்டனாரை பலியெடுத்த பயங்கரவாத இயக்கத்தின் முன்னாள் தலைவர்களுடன் கைகுலுக்கி சமரசம் காண விளைந்த இளவரசர் சார்ஸ்சின் தயாள குணத்தை, சமீபத்தில் வடஅயர்லாந்துக்கு விஜயம் செய்தபோது, எடுத்துக்காட்டியது. இலட்சக் கணக்கான தமிழர்களை இலங்கையில் அழித்தொழித்தமைக்கு தலைமை தாங்கியவர்கள் தமது தவறுகளை உணர்ந்துகொள்ள இச்சந்திப்பு நினைவூட்டும்.

*- உமா மகாலிங்கம்*

## மின்னல் ரங்கா

சக்தி ரெலிவிசனில் மின்னல் என்ற அதிரடி நிகழ்ச்சியை நடாத்தும் ரங்காவைப் பாராட்ட வேண்டும். வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனை அவர் செவ்வி கண்டதை பார்த்தால் குறுக்கு விசாரணை செய்தது போல் இருந்தது. உண்மைகளை வெளிக்கொண்டு வருவதில் அவரது செவ்வியும் காத்திரமனா பங்கு வகிக்கும் என நம்பலாம். புலம்பெயர் நாடுகளில் உள்ள தொலைக்காட்சிகளில் இவ்வாறான நிகழ்ச்சிகளை நடாத்துபவர்கள் யாரையும் மனங்கோணக் கூடாது என்று அழகாரமாகக் கதைப்பதுடன் நின்றுவிடுகிறார்கள்.

*- அழகானந்தன்*

## காசியில் திதி கொடுக்கிறார்களாம்

'பட்டினியால் செத்த தாய்க்கு சிதம்பரத்தில் அந்தியேட்டி செய்தானாம் மகன்' என்று ஊரில் ஒரு பழமொழி இருக்குது. முள்ளிவாய்க்காலில் எங்கள் மக்கள் அழிக்கப்பட்டு கொண்டிருக்க இந்திய அரசாங்கம், தமிழ்நாடு அரசாங்கம், மதபீடங்கள், சாமியார்கள் என்று யாருமே கண்டுகொள்ளாதிருந்தனர். ஆனால் இங்குள்ள சிலரோ முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களுக்கு காசியில் திதி கொடுக்கிறார்கள். கங்கை நதிக்கரையில் பிதிர்கடன் செய்கிறார்கள். ஏதோ இறந்துபோன எங்களது மக்களைச் சாட்டி, கோயில் உண்டியல் பணத்தில் பயணமுகவர்களாவது பிழைக்கட்டும்.

*- இணுவை சி. இரங்கன்*

## சுமந்திரன் கணக்கிலை கொஞ்சம் வீக்கா?

அண்மையில் கொழும்பிலிருந்து வெளிவரும் டெயிலிமிரர் பத்திரிகைக்கு பேட்டி கொடுத்திருக்கிற சுமந்திரன் பாதர் இமானுவல் சிறிலங்கா சனாதிபதி சிறிசேனவை பாராட்டியதைப்பற்றி கூறிவிட்டு. பதினைந்துக்கும் அதிகமான நாடுகளில் உலகத்தமிழர் பேரவையில் உறுப்புரிமை கொண்ட அமைப்புகள் இருக்கிறதாகவும் கூறியிருக்கிறார். நோர்வே, சுவீடன், கனடா, அவுஸ்திரேலியா, மலேசியா, அமெரிக்கா ... எண்ணினால் ஆறுக்கு மேல் வருகுதில்லை.

*- நவேந்திரன்*

## தேர்தல் வரைக்கும்தான்

என்ன ஒரேயடியாய் சுமந்திரன் பக்கம் சரிஞ்சிட்டியள் என்று சிறிதரன் மாஸ்டரைக் கேட்டார்களாம். பக்கத்து நாடு சங்கரிக்கும் சீட் குடுக்கச் சொல்லி நிக்கிறாங்கள், அதை எப்பிடியும் தடுத்து நிறுத்துவன் என்று சுமந்திரன் ஒராள்தான் சொல்லியிருக்கிறார். தேர்தலிலை நான் நிக்கிறது உறுதிப்படுத்தும் வரைக்குமாவது அந்தாளோடை நிக்கோணும் எண்டாராம் பதிலுக்கு.

*- மாணிக்கதாஸ்*

## எழுதியவர் யாரோ ?

வாழ்ந்து படிக்கும் பாடங்கள், சினிமாப் பகுதி, ஊரின் வாசம், தகவல் களஞ்சியம், கவிதைகள் என்று நான் விரும்பிப் படிப்பவை. சென்ற ஊரின் வாசம் 'கோடையில் கீரிமலை' மிக அருமையாக இருந்தது. கீரிமலைக்கு போய் வரச் செய்த பாவை ஜெயபாலனுக்கு பாராட்டுக்கள்.

அது சரி, இந்த எழுத்துப் போக்கில் ஊரின் வாசம் பெயர் அறியக் கூடியதாக இருந்தது. அதன் பெயர் 'ஊரின் வாசம்' என்ற தலைப்பு சென் இதழில் போடப்படவில்லையே இது தவறுதலா?

*- மலர்*

## ஊர்காவற்துறை தொகுதியை குறிவைக்கிறார்கள்

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் காட்டிய சுறுசுறுப்பு புல்லரிக்க வைக்கிறது. தமிழ்மாறன், தவராசா, சிறிதரன், விஜயகலா, துவாரகேஸ்வரன் என்று பலரும் அங்கு கூடாரமடிக்காத குறையாக நின்றார்கள். ஏனப்பா இப்படி என்று புங்குடுதீவிலை இருக்கிற ஒரு நண்பரை கேட்டேன். இருக்காதா பின்ன எலக்சன் வரபோகுதெல்லோ.. அவனவன் தன்ரை கதிரையை பாதுகாக்க வேணும் எல்லோ என்றார்.

*- ரோனி பிரான்சிஸ்*

## சிறப்பு விருந்தினராக முதலமைச்சர்

அமெரிக்க தமிழ்ச்சங்கப்பேரவை வருடாந்தம் நடாத்து தமிழ் விழாவில் முதலமைச்சர் விக்னேஸ்வரனை சிறப்பு விருந்தினராக அழைத்துள்ளது. சான்பிரான்சிஸ்கோ நகரில் நடக்கிற இந்த விழாவிற்கு பல பிரபலங்களை அழைக்கப்பட்டுள்ள போதிலும் முதலமைச்சரை முதன்மை விருந்தினாக அழைத்தமை தமிழரசுக்கட்சியின் தலைமைக்கு பிடிக்கவில்லையாம். அவையளின்ரை பெருந்தலைவர் சம்பந்தனுக்கு இப்படியான அழைப்புகள் வருவதில்லை என்ற பொறாமை தான்.

*- கயல்விழி*

## அரசியல்வாதிகள் பொய்பேசுவார்கள், ஆனால்..

இராஜதந்திரிகள், அரசியல்வாதிகள் என அரசியலில் ஈடுபடுவோர் சரளமாகப் பொய் கூறுவார்கள். ஆனால் மதகுருமார் அரசியலில் ஈடுபடும்போது அவர்களும் பொய் கூறக்கூடும். பொதுபல சேனவின் ஞானசார தேரர், ஜாதிக ஹெல உருமயவின் ரத்தன தேர்ர் ஆகியோர் பொய் கூறினால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆனால் தமிழ் மதகுருக்கள் பொய் கூறும்போது அசௌகரியமாக இருக்கிறது. ஐபிசி தொலைக்காட்சியில் தமிழ் மதகுருவரின் பேட்டியை கேட்டபோது எனக்கு இந்த நிலை ஏற்பட்டது.

*- பாமதி கணேஸ்வரன்*

## கொலை முயற்சியா?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் வாகன விபத்தில் காயப்பட்டுள்ளார். அவரை மோதிய பாரவூர்தி இந்திய நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமானதாம். அதேசமயம் காயப்பட்டுள்ள அவரை மருத்துவமனையில் சென்று சந்தித்த இந்திய துணைத்தூதுவர், தேர்தல் காலத்தில் இப்படி நடந்திருக்கிறதே என்று கவலைப்பட்டாராம். இரண்டையும் சேர்த்துப்பார்க்கலாமா?

*- திவாகர்*

*ஒரு பேப்பர் தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....*
**Tel : 020 7043 4314**

# மே 18 இல் சம்பந்தன், சுமந்திரன் எங்கே ஒளிந்தார்கள் ?

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் ஆயுதப்போராட்டமும் அதனைத் தாங்கி சென்ற விடுதலைப்புலிகளும், லட்சத்துக்குமேலான மக்களும் கொன்றொழிக்கப்பட்ட தினமான மே18 ஆனது ஈழத்தமிழர்கள் மட்டுமல்லாது, தமிழகத்து தமிழர் மட்டுமன்றி மனிதத்தினை மதிக்கும் அனைத்துலக மக்களாலும் மறக்கமுடியாமல் போன ஒரு துன்பியல் நாள்.

இந்நாளில் கொல்லப்பட்ட மக்களிற்கான நீதி கிடைத்தால் கூட அந்நாள் அனைத்து மக்களின் மனங்களில் வாழ்நாள் முழுக்க மறக்கமுடியாத வலிகள் நிறைந்த நாளாகவே இருக்கும். இனப்படுகொலை நடைபெற்று 6 ஆண்டுகள் கடந்தாலும், குறித்த நாளில் அனைத்து தமிழர்களும் ஏதோ ஒரு வகையில் பல அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாது அஞ்சலி செய்து கொண்டே வந்துள்ளனர். ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ்மக்களின் தலைவராக வந்தவராக சொல்லப்படும் திரு சம்பந்தன் அவர்களும், அரசியல் இராஜதந்திரியாக தன்னை வெளிப்படுத்தி வரும் திரு. சுமந்திரன் ஆகியோர்கள் வடகிழக்கில் நடைபெற்ற எந்த அஞ்சலி நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளவில்லை. தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்டு வெறுக்கப்பட்ட சிங்கக் கொடியை ரணில் அவர்களோடு சேர்ந்து உயர்த்திக் காட்டியபோதும், தந்தை செல்வா காலம் தொட்டு புறக்கணித்து வந்த சிறிலங்கா சுதந்திர தின விழாவில், சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தது அது காலத்தின் தேவை என மழுப்பினார்கள்.

சிங்கள படைகளால் இனப்படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் கலந்து கொள்ளாமல் விட்டமையானது இவர்கள் மீது மிகுந்த கோபத்தினையே தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது. இப்படியான இவர்கள் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்து படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்று தருவார்கள் என்றோ, எமது மக்களிள் விடிவிற்காக எப்படி குரல் கொடுப்பார்கள் என்றோ நம்பவே முடியாது. கலந்து கொள்ளாமைக்கான காரணங்கள் எதைச் சொன்னாலும் மக்கள் இனியும் அதனை நம்ப தயாராகவில்லை.

தமிழ் மக்களின் நிகழ்வில் கலந்து கொண்டால் சிங்கள ஆட்சியாளர்களை அல்லது சிங்கள மக்களின் இதயத்தை நோக வைக்கும் என்று நினைத்து அன்று ஓய்வு எடுத்தார்களோ தெரியவில்லை அல்லது சர்வதேச அழுத்தம், இந்தியாவின் அழுத்தம் என்று காரணத்தை சொல்லப்போகின்றார்களோ தெரியவில்லை. ஆனால் அவர்கள் என்ன காரணத்தினை சொன்னாலும், தமிழ் மக்களின் முக்கியமான ஒரு நினைவு நாளில் கண்டிப்பாக கலந்து கொள்ளாமையானது பலத்த சந்தேகத்தினை ஏற்படுத்துவதோடு கடும் சினத்தினையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

இவர்கள் தான் தமிழ் இனத்தின் தலைவர்கள் என்று சர்வதேசம் பார்க்கும்போது, அவர்களே தமிழ் மக்களின் நினைவு தினத்தினை புறக்கணிப்பு செய்யும்போது அனைத்துலகத்திற்கு பிழையான ஒரு எண்ணப்பாட்டினை ஏற்படுத்துவதோடு, தமிழ் மக்களோ ஐ. நா நோக்கிய எமக்கான நீதியை வேண்டி கையேந்திக் கொண்டிருக்கும் போது, இப்படியான தலைவர்கள் மக்களின் எதிர்பார்ப்பினை சிதைத்து, இனப்படுகொலை நடைபெற்றதை மறுதலித்து சிறிலங்கா அரசாங்கமே விசாரணையை மேற்கொண்டு தீர்க்கட்டும் என்ற நிலையை ஏற்படுத்தி விடுவார்களோ என்று எண்ண தோன்றுகின்றது.

சிங்கள மக்களின் மனங்களை வெல்லவேண்டும் என்றும் ஆட்சியாளர்களின் இதயத்தோடு பின்னி பிணைந்திருக்க வேண்டும் என்றும் அறிக்கை விட்டு இறுதியில் தமிழ் மக்களின் மனங்களில் இருந்து நிரந்தரமாக பிரிய வேண்டிய நிலைக்கு வந்துவிட்டார்களோ என எண்ணத் தோன்றுகின்றது.

தமிழ் மக்களின் மனங்களில் இருந்து நிரந்தரமாக பிரிந்தாலும் பறவாயில்லை, ஆனால் எமது மக்கள் என்ன நோக்கத்திற்காக மாண்டு போனார்களோ அவர்களின் நோக்கத்தை இலட்சியத்தினை, விடுதலைக் கனவை ஏறி மிதித்து தமிழர்களை நிரந்தர அடிமைகள் ஆக்கப்பார்க்கின்றார்கள் என்று எண்ணத்தோன்றுகின்றது.

இதற்கு எந்த தமிழ் மக்களும் இடம் கொடுக்கமாட்டார்கள் என்பதோடு, ஜனநாயக வழியில் அவர்களுக்கான தண்டனையை மக்கள் நிச்சயம் கொடுத்து அவர்களை நிரந்தரமாக வீட்டுக்கு அனுப்புவார்கள்.

*- ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு.*

one-stop-shop
for all of your
Telecoms needs
Saving you
Time & Money





Our Products and Services:
- Landlines & Broadband
- SIP Trunks (Free Inclusive Minutes)

Office Phone Systems
- Easy to control
- Lower call costs
- No need for a costly PBX
- No maintenance charges
- Lines from £6.75

FREE FIBRE / ETHERNET INSTALLATION *

MONEX TELECOM
Exclusively for Businesses

Telephone;
0207 402 2900
website;
www.monextelecom.co.uk
24 / 7 Technical Support

ஒரு பேப்பர்
ORU PAPER

THURSDAY, JUNE 05, 2015, ISSUE 243

## சமூக அநீதிகளுக்கு எதிரான விழிப்புணர்வு

யாழ்பாணத்தில் பாடசாலை மாணவி வித்தியா சிவலோகநாதன் மீது நடாத்தப்பட்ட பலாத்காரம், அவரது படுகொலை என்பன போருக்கு பிந்திய காலத்தில், நமது சமூக கட்டுமானத்தின் தேய்வு நிலையை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளமை தமிழ் மக்களை வருத்தத்திற்கு உள்ளாக்கியுள்ளது. இவ்வாறான சம்பவங்களை, தொடரும் இனவழிப்பின் இன்னொரு வடிவமாகவே பார்க்கப்பட வேண்டும் என்ற சில சமூக விஞ்ஞானிகளின் கருத்து சிலருக்கு ஏற்புடையதாக இல்லாதிருக்கலாம். ஆனால் இந்நிலமை தொடருமானால் அது இனவழிப்புக்கு ஒப்பான நிலையைத் தோற்றுவிக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது. தேசக்கட்டுமானத்தின் சிதைப்பிற்கு எதிரி உதவுவது ஒரு புறமிருக்க தமிழ்ச் சமூகத்திலுள்ள புல்லுருவிகளும் இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தக் கூடும். ஆகவே இப்பிரச்சனையின் வேறுபட்ட பரிமாணங்களையிட்டு கவனம் செலுத்தாமல் அதனைத் தீர்ப்பதோ அல்லது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதோ முடியாதிருக்கும்.

இலங்கைத் தீவு முழுவதும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதாகவும், நாளொன்றுக்கு சராசரியாக பதினெட்டுப் பெண்கள் பாலியல் ரீதியான வன்கொடுமைகளுக்கு ஆளாவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் புள்ளி விபரங்களிலிருந்து தெரியவருகிறது. போதைப்பொருட் பாவனை, பெண்கள் மீதான வன்முறை என சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவர்களுக்கு சில சமயம் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பொறுப்பானவர்களே உடந்தையாக இருக்கிறார்கள் என்ற வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் குற்றச்சாட்டியுள்ளார். முன்னாள் நீதிபதியான அவர் சமூக நலனில் காட்டும் அக்கறை அரசியலுக்கு அப்பாற்பட்டது. அதனை வாக்கு பொறுக்குவதில் குறியாகவிருக்கும் மற்றைய அரசியல்வாதிகளின் செயற்பாடுகளுடன் ஒப்பிட முடியாது. ஆதலால் இக்குற்றச்செயல்களைக் கட்டுப் படுத்துவதற்கான விளிப்புணர்வையூட்டும் செயற்பாடுகளில் சமூகத்தலைவர்கள், கல்வியாளரகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் என்போர் முதலமைச்சருடன் இணைந்து செயற்பட முடியும்.

'இருப்பவர்கள் இருந்தால் ஏனிந்த நிலைமை' என்ற மக்களின் அங்கலாய்ப்பினை விளங்கிக் கெள்ளமுடிகிறது. ஆனால் தேசக்கட்டுமானத்தை நிறுவுவதற்காக தம் உயிரை அர்ப்பணிப்புச் செய்து போராடியவர்கள 'பயங்கரவாதிகளாக' கொச்சைப்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு வாக்களித்து அவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்புவதன் மூலம் இந்நிலையில் எந்த மாற்றத்தினயும் ஏற்படுத்திவிட முடியாது என்பதனை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

சமூக அநீதிகளுக்கு எதிரான போராட்டம் உள் வீட்டிலிருந்தே ஆரம்பிக்கப் படவேண்டும்!

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*மூன்று கிழமை இடைவெளிக்கு பிறகு சந்திக்கிறம். **ஒரு பேப்பர்** இன் பதினோராவது பிறந்தநாளும் இந்த மாதம் வர இருக்குது. இப்பிடிச் சொல்லேக்கை, துவங்கேக்கை இருந்தமாதிரி **ஒரு பேப்பர்** இல்லை, ஒரே அரசியலாய் இருக்குது என்று உங்கட புறுபுறுப்பும் கேட்கிறது. மெய்தான் வயசு போகப் போக இயக்கம் குறையிறமாதிரித்தான் இதுவும். இருந்தாலும் இப்பிடி விட்டிட்டு இருக்கேலாது. புதுரத்தம் பாச்சவேண்டும். ஆகவே **ஒரு பேப்பர்** ருடன் இணைந்து பணிபுரிவதற்கு உங்களை அழைக்கிறோம்.*

***ஒரு பேப்பர்** ருடன் இணைந்து செயற்படுவதற்கு ஊடகத்துறையில் அனுபவம் பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ் இலக்கணத்தை கரைத்துக் குடித்திருக்கவும் தேவையில்லை. (அப்பிடியிருந்தால் நீங்கள் எழுதிறது எங்களுக்கு விளங்காது). சமூக விடயங்களில் அக்கறை இருந்தால் போதுமானது. பத்திரிகைத்துறையில் போதிய பயிற்சி வழங்கப்படும். கட்டுரையாளர்கள், பத்தி எழுத்தாளர்கள், செய்தியாளர்கள், ஒளிப்படக்காரர்கள் என பல்துறைகளிலும் விருப்பமிருக்கிற ஆட்களை எதிர்பார்க்கிறம்.*

*பொதுவில் செய்திகளை வெளிவிடாவிட்டாலும் உள்ளூர் செய்திகளையாவது பிரசுரியுங்கள் என்று அடிக்கடி எங்களை ஆட்கள் கேட்கிறார்கள். அதற்கான ஆளணி எங்களிடம் இல்லாதிருப்பதுதான் நாங்கள் செய்திகளைப் பிரசுரிக்காததற்கு காரணம். இருப்பினும் முயற்சிக்கிறோம்.*

***ஒரு பேப்பர்** ல் தொடரந்து வெளிவரும் அலசுவாரம், தகவல் களஞ்சியம், ஊரின் வாசம், பகுதிகளை எழுதிவரும் மட்டைக்கிளப்பான், உமா மகாலிங்கம், பாவை ஜெயபாலன் ஆகியோரையும் வேல் தர்மாவையும் நாம் நன்றியுடன் நினைக்கிறோம். ஏனெனில் **ஒரு பேப்பர்** வாசகர்களுக்கு மிகவும் பிடித்த அவர்களது ஆக்கங்களை அவர்கள் நேரம் பிந்தாமல் வேளைக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்கிறார்கள். மற்றயவர்களும் இவ்வாறு நடந்துகொண்டால் இறுதிநேரத்திலை மண்டையை பிய்க்கிற நிலை எங்களுக்கிருக்காது.*

***ஒரு பேப்பர்** ன் இணைய தளம் தொழிநுட்பக் காரணங்களினால் முழுமையாக இயங்க முடியாதுள்ளது. விரைவில் இது சீர் செய்யப்பட்டு முன்னையது போன்று இயங்கும். அதுவரை பொறுத்திருங்கள்.*

*அடுத்த பேப்பரில் சந்திப்பம்*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# We cannot expect anything out of the domestic investigative process



C.V. WIGNESWARAN

Chief Minister C.V. Wigneswaran, when answering questions at an international tele-conference on the findings of "The Long Shadow of War", a report published by the Oakland Institute, has expressed his dissatisfaction over the domestic investigation mechanism into the war crimes. He emphasised that there should be an international dimension in the investigation process as the domestic mechanism would not bring about the expected results.

Following are excerpts from the comments made by Mr.Wigneswaran:

As far as we are concerned there are certain minimal things which we wanted. For example, with regard to the land that has been released, first they said it was about 1000 Acres, but only around hundred Acres was released. The lands that were given back were not fertile and they were not really useful to the people. As far as the Tamils are concerned, there has been no political will to help Tamils except when they are forced to do something. This has been one of the characteristics of what has been taking place. The central government in Sri Lanka will not do anything towards the minorities or towards the Tamils, unless they are forced to do something. So, the fact that the matters are being brought up into the open by the Oakland institute is definitely useful in order to bring about the international pressure that is necessary with regard to the government of this sort.

With regard to the domestic investigation, right at the start there were a lot of shortcomings. We are not certain that the domestic investigation would bring about desired results; because number of things that have proceeded should be taken into account. There had been international experts who were brought in to investigate earlier, found, conflict of interest, of the State and of those who were accused of the offenses. Right from the beginning we have had number of cases, where there had not been any proper investigation. Therefore, the domestic inquiry will not bring about the necessary expected results. I agree there should be an international dimension in the investigation process. I don't think we can expect anything out of domestic investigative process with no international dimension at all.

Release of lands in the high security zones are completely in the hands of the army. Most of the lands you will see that the original holders of the houses cannot see their houses as they had been completely demolished. The manner in which things are taking place is that the army is not returning the lands to the owners. Even the lands that had been released are not fertile lands, but the good fertile lands are still being cultivated by the army. I have my doubts that the Army would ever leave those areas, with regard to the business aspect of it and they are doing so much of business activities. Complete control in the economic activities in those areas. They are bringing in Sinhala people from outside to do illegal fishing, and the people of those areas are being prevented by army or navy from fishing.

The information that we received was that the government wanted to handover thousands of acres of land, but only around two hundred acres were given out, because the army simply refused to give back the land to their owners. It was only through various processes that they were able to increase the land release from around two hundred to around thousand. In fact we were expecting 5,500 acres to be returned out of 6,500 acres. Army having got used to all the benefits of being there do not like to leave the lands. Unless there is some pressure put on by the international community, there is going to be difficulties in releasing anything.

With regard to the number of soldiers, there had been a general call on the army to get back to their barracks. Therefore, there is no ostensible presence of the army, except during the recent incident. There had been no exodus of soldiers from the Northern Province that had been witnessed by people. Though they are talking in terms of reduction of the army, what really happens is some camps are closed, and the army is moved into larger camps and they are left there. I don't think there has been any significance reduction in the number of soldiers in the North.

Just two days after the 8th of January, I had an opportunity to meet the Prime Minister, and he made a definite statement that he was going to inform the Buddhist priests that no army camp in the northern province was going to be taken away from there. There after it was stated by Defense Minister Ruwan Wijeyaewardane.

Release of lands in the high security zones are completely in the hands of the army. Most of the lands you will see that the original holders of the houses cannot see their houses as they had been completely demolished.

Therefore, it is very clear that there is no intention on the part of the government to remove the army. Sometimes, various statements are made, so we had been always look out to see whether there had been any mass exodus of soldiers from the North, but we found none. Definitely few camps are closed, all the soldiers are taken over into the larger camps, and they are still continuing to be there. The chances are that over 150,000 soldiers are still in the Northern Province.

# Lifting The Veil Of Silence Around Sexual Violence Against Women & Girls In Sri Lanka



**By Kamani Jinadasa**

Three months ago in Vanni a 16 year old Tamil girl, Saranya Selvarasa passed away in the Kilinochchi Base hospital. Saranya was orphaned after the death of her parents. Her father died during the war in 2006 and after the war her mother passed away in an accident. Saranya and her two younger brothers were adopted by their grandmother, who had been doing the best she could to care for them under very difficult conditions. When Saranya's grandmother tried to seek answers for her granddaughter's death she was informed by the doctor who handled her case that she had been gang raped by at least three men. The police visited the grandmother's home after Saranya's death had been reported in the local media. They tried to pressure Saranya's grandmother to conceal the gang rape and say instead that Saranya had died due to a mental disorder. The police then threatened to have the grandmother imprisoned on charges of "damaging Saranya's character" if she failed to comply with their demands. Her grandmother refused to comply with their threats.

As I write this article the news of another brutal rape and murder of another school girl in Jaffna, Vidhiya has surfaced.

## The reality:

Saranya's story and now Vidhiya's, are not new to post war Sri Lanka. Horrific stories of sexual violence perpetrated against Tamil women and girls by the military have been seeping into our news feeds sporadically, mainly via international news agencies[3]. What makes it even more disturbing is that these stories are being brushed off, conveniently ignored and even discredited, claiming that they are nothing more than attempts to damage the government's reputation. While rates of sexual violence against Tamil women, children and men have not been measured, there is substantial anecdotal and plausible evidence to indicate that this is happening on a regular basis with little or no accountability on the part of the perpetrators in the North. The manner in which the lives of victims change after such experiences cannot be truly captured. Who can a survivor turn to when the perpetrators are more likely to be the military or law enforcement officials?

At a wider level, a report which sought to capture prevalence rates of violence against women and girls (VAWG) reflected that 14% of men in the sample from four districts in Sri Lanka had admitted to perpetrating rape[4]. Among men who did admit to perpetrating sexual violence including rape, over half of the men stated they were motivated by feelings of sexual entitlement. More alarmingly 28% of the men that had perpetrated acts of sexual violence including rape against women said that they had been in the 15-19 year age group at the time they committed their first rape. The same report calls attention to very high levels of impunity experienced by these men who admitted to perpetrating rape. Accordingly 97% of the men in these four districts had faced no legal consequences for their actions.

Given the conditions surrounding the lives of women and girls in the North, where there are an estimated 90,000 women headed householdsone can only imagine how these similar statistics surrounding their vulnerabilities are exacerbated.

## The problem:

Despite the fact that Sri Lanka elected the world's first female Prime Minister and has very low maternal mortality rates across districts which have participated in national census', police statistics reveal that registered incidents of rape saw an increase of nearly 20% during 2012-2014. It is reported that every day, three to five children are raped in Sri Lanka. The total number of all crimes against children besides sex crimes include crimes of violence, abduction, trafficking and other offenses, increased by a dramatic 64% between 2011 and 2012.It is time for us to admit that we are experiencing an epidemic of sexual violence in our country.

Given the resurgence of extremism and mysoginism that was allowed to prevail under the previous government's regime, issues surrounding sexism and violence against women and girls were undermined or ignored. We had a former parliamentarian, Mervyn Silva stating that if women are sexually attacked it is due a fault in the way they are dressed. We currently have an MP, S.B. Dissanayake who vowed to strip a former female head of state of her clothes and make her run down the streets naked. Members of parliament that have been convicted of rape have been released. Another politician who was involved in the brutal gang rape of a Russian woman and murder of her British partner walked scot free for years until the British government applied tremendous pressure for some level of accountability. These are the lessons we are teaching other men in Sri Lanka. We have given men the license to go ahead and flaunt or exercise their feelings of sexual entitlement and power with absolutely no consequences. What does that say about us as a nation?

What will it take to motivate Sri Lankans to act in instances where violence is not meted out only towards their own kith and kin? What will it take for Sri Lankans to open our eyes to the realities of what women and little girls like Saranya and Vidhya are facing daily in the North and that their lives are as equally important as those in the South?

Following the news item about Saranya's case, I started a petition to pressure authorities to take necessary steps for a proper investigation into her untimely demise. Many brave women have come forward with their own experiences of rape and the steps they have taken to reduce the risk of their own daughters facing the same fate. Women have taken the burden of risk aversion into their own hands, through their activism, individually or through women's organizations as there is little faith in the system that has prevailed in Sri Lanka to date.

## The good news:

With the change of government I see a definite increase in reporting of VAWG. There is a better space for women's organizations and activists like me to feel safer to take action when terrible incidents like this occur.

The new government has decidedly placed more qualified people in certain positions as per their experience and interests. The sum of these choices can be felt in Saranya's case. Subsequent to the development and circulation of the petition Rosy Senanayake, State Minister of Children's Affairs and Natasha Balendra, Chairperson of the National Child Protection Authority flexed the national law enforcement apparatus to facilitate an impartial investigation into her death. Saranya's body was exhumed and taken to Colombo for forensic analysis and the post mortem report is expected to be produced on 18th May (Vavuniya Magistrates Court – Case No: AR 141/15). In a situation where the entire story would have been buried with Saranya, a proper legal process has been activated instead. In this case there is a higher likelihood that justice will be done.

On 15th May three brothers suspected in the rape of Vidhiya were arrested. I would like to add that while Vidhiya was murdered on 13th May it took two days for mainstream Sri Lankan media to pick up the story even though protests were held in Jaffna immediately after the news of the rape and murder emerged. News of bribery, constitutional amendments and a foreigner's visit to Sri Lanka make the headlines within minutes.

What will it take for people to understand that impunity experienced by perpetrators of sexual violation of a person in the North can only mean that the same is most likely to occur in the South as lack of accountability will become the norm? What will each one of us do to make Sri Lanka safer for women and girls? When will we, as a nation, lift this veil of silence?

My question is though, what will it take for Sri Lankans to react collectively to the levels of violence that is meted out to women and girls every day? What will it take to motivate Sri Lankans to act in instances where violence is not meted out only towards their own kith and kin? What will it take for Sri Lankans to open our eyes to the realities of what women and little girls like Saranya and Vidhya are facing daily in the North and that their lives are as equally important as those in the South? What will it take for people to understand that impunity experienced by perpetrators of sexual violation of a person in the North can only mean that the same is most likely to occur in the South as lack of accountability will become the norm? What will each one of us do to make Sri Lanka safer for women and girls? When will we, as a nation, lift this veil of silence?

** Kamani is a Sri Lankan working at the International Rescue Committee, New York. The views expressed here are entirely her own and do not represent the views or opinions of the International Rescue Committee.*

*Courtesy: Colombo Telegraph*


ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

**BBK Partnership**
Croydon.................. 020 8150 9950

**Meera Arnold & Co**
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]
K.Durairajah [Greenford]

**இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.**

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

கனடா
**தயா - அரவிந்தன் - சிந்து**

பொறுப்பாசிரியர்
**- கோபி -**

விளம்பரம்
**அஜந்தா**

அச்சு
**தர்சினி (கனடா) - சுகன்யா**

வடிவமைப்பு
**மயூரன் - யுகன்**

முகப்பு வடிவமைப்பு
**seven zero graphics**

விளம்பர வடிவமைப்பு
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

தமிழ் எழுத்துரு உதவி
**சுரதா யாழ்வாணன்**

நிதி – நிர்வாகம்
**அஜந்தா**

வழங்கல்
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**

**உங்கள் தொடர்புகட்கு:**

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# வடக்கு இளைஞர்கள் திட்டமிட்டமுறையில் போதைப்பொருளுக்கு அடிமையாக்கப்படுகின்றனர்



- முதலமைச்சர் விக்னேஸ்வரன்

எமது இளைஞர்கள் இடையே போதைப் பொருட்களை அறிமுகம் செய்யப் பாரிய ஓர் அரசியல் காரணம் பின்னணியில் இருந்து வந்துள்ளது என்பதை எங்கள் மாணவ உலகம் அறிந்து கொள்ள வேண்டும். இந்தச் சதியில் இருந்து தப்ப முயற்சிக்க வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் மே 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துரை வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்நிகழ்ச்சியில் தொடர்ந்து உரையாற்றுகையில் அவர்குறிப்பிட்டதாவது:

எமது இளைஞர், யுவதிகள் விளையாட்டுக்களில் ஈடுபாட்டுடன் செயற்பட்டால் தான் பலவித சமூகச் சீரழிவு செயல்களில் இருந்து தம்மை தப்ப வைத்துக் கொள்ளலாம். விளையாட்டுக்கள் எங்கள் உடல்கள் பற்றி எமது திறன்கள் பற்றி சிந்திக்க வைக்கும் தன்மை வாய்ந்தன. எம்மை குறிக்கோள் நோக்கி இயக்கும். யார் யாரோ வேண்டும் என்றே திட்டமிட்டு போதைப்பொருள் பாவனையைக் கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் விநியோகித்து வருகின்றார்கள். சிறு சிறு கடைகளில் எல்லாம் சிறிய பொதிகளில் பல்வேறு பெயர்களில் அவற்றை விநியோகிப்பதாக எனக்கு செய்தி கிடைத்துள்ளது.

புங்குடுதீவில் அண்மையில் இடம்பெற்ற வன்புணர்விலும் கொலையிலும் ஈடுபட்டவர்கள் போதைப் பொருட் பாவிப்புக்கு அடிமைப் பட்டிருந்ததாலேயே மிருகத்தனமாக நடந்து கொண்டதாகப்பேசப்பட்டுவருகின்றது. அரசியல் ரீதியாக ஏன் இந்தப் போதைப்பொருள் அறிமுகப் படுத்தப்பட்டது என்று நினைக்கின்றீர்கள்? அதன் பின்னணியில் ஒரு முக்கியமான காரணம் உண்டு என்பது எனது கருத்து.

ஒரு காலத்தில் எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி அரசாங்கங்களையே ஆட்டிப் படைத்து வந்துள்ளனர். வெளிநாட்டு உதவியுடன் பெருத்த செலவுடன்தான் அவர்களை அப்போதிருந்த அரசாங்கத்தால் அழிக்க முடிந்தது. இனியும் தமிழ் இளைஞர்கள் ஒன்று சேரக்கூடாது, ஒருமித்துச் செயலாற்றக்கூடாது, கல்வியில் சிறந்து விளங்கக்கூடாது, சுதந்திர எண்ணங்கள் அவர்கள் மனதில் எழக்கூடாது, விடுதலை வெறி அவர்களுள் கொழுந்து விட்டு எழக்கூடாது, அவர்களை நடை பிணங்கள் ஆக்க வேண்டும் என்ற எண்ணம் சில அதிகாரபீட அலுவலர்களிடமும் அரசியல்வாத அமைச்சர்களிடமும் எழுந்தது.

வடக்கு, கிழக்கு மாகாண இளைஞர்கள் பலரை அழித்தொழித்து விட்டோம். ஆனால், மீண்டும் அவர்கள் எழமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம் என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் முகமாகவே போதைப்பொருட்களைத் திட்டமிட்டு அறிமுகம் செய்ய முன்வந்தார்கள் என்பது எனது கருத்து. எமது இளைஞர்கள் இடையே போதைப் பொருட்களை அறிமுகம் செய்யப் பாரிய ஓர் அரசியல் காரணம் பின்னணியில் இருந்து வந்துள்ளது என்பதை எங்கள் மாணவ உலகம் அறிந்து கொள்ள வேண்டும். விநியோகம் செய்பவர்களை எமக்குக் காட்டிக் கொடுக்க மாணவ சமுதாயம் முன்வர வேண்டும். இந்தச் சதியில் இருந்து தப்ப முயற்சிக்க வேண்டும்.

சில அமைச்சர்கள், உயர் பதவிகளில் இருந்தவர்கள், சில காலத்துக்கு முன் அதிகாரத்தில் இருந்த பலர் கூட அண்மைக்காலம் வரையில் போதைப்பொருள் விநியோகத் தொழிலில் மறைமுகமாக ஈடுபட்டிருந்தார்கள் என்று இன்றைய அரசாங்கத்தின் ஆராய்வின் போது தெரிய வந்துள்ளது. செல்வாக்கு மிகுந்தவர்களின் உந்துதலின் பேரில் இந்தப் போதைப்பொருள் விநியோக வியாபாரம் வடமாகாணத்தில் நடந்து வந்துள்ளது என்ற முடிவுக்கு வரலாம். பணம் புரட்டுவதே அவர்கள் குறிக்கோள். இப்பேர்ப்பட்டவர்களுக்கு பணத்துக்கு மேலாக எதுவுமே முக்கியமில்லை. எனவே பொருளாதார காரணங்களுக்காகவும் போதைப் பொருள் விநியோகம் நடைபெற்று வருகின்றது.

**ஒரு காலத்தில் எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி அரசாங்கங்களையே ஆட்டிப் படைத்து வந்துள்ளனர். வெளிநாட்டு உதவியுடன் பெருத்த செலவுடன்தான் அவர்களை அப்போதிருந்த அரசாங்கத்தால் அழிக்க முடிந்தது.**

அதனால் சீரழிவது எமது மாணவ இளம் சந்ததியினர். நன்மை அடைவது பெரும் பணம் படைத்தவர்களும், இடைத்தரகர்களும், மாணவ முகவர்களும். போதைப் பொருள் பாவனைக்குக் காசு பணம் வேண்டும். அதற்கு அடிமையானதும் அதன் கோரப் பிடிக்குள் இருந்து தப்ப முடியாது. ஆகவே பாவிப்பதற்குப் பணம் வேண்டும். இதன் காரணத்தினால் அவர்கள் விநியோகத்தர்களாக மாறுகின்றார்கள். போதைப் பொருட்களை மற்றவர்களுக்கு விற்று தாமும் போதையில் மயங்கி நிற்க துணிகின்றார்கள். இதனால்தான் முதலில் அறிமுகம் செய்தவர்களையும், விநியோகத்தர்களையும் நாம் அடையாளம் காண முடியாது போகின்றது.

புலனுர்வின் நிமித்தம் இதற்குள் மாட்டிக் கொண்டவர்கள் தான் ஈற்றில் சட்டத்தின் பிடிக்குள்ளும் கைது செய்யப்பட்டு கையேற்கப்படுகின்றார்கள். வழக்குகளின் கேட்பின் போது எனக்குத் தெரியவந்த விடயங்கள் இவை. விரைவில் மத்திய அரசாங்கத்துடனும் சேர்ந்து போதைப் பொருள் பாவிப்பை அழிக்க போதிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளிலும் குணமாக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட நாமுள்ளோம்.

மாணவ மாணவியரின் பூரண ஒத்துழைப்பை நாம் எதிர்பார்க்கின்றோம்.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## எத்தனை அதிர்ஷ்டக்காரர் நீங்கள் ?

“ நல்லதே பார், நல்லதே நினை, எல்லாம் நல்லபடியாகவே நடக்கும் ” என்று நம்பியது மட்டுமல்லாமல் அனைவருக்கும் அதை உபதேசிப்பவர் அந்த அறிஞர். இறைவன் தந்திருக்கும் நன்மைகளை சிந்திக்கவும், அவற்றிற்காக நன்றியுடன் இருக்கவும் தன் பிரசாரங்களில் கூறுவார் அவர். இருப்பவற்றிற்காக நன்றியுடன் இருந்தால் மட்டுமே மேலும் நன்மைகள் நம்மிடம் வந்து சேரும் என்று அவர் உறுதியாகச் சொல்வார்.

“ஒரு வெள்ளைத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் நடுவே ஒரு கோடு வரையுங்கள். வலது புறம் பெரிதாய் + குறியிட்டு உங்களுக்கு கிடைத்திருக்கும் நல்ல விஷயங்களை எழுதுங்கள். இடது புறம் –குறியிட்டு உங்களுக்கு இருக்கும் பிரச்சினைகளையும், தீமைகளையும் எழுதுங்கள். உண்மையாக ஆழமாக சிந்திப்பீர்களானால் கண்டிப்பாக வலது புறம் உள்ள பட்டியல் தான் நீண்டு இருக்கும். நீங்கள் எந்த அளவு அதிர்ஷ்டக்காரர் என்பதை அப்போது தான் உங்களால் உணர முடியும் ” என்று ஒரு சொற்பொழிவில் அவர் சொன்னதுடன் அனைவருக்கும் ஒரு வெள்ளைத் தாளைத் தந்து அப்போதே அப்படி எழுதிப் பார்க்கச் சொன்னார்.

அப்படி எழுதியவர்களில் பெரும்பாலானோருக்கு – குறியில் தான் எழுத நிறைய இருந்தது. ஒருசிலர் மட்டுமே + குறியில் நிறைய எழுதி இருந்தார்கள். அவர்களிடம் இப்போது இருக்கும் வாழ்க்கைக்கு இறைவனிடம் நன்றி சொல்லி விட்டுக் கிளம்பச் சொன்னார்.

மீதமுள்ளவர்களில் + குறியில் மிகக் குறைவாக எழுதியவர்களில் ஒருவரைத் தன்னிடம் வரச் சொன்னார். முத்து என்பவர் – குறியில் பெரிய பட்டியல் இட்டிருந்தார். ஆனால் + குறியில் எழுத ஒன்றுமே இல்லை என்று எதுவுமே எழுதாமல் இருந்ததால் அவரே அந்த அறிஞரிடம் போகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அறிஞர் முத்துவிடம் இருந்து அந்தத் தாளை வாங்கிப் பார்த்தார். – குறியில் நுணுக்கி நுணுக்கி நிறைய எழுதி இருந்தார்.

அறிஞர் பேனாவை எடுத்துக் கொண்டு முத்துவிடம் கேட்டார். “உங்கள் மனைவி உங்களைப் பிரிந்து எவ்வளவு காலம் ஆகிறது?”

முத்துவிற்குக் கோபம் வந்து விட்டது. “என் மனைவி என்னை விட்டுப் பிரிந்து விட்டதாக யார் சொன்னது? என்னுடன் தான் இருக்கிறாள். நாங்கள் அன்பாகத் தான் இருக்கிறோம்’

அறிஞர் + பகுதியில் கொட்டை எழுத்தில் எழுதினார். “அன்பான மனைவி உடன் இருக்கிறாள்”

பின் அறிஞர் கேட்டார். “உங்கள் வியாதிக்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டதா?”

முத்து பொறுமையை இழந்தார். “மருந்து கண்டுபிடிக்காத வியாதி எல்லாம் எனக்கு இல்லை..”

அறிஞர் + பகுதியில் எழுதினார். “கொடிய வியாதி இல்லை”

இப்படியே முத்து சிறிதும் எதிர்பார்த்திருக்காத கேள்விகள் சிலவற்றைக் கேட்டு + பகுதியில் எழுதிக் கொண்டு போன அறிஞர் ஒரு கட்டத்தில் நிறுத்தி விட்டுச் சொன்னார். “இவை எல்லாம் சாதாரண நன்மைகள் அல்ல. இவற்றில் ஒன்று இல்லா விட்டாலும் நரக வாழ்க்கை அனுபவிக்க நேர்வது நிச்சயம். அப்படிப்பட்ட நல்ல விஷயங்கள் எல்லாம் உங்கள் வாழ்க்கையில் உங்களுக்குத் தெரியாமலேயே இன்னும் நிறைய இருக்கின்றன. இத்தனைக்கும் சாதாரண நல்ல விஷயங்களுக்கு நான் இன்னும் போகவில்லை. அதெல்லாமும் கூட எழுத ஆரம்பித்தால் உங்களுக்கு + பகுதியில் எழுத இன்னும் பல பக்கங்கள் தேவைப்படும்....”

முத்து அங்கிருந்து போன போது புதிய மனிதராகப் போனார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றவர்கள் + பட்டியலும் அதிகரித்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

முத்துவைப் போலத் தான் பலரும் இருக்கிறோம். எத்தனையோ நன்மைகள் நம்மிடம் இருந்தாலும், நமக்கு நடந்திருந்தாலும் அவற்றை அங்கீகரிக்கக் கூட மறந்து விடுகிறோம். அதில் ஒன்றில் குறைபாடு சிறிது வந்தால் மட்டும் அந்தக் குறைபாட்டை வைத்துத் தான் அதைக் கவனிக்கிறோம். அது அப்போது மட்டுமே பெரிய விஷயமாகி விடுகிறது. இந்தக் குணம் தான் நம்முடைய சந்தோஷமின்மைக்கு முக்கியக் காரணமாக இருக்கிறது.

அடுத்தவரிடம் இருந்து, நம்மிடம் இல்லாத நன்மைகளைக் கவனித்து வருத்தப்படும் அளவுக்கு நாம் அடுத்தவரிடம் இல்லாத, நம்மிடம் இருக்கும் நன்மைகளைக் கவனிக்க முடிந்தால், நாம் எத்தனை பெரிய அதிர்ஷ்டசாலிகள் என்பதைக் கண்டிப்பாக உணர்வோம். உலகில் இருக்கின்ற பிரச்சினைகள் அனைத்தையும் ஒட்டு மொத்தமாகக் கணக்கில் எடுத்துக் கொண்டால் அவற்றில் எத்தனை சிறிய சதவீதம் மட்டும் தான் நமக்கு உள்ளது என்பதும் நமக்குப் புரியும்.

- பட்டியல் அனைவரின் வாழ்க்கையிலும் இருக்கவே இருக்கிறது. அப்படி இல்லாத ஒருவர் இந்த பூமியில் இது வரை பிறந்ததில்லை. இனியும் பிறக்கப் போவதில்லை. எனவே அதற்கு விதிவிலக்காகும் ஆசை யாருக்கும் வேண்டியதில்லை. + பட்டியலை அறிந்திராமல் வாழ்க்கையில் எதுவுமே சரியில்லை என்ற கற்பனை அபிப்பிராயம் இல்லாமல் இருந்தால் போதுமானது.

*- என்.கணேசன்*

# சர்வதேசத்தின் அரசியற் கதவுகள் தமிழ் மக்களுக்காகத் திறக்கப்படுகின்றனவா ?



**கோபி**
*ஒரு பேப்பர்*

ஈழத்தமிழ் மக்கள் இனவழிப்பினை எதிர்கொண்டு பேரவலங்களைச் சந்தித்தபோதெல்லாம் காணாதிருந்த சர்வதேச சமூகம் எனப்படுகிற வல்லாதிக்க நாடுகள் தற்போது அவர்களுக்காகத் வாசலைத் திறந்து வைத்திருப்பதாகவும், முன்னரைப் போலல்லாது தமிழ் மக்களுக்கு சர்வதேச மட்டத்தில் நண்பர்கள் உருவாகியுள்ளதாகவும், மிதவாதத் தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கூறத் தலைப்பட்டிருக்கிறார்கள்.இங்கு முன்னர் என்பது விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலகட்டம் என்பதும், சர்வதேச இராஜந்தந்திரிகள் தமிழ்த்தலைவர்களைச் சந்திக்க கிளிநொச்சிக்கு பயணம் செய்த காலம் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் அப்போதில்லாத வகையில் இப்போது சர்வதேச நண்பர்கள் உருவானது எப்படி? அல்லது அத்தகைய மாயை ஒன்று உருவாகியிருக்கிறதா? இக் கேள்விகளுக்கு பதில் காண்பது அவசியமாகிறது.

விடுதலைப்புலிகள் பலமாக இருந்தபோது சர்வதேசம் எங்களுக்கு ஏன் ஆதரவு வழங்கவில்லை என்பதற்கு தமிழ் மிதவாதிகள் மத்தியில் ஒரு விளக்கமிருக்கிறது. அதாவது விடுதலைப் புலிகள் ஜனநாயக வழியில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை, அவர்கள் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டார்கள். ஆனால் இப்போது நிலைமை முன்பு போலில்லை. தமிழ் அரசியற்தரப்புகள் ஜனநாயகப் பாதையில் நடப்பதாக நம்பப்படுகிறது, அவர்கள் ஆயுத மோதலில் ஈடுபடவில்லை, மனிதவுரிமைகள் மீறப்படவில்லை. எனவே 'அனைத்துலக நீதியின்படி' நடக்கிற வல்லாதிக்க சக்திகள் இப்போது தமிழ்மக்களுக்கு உதவ முன்வந்திருக்கிறார்கள் என்பதே அந்த விளக்கமாகும்.

அண்மையில் தமிழ் அமைப்புகளுக்கும் தென்னாபிரிக்க அரசாங்கத்தில் சர்வதேச உறவுகள் அமைச்சின் துணை அமைச்சராக இருக்கிற Nomaindiya Mfeketo இற்கும் இடையில் சந்திப்புகள் லண்டனில் நடைபெற்றன. இச்சந்திப்பில் கலந்து கொண்ட பிரித்தானியத் தமிழர் பேரவை, அமெரிக்க தமிழர் செயலவை, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், அனைத்துலக ஈழத்தமிழரவை ஆகிய தமிழமைப்புகள் இணைந்து வெளியிட்ட அறிக்கையின் தலைப்பு 'உலக வெளியில் தமிழீழ மக்களின் அரசியல் கதவுகள் திறக்கப்படுகிறது!' என அமைந்திருந்தது. இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டவர்கள் தமது அரசியல் புரிதலின் அடிப்படையில் இவ்வாறான அறிக்கையை தயாரித்தார்களா அல்லது மற்றைய தமிழ் குழுக்களுக்கு போட்டியாக, தமது முக்கியத்தவத்தை மக்களுக்கு உணர்த்த இவ்வாறு படம் காட்டப்பட்டதா என்பது தெரியவில்லை. ஆனால் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட நம்பகமான தரப்பினரிடமிருந்து கிடைக்கும் தகவல்கள் வேறுவிதமாக அமைந்திருந்தன.

முள்ளிவாய்க்கால் அவலங்கள் முடிந்த சில மாதங்களிலேயே தமிழ் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதிலும், அமைப்புகளை அழைத்து சந்திப்பு நடாத்துவதிலும் சில வெளித் தரப்புகள் அக்கறை காட்ட ஆரம்பித்தன. 2009 ஒக்ரோபர் மாதத்தில் சிறிலங்காவில் உள்ள சிறுபான்மைத் தேசிய இன மக்களைப் பிரதிநிதித்துப்படும் கட்சிகளை அழைத்துச் சூரிக் நகரத்தில் சந்திப்பொன்று நடாத்தப்பட்டது. அதே ஆண்டு வியன்னா நகரில் நடைபெற்ற பிறதொரு சந்திப்பிற்கு தமிழ் அமைப்புகள் மாத்திரம் அழைக்கப்பட்டிருந்தன. இக்கூட்டங்களின் நோக்கம் வெவ்வேறு தரப்புகளின் கருத்தறிவதாக இருந்தாலும், அக்கருத்துகளின் அடிப்படையில் ஒரு அரசியற் தீர்விற்கு இட்டுச்செல்வதான செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை .



தமிழ் அமைப்புகளுக்கிடையில் பொதுவான கருத்து அடிப்படையில் புரிந்துணர்வினை ஏற்படுத்தும் முயற்சியில் தாயக-புலம்பெயர் அமைப்புகளுக்கிடையிலான அமர்வுகள் பேர்லினிலிருந்து இயங்கும் Berghof Foundation என்ற அமைப்பின் அனுசரணையில் 2011ம் ஆண்டிலிருந்து பலகட்டங்களாக நடைபெற்றன. இருப்பினும் புரிந்துணர்வு எட்டப்படாமலே இந்த முயற்சியும் முடிவுக்கு வந்தது.



அதன்பின்னர் சிறிலங்கா அரசாங்க தரப்பிற்கும், மேற்குலக ஆதரவுத் தமிழ்த்தரப்புகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் In Transformation Initiative என்ற தென்னாபிரிக்க நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் நடந்து வருகிறது. அதன் முதலாவது சந்திப்பு 2013 செப்ரெம்பரில் சிங்கப்பூரில் நடைபெற்றது. இன்னொரு அமர்வு கடந்த ஏப்பிரல் மாதத்தில் நடைபெற்றது. முன்னைய சந்திப்புகளைப் போலன்றி இது நேரடியாகவே சிறிலங்காவில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதில் வெவ்வேறு தரப்புகளை இணங்க வைப்பதனை மையப்படுத்தியதாக அமைந்திருந்ததாகவும், அங்கு இனப்பிரச்சனைக்கான தீர்வு பற்றிப் பேசப்படவில்லை எனவும் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழ்தரப்பைச் சேர்ந்தவர்கள் மூலம் அறிய முடிகிறது.

இந்த முயற்சிக்கு சமாந்தரமாக தென்னாபிரிக்க அரசாங்கமும் ஒரு முயற்சியில் ஈடுபட்டுவருகிறது. தமது நாட்டில் நடைபெற்றதுபோன்று 'உண்மையும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு' ஒன்றை சிறிலங்காவில் அமைத்து அதன் மூலம் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுவதனை நோக்கமாகக் கொண்டு இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுவருகிறது. வெளித்தலையீடுகளின்றி முழுக்க முழுக்க உள்ளக பொறிமுறையினை ஏற்படுத்தவதனையே இந்த முனைப்பு வலியுறுத்துகிறது என்பதனையும் இந்த முயற்சிக்கு மகிந்த இராஜபக்ச கொள்கையளவில் உடன்பட்டார் என்பதனையும் கவனத்திற் கொண்டால் இதில் தொக்கி நிற்கு அபாயத்தை விளங்கிக்கொள்ள முடியும்.

இதன் தொடர்ச்சியாகவே அண்மையில் லண்டனில் நடைபெற்ற சந்திப்புகளைப் பார்க்கமுடியும். இச் சந்திப்பில் தமிழ் அமைப்புகளை ஒருங்கிணைப்பதனை தென்னாபிரிக்க தரப்பிலிருந்த படையாட்சி என்பவர் மேற்கொண்டிருந்தார். தமிழ் அமைப்புகள் மூன்று குழுக்களாக வெவ்வேறு நேரத்தில் சந்திப்பினை மேற்கொண்டன. ஒரு சந்திப்பில் பாதர் எஸ்.ஜே. இமானுவல் தலைமையிலான குழுவும், மற்றைய சந்திப்பில் பிரித்தானிய தமிழர் பேரவை, அனைத்துலக ஈழத்தமிழரவை, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், அமெரிக்கத் தமிழர் செயலவை ஆகியவற்றின் பிரதிநிதிகளும், மூன்றாவது சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் லண்டன் கிளையினரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்புகளில் கலந்துகொண்ட தென்னாபிரிக்க குழுவின் எதிர்பார்ப்பு என்ன என்பது பற்றி மக்களுக்கு தெளிவு படுத்த முற்படாத மேற்படி தமிழ்க்குழுக்கள், 'வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தமிழின அழிப்பு தீர்மானம் பற்றியும், ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்வு குறித்து தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை எனும் அடிப்படையில் தமிழ் மக்கள் தம்மை தாமே ஆளும் வகையில் அமையவேண்டும்' என்றும் தாம் கூறிய வற்றை மாத்திரம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். இக்கருத்துகள் தென்னாபிரிக்கத் தரப்பினரால் உள்ளவாங்கப்பட்டனவா என்பது பற்றியோ, தென்னாபிரிக்கத் தரப்பினர் பிரேரித்த உள்ளக பொறிமுறைக்கு தாம் நிபந்தனைகளுடன் இணங்கிக் கொண்டமை பற்றியோ குறிப்புகள் எதனையும் இவ்வறிக்கையில் காணமுடியவில்லை.

இச்சந்திப்புகளில் கலந்து கொண்ட சிலர் வழங்கிய தகவல்களின்படி, தென்னாபிரிக்காவின் இம்முயற்சி, சிறிலங்கா அரசாங்கத்தினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் வேண்டுகோளின்படி மேற்கொள்ளப்படுவதாகவும் அதன் முன்னேற்றம் தொடர்பாக இந்தியாவிற்கு தொடர்ந்து அறிவிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக தமிழ் அமைப்புகளுக்கு அறிவுறுத்துதல், சிறிலங்காவில் உள்ளக கட்டமைப்புகளை சீரமைப்பதன் மூலம் நீடித்த சமாதானத்தை ஏற்படுத்துதலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துதல், உள்ளக பொறிமுறையிலான நல்லிணக்க முயற்சிகளில் டயஸ்போறா குழுக்களை பங்கேற்க வைப்பது என்பவையே தென்னாபிரிக்க தரப்பின் எதிர்பார்ப்புகளாக உள்ளன. இதன் அடுத்த கட்டமாக புலம்பெயர் தமிழ் அமைப்புகளிடையே ஒரு குறைந்த பட்ச அளவிலான புரிந்துணர்வினை ஏற்படுத்தி அவற்றின் பிரதிநிதிகளுக்கு நல்லிணக்க முயற்சி தொடர்பான பயிற்சி பட்டறைகளை தென்னாபிரிக்காவில் நடாத்தவிருப்பதாகவும் இச்சந்திப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிற்கும், எஸ்.ஜே. இமானுவல் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று ஜூன் 6ம் திகதி சனிக்கிழமை லண்டனில் நடைபெறவிருப்பதாகவும். சிங்கப்பூர் சந்திப்புகளின் தொடர்ச்சியாக நடைபெறும் இச் சந்திப்பில் எரிக்சொல்ஹெய்ம், சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொள்ளவிருப்பதாகவும் தெரியவருகிறது. இன்னொரு சந்திப்பு மேற்படி குழுவினருக்கும் சந்திரிகாவிற்கும் இடையில் துபாயில் நடைபெறவிருப்பதாகவும் உறுதிப்படுத்த முடியாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

மைத்திரி-ரணில் அரசாங்கத்துடன் இதயங்களால் இணைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதன் தோழமை அமைப்பான எஸ்.ஜே. இமானுவல் குழுவும் வெளிநாட்டுத் தலைநகரங்களில் புதிதாக எதைப் பேசப்போகிறார்கள் என்ற கேள்வி எழலாம். அவர்களை எதனைப் பேசினாலும் விபரங்கள் இரகசியமாகவே வைத்திருக்கப்படும். வரும் செப்ரெம்பரில் வெளிவர இருக்கும் ஐ.நா. மனிதவுரிமை அறிக்கை தொடர்பில் சிறிலங்கா அரசிற்கு உதவுவது தொடர்பாகவே இப்பேச்சுவார்த்தை அமையவிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் ஊகம் தெரிவிக்கின்றன. சுருக்கமாகக் கூறுவதனால் பலத்த பிரயத்தனங்களுக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்ட 'ஆட்சி மாற்றம்' என்ற படகை மற்றைய தரப்புகள் கவிழ்க்காதிருப்பதனை உறுதி செய்வதற்காகவே இப்பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றனவே தவிர தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைக்கு தீர்வு காண்பது இங்கு முக்கியம் பெறுவதாகத் தெரியவில்லை.


## ஒரு பேப்பர்
**கிடைக்குமிடங்கள்**

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ................ 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ........... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Selvarajah Gold house 020 8767 3795
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran .............. 020 8540 1500
Suvai Aruvi............ 020 8543 6266
Adchaya ................ 020 8540 8192

**Croydon**
Best Foods............. 020 8684 6269
Haran Bros............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video........... 020 8664 8351
Spice Land............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................. 020 8333 8680
Eelam Shop ........... 020 8690 6545
Katpagam .............. 020 8694 8810
AJ Video ................ 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS Supermarket ... 020 8297 9432
Best Food .............. 020 8692 9811

**Eastham**
Seelans ................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food .............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033
Anjappar ................ 020 8552 1155

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan .................. 020 8514 1744
Angels ................... 020 8553 0490
Sri store ltd ........... 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..................... 020 8805 9529
Nagapoosani Temple 020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans .............. 020 7609 1912
Prabas ................... 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
North Harrow C&C .. 020 8863 6160
Prabhas ................. 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.............. 020 8900 0100
Vahizan Disc.......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Abi Fast Food ......... 0208 813 9494
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C ......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret .......... 020 8571 4434

britishtamilsathletics
**Athletics Meet - 2015**

ATTACH YOUR PHOTO (PASSPORT SIZE)

**Official Use only**
House Code
Membership No.
Checked by

## Application Form

First Name ..........
Surname ..........
Date of Birth ..........
Address ..........
..........
Telephone ..........
E Mail ..........
Gender ☐ Male ☐ Female
Age as at 31.08.2015 ☐ Under 8 ☐ Under 10 ☐ Under 12 ☐ Under 14 ☐ Under 16 ☐ Under 19
☐ Under 25 ☐ Under 30 ☐ Under 35 ☐ Under 40 ☐ Under 45 ☐ Under 50 ☐ Over 50

**Please tick (x) the events you intend to participate. Refer the general rules before fill this section.**

| Track Events | U 8 | U10 | U12 | U14 | U16 | U19 | U25 | U30 | U35 | U40 | U45 | U50 | O50 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 60m | | | | | | | | | | | | | |
| 100m | | | | | | | | | | | | | |
| 200m | | | | | | | | | | | | | |
| 400m | | | | | | | | | | | | | |
| 800m | | | | | | | | | | | | | |
| 1500m | | | | | | | | | | | | | |
| Hurdles Race 60m | | | | | | | | | | | | | |
| Hurdles Race 110m | | | | | | | | | | | | | |
| **Field Events** | | | | | | | | | | | | | |
| Shot Putt | | | | | | | | | | | | | |
| Javelin | | | | | | | | | | | | | |
| Disc Throw | | | | | | | | | | | | | |
| Long Jump | | | | | | | | | | | | | |
| High Jump | | | | | | | | | | | | | |
| **Pool Events** | | | | | | | | | | | | | |
| Swimming (Free Style) | | | | | | | | | | | | | |
| Swimming (Back Stroke) | | | | | | | | | | | | | |
| Swimming (Adult) | | | | | | | | | | | | | |
| **Children Events** | | | | | | | | | | | | | |
| Sack Race | | | | | | | | | | | | | |
| Spoon Race | | | | | | | | | | | | | |
| **Less Able Events** | | | | | | | | | | | | | |
| Wheel Chair | | | | | | | | | | | | | |

If participant is less than 18 years of age, a parent or legal guardian also must read the rules, terms and conditions and sign this form.
☐ I have read and subscribe the Assumption of risk and personal responsibility agreement fully understand the general rules, terms and conditions of the British Tamils Athletics meet 2015.
☐ I have attached proof of age document, photo and appropriate fees.
☐ I can confirm that, I will wear the appropriate sports uniform when I do the sports at the BTSC events.

Participant's Name : ________ Signature : ________ Date : ________
Participant's Parent or Legal Guardian Name : ________ Signature : ________ Date : ________
(If less than 18 years of age)
☐ Note: This year BTSC have made regional re arrangement in House representation and please visit our website or contact your house manager for more details.

I have checked the above applicant's details and are correct and true.
House Leader's / Manager's Signature : .......... Date : ..........

Name of the affiliated organisation : ..........

The British Tamil Sports Council (BTSC) formed in 2008 to promote sports and cultural awareness amongst the Tamil Community in the whole of Britain. BTSC is a vibrant body by working closely with a variety of associations, societies, schools and clubs of Tamils in the United Kingdom. BTSC's prime objective is to unite all Tamils through sports and leisure activities in an educative and fascinating way to keep them active, positive and righteous. BTSC have been very fortunate to be joined by the British Tamil Chamber of Commerce(BTCC) on the Grand Final Day. BTCC will work alongside us being the 'Trade Promoters' and arranging a number of Tamil businesses to exhibit and sell their products. As part of this BTCC they will cover the catering and wholesale/retail of food and groceries. There will also be a variety of sarees and clothes on display as well as various professional services. All products sold or marketed will be available at promotional discounted prices. For further information about the event please contact us on 07809561922.






# “தமிழ் மக்கள் ஒரு தேசம் என்ற நிலைப்பாட்டை வலுவிழக்கச் செய்யவேண்டாம்”



## தமிழ் அமைப்புகளுக்கு பிரதமர் உருத்திரகுமாரன் வேண்டுகோள்

சிறிலங்கா அரசுடன் பேசிப் பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியும் எனக் கருதி பேச்சுக்களில் ஈடுபடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களிடமும் பாதர் எஸ்.ஜே. இமானுவலின் உலகத்தமிழர் பேரவையிடமும் இவ் வேண்டுகோளை பிரதமர் உருத்திரகுமாரன் முன்வைத்துள்ளார். சிறிலங்கா அரசின் மீதான தமிழ் மக்களின் தார்மீகக் கோபத்தை தற்போதைய அரசாங்கம் தர முயலும் அற்ப சலுகைகளைக் காட்டித் தணிப்பதற்கு முயற்சிக்கக் கூடாது என்பதே எமது வேண்டுகோள் என கடந்தமாதம் ஜேர்மனியில் நடந்து முடிந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வின் நிறைவு நாள் உரையில் காணொலி வாயிலாக உரையாற்றும்போது அவர் தெரிவித்தார். அவரது உரையில் மேலும் தெரிவிக்கப்படதாவது:

மக்களின் தார்மீகக் கோபமே எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு நம்தேசம் கொண்டிருக்கும் வலுவான அடிப்படையாகும். இங்கு மக்களின் தார்மீகக் கோபம் நிலைப்பது நன்லிணக்கத்துக்கு இடையூறானது எனச் சிலர் கருதக் கூடும். எம்மைப் பொறுத்த வரையில் நாம் அவ்வாறு பார்க்கவில்லை. நீங்கள் பேச்சு வார்த்தை முயற்சிகளில் அடையும் தோல்விகள் எங்கள் மக்களின் தார்மீகக் கோபத்தை இன்னும் வலுப்படுத்தும் எனவே நாம் நம்புகிறோம்.

நாம் சிங்கள தேசத்துடனான நல்லிணக்கத்துக்கு எதிரானவர்களல்ல. உண்மையில் அதனை நாம் பெரிதும் விரும்புகிறோம். ஆனால் இவ் நல்லிணக்கம் தமிழீழ மக்கள் ஒரு சுதந்திரமாக வாழ்வுக்குரிய உரிமை கொண்ட மக்கள் என்ற நிலையில் இருந்து எட்டப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. ஒடுக்கப்பட்டவர்களாக, சமத்துவம் அற்றவர்களாக, எமது பாதுகாப்பை நாமே தீர்மானிக்க முடியாதவர்களாக, எமது பிரதேசங்களைப் பாதுகாத்து மேம்பாடு அடையச் செய்ய முடியாதவர்களாக, ஆக்கிரமிப்பு சிங்கள இராணுவத்தின் மத்தியில் வாழும் மக்களாக, சிங்கள அரசின் இனஅழிப்புக்கு உள்ளாகும் மக்களாக, எமது விடுதலைக்காக தம் உயிர்களை ஈகம் செய்த போராளிகளுக்கு வணக்கம் செலுத்த முடியாதவர்களாக, இனஅழிப்பு யுத்தத்தில் தமது உயிர்களை இழந்த உறவுகளை, மக்களை சுதந்திரமாக நினைவுகூர முடியாதவர்களாக, அடிமைப்படுத்தபட்ட மக்களாக நாமிருக்கும்வரை எந்தவித நல்லிணக்கமும் உருவாக முடியும் என நாம் கருதவில்லை.

எமது மக்களின் நெஞ்சங்களில் கனலும் நெருப்பு நாம் விடுதலை அடைந்த மக்களாக, எமது அரசியல் தலைவிதியை நாமே தீர்மானித்து வாழும் ஓர் அரசியல் ஏற்பாடு எட்டப்படும் போதே தணியும். அப்போதுதான் உண்மையான நல்லிணக்கம் ஏற்படுவதற்கான சூழல் ஏற்படும். இதுவே நல்லிணக்கம் தொடர்பாக எமது நிலைப்பாடு.

இவ் அடிப்படையில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்திட்டங்கள் பின்வரும் இலக்குகளை உள்ளடக்கியவாறு தொடரும் என பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

- தமிழீழ மக்களது தேசத் தகைமையும் தாயகப்பிரதேசமும் அங்கீகரிக்கப்பட்டு, தமிழீழ மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய மக்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு அனைத்துலக அங்கீகாரத்தைப் பெற உழைத்தல்.
- சிறிலங்கா அரசின் தொடரும் இன அழிப்புத் திட்டத்துக்கு எதிராக வழங்கப்படக்கூடிய பரிகார நீதியாக இன அழிப்புக்கெதிரான சட்டத்தின்கீழ் சுதந்திரமும் இறையாண்மையுமுள்ள தமிழீழத் தனியரசே முழுமையான தீர்வாக அமையும் எனும் நிலைப்பாட்டுக்கு அனைத்துலக அங்கீகாரத்பைப் பெற உழைத்தல்.
- இனஅழிப்பைத் தடுப்பதற்குரிய பரிகார நீதி என்பதன் அடிப்படையிலும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தனிநாட்டு நிலைப்பாட்டினையும் உள்ளடக்கிய மக்கள் பொதுவாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்படுவதற்காக உழைத்தல்.
- சிறிலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பு நிறுத்த உழைத்தல்.
- ஈழத் தமிழர் தேசத்தை அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுத் தளங்களில் வலுப்படுத்த உழைத்தல்.
- உலகில் வாரும் தமிழ் மக்களை ஒருங்கிணைத்துத் தமிழ் மக்களை உலகில் ஒரு வலுமையமாக ஆக்க உழைத்தல்.

இவ் அடிப்படையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்திட்டங்கள் பின்வரும் இலக்குகளை உள்ளடக்கியவாறு எட்டு வகைகளில் தொடரும்.

**1.** தமிழீழ மக்களது தேசத் தகைமையும் தாயகப் பிரதேசமும் அங்கீகரிக்கப்பட்டு, தமிழீழ மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய மக்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு அனைத்துலக அங்கீகாரத்பைப் பெற உழைத்தல்.

**2.** சிறிலங்கா அரசின் தொடரும் இன அழிப்புத் திட்டத்துக்கு எதிராக வழங்கப்படக்கூடிய பரிகார நீதியாக இன அழிப்புக்கெதிரான சட்டத்தின்கீழ் சுதந்திரமும் இறையாண்மையுமுள்ள தமிழீழத் தனியரசே முழுமையான தீர்வாக அமையும் எனும் நிலைப்பாட்டுக்கு அனைத்துலக அங்கீகாரத்தைப் பெற உழைத்தல்.

**3.** இனஅழிப்பைத் தடுப்பதற்குரிய பரிகாரநீதி என்பதன் அடிப்படையிலும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தனிநாட்டு நிலைப்பாட்டினையும் உள்ளடக்கிய மக்கள் பொதுவாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்படுவதற்காக உழைத்தல்.

**4.** சிறிலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பு நிறுத்த உழைத்தல்.

**5.** ஈழத் தமிழர் தேசத்தை அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுத் தளங்களில் வலுப்படுத்த உழைத்தல்.

**6.** உலகில் வாரும் தமிழ் மக்களை ஒருங்கிணைத்துத் தமிழ் மக்களை உலகில் ஒரு வலுமையமாக ஆக்க உழைத்தல்.

இந்த இலக்குகளை அடைய நாம் வகுத்துள்ள செயற்றிட்டங்கள் குறித்து இம் அமர்விலும் கூடி விவாதித்துள்ளோம்.

ஒரு மில்லியன் கையெழுத்து இயக்கம், Yes to Referendum அரசியல் இயக்கம், நிலக் கபளீகர எதிர்ப்பியக்கம், பதிப்பகம், ஆவணக்காப்பகம், தமிழ்க் கல்வி மேம்பாட்டு மதியுரைப்பீடம், உலகத் தமிழர் பல்கலைக் கழகம், மாவீரர் நினைவாலயம், இந்தியாவில் தோழமை மையபணிமனைகள், நல்லெண்ணத் தூதுவர்கள், மாவீரர் போராளிகள் குடும்ப நலன் பேணும் மையங்கள், தாயகத்தில் சுயதொழில் வளர்ச்சித் திட்டங்கள், பசுமையைக் காப்போம் - சூழல் விழிப்புணர்வு இயக்கம், உள்ளடங்கலாக 15 செயற்திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட வகையில் அமையும். இப் பெரும் செயற்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்த நாம் திட சங்கற்பம் பூண்டுள்ளதையும் இவ் அமர்வு வெளிப்படுத்தியிருக்கிறது.

## முள்ளிவாய்க்கால் காற்றிடை வாழும் உயிர் பேசுது..

உலோகத் துகள்களிடை
உடல் துகள்களாகி சிதறி நிற்க
காற்றுக் கூட அவதிப் பட்டது
அகதியாகி
சன்னங்களிடை தன் இடம் பிடிக்க.

இட நெருக்கடியில்
உயிர்கள் உரசிக் கொண்டன
செல்லுமிடம் சொர்க்கமோ நரகமோ
திசைகள் தெரியாமல்
சன்னங்களில் அவை படுத்துறங்கின.

ஊழியக் காலமோ கலி காலமோ
அல்ல அல்ல..
தமிழர் அழிப்புக் காலமாய்
அது நிகழ்ந்து கொண்டிருந்தது..!

சாத்திரங்கள் பொய்த்து வீழ்ந்தன
சதா மரண ஓலங்கள்
உலகை ஆளும் அலைகளின்
ஊளைகளை தாண்ட வழியின்றி
களைத்தே மௌனித்தன.
உலக மானுட மனச்சாட்சி
கண்ணை மூடி மூச்சிழுத்துக்
கிடந்தது...!
மீண்டும்.. காற்றிடை வாழும்
உயிர் பேசிக் கொண்டது..

அந்தக் கொடுமையின்
தாண்டவம் கண்டு
ஆண்டுகள் ஆறு கடந்தாயிற்று..
ஆன்ம அமைதிக்கு கூட
அங்கு வழியில்லை.!

உரிமை தேடிய
சக மனித அழிவினில்
சரித்திரம் படைத்திட்டதாய்
அமைதி காத்திட்டதாய்
சமாதானம் சாந்தி அடைந்திட்டதாய்
எழும் சலசலப்புகள் அடங்கவில்லை.

புழுதி கிளம்பும் மண்ணில்
எழுந்து நிற்கும்
வெற்றிக் கோபுரங்களின் உச்சியில்
பேய்கள் வாழ்வது தெரியாமல்
உலகம் உறங்கிக் கொள்கிறது.!
கண்ணிமைப் பொழுதினில்
அழிந்து போன தன் உடலைத் தேடும்
உயிர்கள் அங்கு..

தன் உடல் அழிப்புக்கான
நீதியைத் தேடி பேய்களாகி
அந்தக் கோபுரங்களில்
வீடு கட்டி வாழ்கின்றன..
எத்தனை கண்கள் காணும் அவை...!

– நெடுக்காலபோவான் (யாழில்)

CTN Travels
நம்பிக்கை | நாணயம் துரிதமான சேவை
“மிக மலிவான விலையில் விமான பயணச்சீட்டுக்களை
தமிழிலும் தொடர்பு கொண்டு பெற்றிட நாடுங்கள்”
We are specialist Flight & Holiday agents
For
Srilanka, India, Australia, USA,
Canada, Eroupe, and Cyprus
We have special Fares in July For all destinations
You can speak in Tamil when booking with us
Contact us
078 139 691 92
074 326 073 98
020 869 429 14
Fax – 0208 694 0058
Web – www.ctntravel.co.uk
info@ctntravel.co.uk | admin@mill2000.co.uk
Opening Time : Mon to Sat - 8am to 6pm
Ticket booking : Mon to Sun - 8am to 8pm
247, Lewisham Way
London
(opposite to lewisham college) SE4 1XF

# "அவையள் கிளாஸ்ல சந்தோசமா படிக்க மாட்டினம்"



செல்வராஜா ராஜசேகர்

"ஒன்டு அப்பா இல்ல, ஒன்டு அம்மா இல்ல, ஒன்று ரெண்டு பேருமே இல்ல. கிட்டத்தட்ட 90 பிள்ளைகள் தாயை அல்லது தந்தையை இழந்திருக்காங்க. அவர்களின்ர படிப்பு பொறுத்த வரையில சரியான பிரச்சினை" என்கிறார் முல்லைத் தீவில் உள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியை.

முதலாம் தரத்திலிருந்து 5ஆவது வரை இந்தப் பாடசாலையில் 540 பிள்ளைகள் படித்து வருகிறார்கள். இங்கு படிக்கின்ற அனைவரும் இறுதி யுத்தம் இடம்பெற்ற போது அதை நேரடியாக அனுபவித்தவர்களாகவும் கருவில் இருந்து உணர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். சிரித்து, பேசி அவர்கள் விளையாடுவதை என்னால் பார்க்கமுடிந்தாலும் அவர்களிடம் உளரீதியான பிரச்சினைகள் இருப்பதாக ஆசிரியர் கூறுகிறார்.

அரச அதிகாரிகள் உயர் மட்டத்தில் அனுமதி பெறாமல் ஊடகங்களுக்கு பேசமுடியாது என ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதாலும் இன்னும் சில காரணங்களாலும் தன்னுடைய பெயரைக் குறிப்பிட வேண்டாம் என அவர் கேட்டுக் கொண்டார். அவரை சாந்தி என நாம் அழைப்போம்.

"அவையல் கிளாஸ்ல சந்தோசமா படிக்க மாட்டினம். தேவையான உபகரணங்கள் கொண்டுவர மாட்டினம். திடுக்கென்டு பயப்படுவினம். ஒருத்தன் இருக்கான் இயர் வன்ல. குடுக்கிற வேலையெல்லாம் அழகா செய்வான். ஆனா அழுதுகொண்டே இருப்பான். எப்ப போவன் வீட்ட? அப்பா எப்ப வருவார்?? உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்கு படிப்பிப்பதில் உள்ள கஷ்டத்தை அவரது முகத்தில் காணமுடிகிறது.

யுத்தத்தால் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ள இந்தப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு சிகிச்சை வழங்க இதுவரை அரசத் தரப்பிலிருந்து எவரும் வந்திருக்கவில்லை. குறைந்தபட்சம் ஆசிரியர்களுக்கு பயிற்சி கூட வழங்கப்பட்டிருக்கவில்லை.

"டிபார்ட்மென்ட்ல இருந்து சில அதிகாரிகள் வருவினம். உளவள சிகிச்சைக்கென்று யாரும் வாரதில்ல. அப்படியான பிள்ளைகள டீச்சர்ஸ் தான் கவனத்தில எடுத்து படிச்சி கொடுக்கினம். அரசாங்கம் எல்லா ஸ்கூலுக்கும் செய்யிறத தான் இங்கயும் செய்யினம். ப்ரீ புக்ஸ், யுனிபோர்ம். விசேடமா எதுவும் இல்ல. இந்த முறை shoes வந்தது" கதவருகே பிள்ளைகள் நிறைந்து சிரித்து பேசியவாறு பார்த்துக்கொண்டிருக்க சாந்தி எழுந்து அவர்களை அனுப்பி வைக்கிறார். கதிரையில் ஆசிரியை வந்து உட்கார, மீண்டும் சிரிப்புச் சத்தம். தொடர்ந்தார்,

"இயர் வன்ல டீச்சர் இல்லாதபோது கிளாஸ் எடுத்தனான். காலையில என்ன ஒலிகள் கேட்கும்? என்று கேட்டனான். பிள்ள படாரென்று சொல்லிச்சி, அம்மாவும் அப்பாவும் சண்டபிடிப்பாங்களாம். இப்படித்தான் குடும்ப சூழ்நிலைகள் இருக்கு. அநேகமான பிள்ளைகள் மன அழுத்தத்தோடுதான் இருக்குதுகள். எல்லா டீச்சர்ஸும் இத எதிர்நோக்கினம். கருவுல இருக்கேக்கயே சண்டகள சந்திச்ச ஆக்கள்தானே" என்று கூறுகிறார் அவர்.

பிள்ளைகளின் பெரும்பாலான பெற்றோர் இராணுவத்தின் சிவில் பாதுகாப்புப் பிரிவினால் நடத்தப்படும் விவசாயம், கட்டுமானம், கால் நடை வளர்ப்பு போன்றவற்றில் வேலை பார்க்கச் செல்கின்றனர். காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை அங்கு வேலை. அவர்களுக்கு பிள்ளைகளின் படிப்பில் அக்கறை இல்லை எனக் கூறுகிறார் ஆசிரியர்.

" ஒரு சிலர்ட அம்மா, அப்பா ரெண்டு பேரும் சி.எஸ்.டியில (சிவில் பாதுகாப்புப் பிரிவு) வேலை செய்யினம். மோர்னிங் 8 மணிக்கு போய் ஈவினிங் 5 மணிக்குத்தான் வருவினம். பிள்ளைகள் மீது அவங்களும் இப்ப அக்கறை இல்ல.

இயர் 4க்கு மீடிங் வச்சனாங்கள். 90 பிள்ளைகளுக்கு 15 பேர்தான் வந்திருந்தினம். ஒன்று அக்கறையில்ல, மற்றது சி.எஸ்.டிக்குல வேலைக்கு போனா வர முடியாது. ஒரு சிலர் கேட்டு வந்து போவினம். ஒரு சிலர் எதுக்கு போவினம் என்று அக்கறையில்லாமல் இருக்கினம். அவைக்கு காசு முக்கியமா போயிட்டு. பிள்ளைகள் பாடசாலைக்கு போனா போதும் என்ட மனநிலையில இருக்காங்க" எனத் தெரிவிக்கும் சாந்தி,

" முன்ன (யுத்தம் முடிவடைய முன்) மீட்டிங் என்டா பேரன்ட்ஸ் நிரம்பி வழியினம். யுத்தத்துக்கு பிறகுதான் இந்த நிலம. முன்ன இயக்கம் இருந்தவ. அவங்க பிள்ளைகளின்ர படிப்பு விஷயத்தில இன்ரஸ்டா இருந்தவ. அவங்களும் கல்விய ஊக்குவித்தவங்க. அப்போ கட்டுப்பாடு, ஒழுங்குனு ஒன்று இருந்தது. இப்போ ப்ரீயாவே விட்டாச்சி. சி.எஸ்.டில இருபதாயிரம், இருபத்தைந்தாயிரம் மாதிரி சம்பளம் வாங்கினம். பிள்ளைகள த்ரீவில்ல அனுப்பினம். அவ்வளவுதான்? கன்னத்தில் கை வைத்து பெருமூச்சு விட்டார் சாந்தி.

**முன்ன இயக்கம் இருந்தவ. அவங்க பிள்ளைகளின்ர படிப்பு விஷயத்தில இன்ரஸ்டா இருந்தவ. அவங்களும் கல்விய ஊக்குவித்தவங்க. அப்போ கட்டுப்பாடு, ஒழுங்குனு ஒன்று இருந்தது. இப்போ ப்ரீயாவே விட்டாச்சி.**

யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை யுத்தத்தால் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, விசேடமாக சிறுவர்களுக்கு உளவள சிசிச்சை வழங்கப்பட்டிருக்கவில்லை. முயற்சி எடுக்கப்பட்டிருந்தும் கடந்த அரசு தடுத்ததாக மக்கள் கூறுகிறார்கள். வடக்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட வட மாகாண சபையும் கூட இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதே அவர்களது கவலை. ஆகவே, வட மாகாண சபையோ, மத்திய அரசோ இல்லையென்றால் இரு நிர்வாகமும் சேர்ந்தோ பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளவள சிகிச்சையை வழங்க முன்வரவேண்டும்.

*- நன்றி. மாற்றம்*

WANTED

Mitcham and surrounding areas

Office Administrator



* Good written & communication skill in English
* Computer knowledge
* Basic accounting knowledge

Drivers

* Full UK Driving Licence
* Work 5/7 Days in a week



மிட்சம் மற்றும் அருகாமையில் இருப்பவர்கள் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

Easyshipping

Unit 15, Liongate Enterprise Park
80 Morden Road, Mitcham, Surrey, CR4 4NY

Call us : 020 8648 9092



# வித்தியாவின் மரணத்தின் பின்னரான சிங்கள தேசத்தின் நிகழ்ச்சி நிரல்



**| ச.பா.நிர்மானுசன்**

பல ஆயிரக்கணக்கான பாலியல் வல்லுறவின் கொடூரங்களையும், அது சுமந்து நிற்கும் பெரும் வலிகளையும் தமிழர் தேசம் கடந்து வந்திருக்கிறது. இவற்றில் பலவற்றிற்கு சோகத்தைக் கூட வெளிப்படுத்த முடியாத உரிமை மறுப்பு இடம்பெற்றது. நூற்றுக்கணக்கானவை வெறும் துயர் பகிர்வோடு நிறைவுற்றன. கிரிசாந்தி, கோணேஸ்வரி மற்றும் ரஜனி போன்றவர்கள், குறிப்பாக கிரிசாந்தி மீதான சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படைகளின் கூட்டு பாலியல் பலாத்காரம் சர்வதேச அளவில் பேசப்பட்டும் கூட, மக்கள் போராட்டத்திற்கான ஒரு உடனடியானதும் நேரடியானதுமான தோற்றுவாயாக மாற்றம் பெற்றிருக்கவில்லை.

ஆயினும், புங்குடுதீவில் சிவலோகநாதன் வித்தியா என்னும் பாடசாலை மாணவிக்கு பெரும் கொடூரம் நிகழ்ந்த சம்பவத்துக்குப் பின்னர் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் நகர்வுகள் அரசியல் நோக்கம் உடையதாக காணப்படுகிறது. இந்த அரசியல் நோக்கம் என்பது தமிழர் தேசத்து அரசியலை ஒரு முடக்க நிலைக்குள் வைத்திருக்கும் நோக்கோடு, நேர்த்தியாக திட்டமிடப்பட்டு கூட்டிணைக்கப்பட்டுள்ளதாகவே படுகொலைக்குப் பின்னர் இடம் பெறும் சம்பவங்கள் எடுத்துக்காட்டுவதோடு, வித்தியாவின் குடும்பத்துக்கு நீதி கிடைப்பது இரண்டாம்பட்சமாக மாறியுள்ளது.

சிறீலங்காவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தோடு தமிழ் மக்களுக்கான நீதியை வேண்டி முன்னெடுக்கப்பட்ட சர்வதேச விசாரணையை இல்லாமற் செய்யும் நடவடிக்கைகள் சிறீலங்கா அரசாங்கத்தாலும் அவர்களுக்கு ஆதரவான சக்திகளாலும் மேற்கொள்ளப்பட்டது. இதனை முறியடிக்கும் நோக்கோடு தமிழின அழிப்புக்கு நீதி வேண்டும் போராட்டங்களும் நகர்வுகளும் தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாகவும் பரவலாகவும் முன்னெடுக்கப்பட்டது. இது சிறீலங்கா அரசாங்கத்துக்கு நெருக்கடியை கொடுத்தது. ஆதலால், இத்தகைய போராட்டங்களை முடக்குவதற்கு தருணம் பார்த்து காத்திருந்தன சிறீலங்கா ஆட்சிபீடமும் அதன் கட்டமைப்புகளும். அதேவேளை, மகிந்த ராஜபக்ச அரசாங்கம் போன்று தந்திரோபாயமற்று செயற்பட்டு கண்டனங்களுக்கு உள்ளாகவும் இன்றைய ஆட்சிபீடம் விரும்பவில்லை. அத்துடன், மகிந்த ராஜபக்ச அரசாங்கத்திலிருந்து வேறுபட்ட அரசாங்கம் என்பதை வெளிக்காட்ட வேண்டிய கட்டாய தேவையும் இந்த அரசாங்கத்திற்கு உண்டு. இல்லையெனில், மாற்றம் என்பதற்கான அர்த்தமே இல்லாமல் போய்விடும். ஆதலால், தீவிரத்தன்மை குறைந்த விடயங்களில் முன்னேற்றங்களை காட்டவும் முற்படுகிறது. அத்துடன், சனநாயகத்தை மீள நிலைநாட்டுகிறோம். கருத்து சுதந்திரம், ஊடாக சுதந்திரம் மற்றும் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் போன்றவற்றை பேணிப் பாதுகாப்போம் என்ற தமது ஆட்சி கைப்பற்றலுக்கான கோசங்கள் விமர்சனத்துக்குள்ளாவதையும் சிறீலங்கா ஆட்சிபீடம் தவிர்த்தது.

அதேவேளை, தமிழர் தாயகத்தில் இடம் பெறும் ஒவ்வொரு சம்பவங்களின் ஊடாகவும் எவ்வாறு தமிழர் தேசத்தைப் பலவீனப்படுத்தலாம், சிங்கள தேசத்தை பலப்படுத்தலாம் என்ற கோணத்திலேயே சிந்தித்து, திட்டமிட்டு செயலாற்றிய சிறீலங்காவின் கொள்கை வகுப்பு, திட்டமிடல் பிரிவு வித்தியாவுக்கு நீதி வேண்டி எழுந்த மக்களின் நியாயமான போராட்டத்தை தமது தந்திரோபாய நகர்வுகளால் வன்முறையாக மாற்றியிருக்கிறது. சிறீலங்கா இராணுவ புலனாய்வுத் துறையால் இயக்கப்படும் மூன்று துணை இராணுவ குழுக்கள் வன்முறையின் கருவிகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. சிறீலங்கா இராணுவ புலனாய்வுத் துறையின் நெறிப்படுத்தலில் குறித்த மூன்று துணை இராணுவக் குழுக்களே வன்முறையில் ஈடுபட்டதோடு, வித்தியாவுக்கு இடம் பெற்ற கொடூரத்தால் ஆத்திரமடைந்திருந்த சில அப்பாவி இளைஞர்களை தமது பொறிக்குள் வீழ்த்தி வன்முறையை கையிலெடுப்பதற்கு தூண்டியுள்ளன.

நீதித்துறையும் காவல்துறையும் தாக்குதலுக்குள்ளானமை மற்றும் வன்முறைகள் அசாதாரண சூழலை தோற்றுவித்தன் பின்னணியில் மேற்கூறிய இந்த கூட்டிணைவே செயற்பட்டது.

ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைகளை காரணம் காட்டி நீதி கோரி சுன்னாகத்தில் இடம்பெறவிருந்த போராட்டத்திற்கு பொலிசாரின் வேண்டுகோளின் படி நீதிமன்றம் தடைவிதித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை, பருத்தித்துறை நீதிமன்றமோ பொலிசாரின் வேண்டுகோளுக்கு மாறாக, சனநாயக உரிமை என்ற அடிப்படையில் வடமராட்சியில் இடம்பெறவிருந்த போராட்டத்திற்கு அனுமதி வழங்கியதாக செய்திகள் வெளிவந்துள்ளன. ஆயினும், போராட்டத்தின் ஏற்பாட்டாளர்களிடம் சென்ற பொலீசார், போராட்டத்தின் போது ஏதாவது வன்முறை வெடித்தால், ஏற்பாட்டாளர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என அச்சுறுத்தியதால் வடமராட்சியில் இடம்பெறவிருந்த போராட்டத்தை கைவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், வன்முறையை ஏவிவிடக்கூடிய சக்திகள் பொலீசாரின் நடவடிக்கைகள் மீதும் செல்வாக்கு செலுத்தக் கூடியவர்களாக இருப்பதே இதற்கு காரணம்.

ஆக மொத்தத்தில், யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளைக் காரணம் காட்டி, தமிழ் மக்களின் எதிர்கால நியாயமான, சனநாயக ரீதியிலான அமைதி வழிப் போராட்டங்களை முடக்கும் நடவடிக்கைகளை சிறீலங்கா அரசாங்கமும் அதன் கட்டமைப்புகளும் மிகக் கைங்கரியமாக முடக்கி விட்டுள்ளன. தமிழர்களின் அமைதி வழிப் போராட்டங்களுக்கான சனநாயக வெளியை மூடுவதன் ஆரம்பமே, தமிழ் மக்களின் போராட்டங்களை தடுத்து நிறுத்தும் நோக்கோடு, நீதிமன்றங்கள் ஊடாக பொலீசார் வழங்கும் தடையுத்தரவு ஆகும்.

இதேவேளை, தமிழ் மக்களின் கூட்டு நினைவு கூரல்களை ஏன் அழுவதற்கான உரிமையையே தடுத்து நிறுத்தும் சிறீலங்கா காவல் துறையால், யாழ்ப்பாணத்தில் பெரும் கலவரம் வெடிப்பதை கட்டுப்படுத்தமுடியாமை அவர்களின் நம்பகத்தன்மையை மீண்டும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அசாதாரண சூழலை காரணம் காட்டி சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படைகளை தமிழர் தாயகத்தில் தொடர்ந்தும் நிலைநிறுத்தி வைத்திருப்பது குறித்த தரப்புகளின் திட்டமிடலின் ஒரு அங்கமாக இருக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் தென்படுகின்றன.

சனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் மிகவும் புத்திசாலித்தனமான யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தில் பின்னணியில் தனித்து சிறீலங்கா நலன் சார் நேரடியான கொள்கை வகுப்பாளர்கள் மட்டுமல்ல, ஆட்சி மாற்றத்துக்கு துணைநின்ற தமிழ்த் தரப்புகளும் செயற்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. இதனூடாக சமநேரத்தில் உள்ளக ரீதியாகவும் வெளியக ரீதியாகவும் தனக்கான ஆதரவு அலையொன்றை மைத்திரிபால சிரிசேன அவர்கள் கட்டியெழுப்பியுள்ளார். இது தமிழர்களுக்கான நியாயமான அரசியல் தீர்வையும் நீதியையும் மைத்திரிபால சிரிசேன அவர்கள் வழங்குவார் என்ற மாயையும் கட்டியெழுப்பக் கூடிய சாத்தியம் உண்டு. இதன் ஒரு தொடர்ச்சியாகவே, கொழும்பில் வித்தியாவுக்கு நீதி வேண்டும் என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு நிகழ்வையும் அவதானிக்க முடியும். இதில் பங்குபற்றிய குறிப்பிட்டளவானோர் இதயசுத்தியுடன் பங்குபற்றியிருப்பினும், இந்த ஏற்பாட்டின் தூரநோக்கென்பது மீள்நல்லிணக்கம் என்ற மாயையை உருவாக்குவதோடு, தேசிய ஒற்றுமை என்ற பெயரில் சிறீலங்கர் என்ற அடையாளத்தை கட்டியெழுப்பி, சிறீலங்காவின் இறையாண்மைக்குள் அடையாளத்துக்குள்ளும் தமிழ்த் தேசிய அரசியலையும் அதன் தனித்துவ அடையாளத்தையும் புதைப்பதாகும்.

**இதேவேளை,**
**தமிழ் மக்களின் கூட்டு நினைவு கூரல்களை ஏன் அழுவதற்கான உரிமையையே தடுத்து நிறுத்தும் சிறீலங்கா காவல் துறையால், யாழ்ப்பாணத்தில் பெரும் கலவரம் வெடிப்பதை கட்டுப்படுத்தமுடியாமை அவர்களின் நம்பகத்தன்மையை மீண்டும் கேள்விக்குறியாக்கியுள்ளது.**

சனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களினதும், கொழும்பில் வித்தியாவுக்கு நீதி வேண்டும் என்ற அடிப்படையில் போராட்டத்தை மேற்கொண்ட ஏற்பாட்டாளர்களினதும் நகர்வுகள் இதயசுத்தியுடனும் நேர்மையுடனும் மேற்கொள்ளப்பட்டிருப்பின், அவர்களின் அடுத்த கட்ட நகர்வென்பது, ஆயிரக்கணக்கில் சிறீலங்கா ஆயுதப்படைகளால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட தமிழ்ப் பெண்களுக்கான நீதியை பெற்றுக்கொடுப்பதற்கான போராட்டமாக மாற்றுநிலையாக்கம் அடைய வேண்டும்.

அதன் அடித்தளம் என்பது சனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களில் ஆரம்பித்து முன்னால் சனாதிபதி சந்திரிகா அவர்களின் ஊடாக தொடரலாம். ஏனெனில், இசைப்பிரியாவுக்கு சிறீலங்கா இராணுவம் கொடூரம் இழைத்த போது பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் மைத்திரிபால சிரிசேன அவர்கள். வெளிச்சத்துக்கு வந்த கிரிசாந்தி, கோணேஸ்வரி மற்றும் ரஜனி போன்றவர்கள் மீதான பாலியல் வல்லுறவுக்குப் பின்னரான படுகொலைகள் சந்திரிகா அவர்களின் ஆட்சி காலத்திலேயே இடம் பெற்றது.

இவர்கள் இருவருமே அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் செயற்பட்டு, பாலியல் வல்லுறவுகளை புரிந்து, படுகொலைகளை செய்த ஆயுதப்படையினரை நீதியின் முன் நிறுத்துவார்களாக இருந்தால், தமிழர் தேசத்துக்கும் சிங்கள தேசத்துக்குமிடையில் இதயசுத்தியுடன் கூடிய நல்லிணக்கத்திற்கான கதவுகள் இயற்கையாகவே திறக்கும்.



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# மோடியின் ஓராண்டு ஆட்சி



**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

ஊழல் நிறைந்த திறனற்ற ஆட்சி, செயற்படாத தலைமை அமைச்சர் மன் மோஹறன் சிங், வீழ்ச்சியடையும் நாணய மதிப்பு, மோசமான வெளிநாட்டுச் செலவானிக் கையிருப்பு, பணவீக்கம் ஆகியவற்றின் மத்தியில் லோக் சபா எனப்படும் இந்தியப் பாராளுமன்றத்தின் மக்களவைகான பொதுத்தேர்தல் 2014-ம் ஆண்டு நடந்தது. தேர்தலில் நரேந்திர மோடி தலைமை அமைச்சர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டால் பாரதிய ஜனதாக் கட்சிக்குக் கிடைக்கும் மொத்த வாக்குகள் 6 விழுக்காட்டால் அதிகரிக்கும் எனக் கருத்துக் கணிப்புக்கள் 2013-ம் ஆண்டே எதிர்வு கூறின. இளையோரின் வாக்கை கவரக்கூடியவராகவும் மோடி இருந்தார். உலக அரசியல்வாதிகளின் சோனியா காந்தி மூன்றாவது பெரிய பணக்காரியாக இருக்கின்றார் என்பதும் மோடியில் வெற்றிக்கு உதவியது.

காங்கிரசுக் கட்சியின் ஆட்சிக்குப் பெரும் தலையிடியாக அமைந்தது உலகச் சந்தையின் எரி பொருள் விலை அதிகரிப்பு. மோடி பதவி ஏற்றவுடன் உலகச் சந்தையில் எரிபொருள் விலை பெருமளவில் குறைந்தது. மோடியின் ஆட்சியின் பொருளாதார வெற்றிக்கு இந்த எரிபொருள் விலை வீழ்ச்சி பெரும் பாங்காற்றியது.

### ◆ மோடியின் தற்புகழ்ச்சிக்கு குறைவில்லை

தன்னைத்தானே விளம்பரப் படுத்துவதில் வல்லவரான நரேந்திர மோடி தனது ஓராண்டு கால ஆட்சியின் சாதனையை தனது வலைப் பக்கத்தில் மிகவும் ஆடம்பரமாகப் பதிவேற்றியுள்ளார். மின் உற்பத்தி அதிகரிப்பு, நிலக்கரி உற்பத்தி அதிகரிப்பு, வெளிநாட்டுச் செலவாணிக் கையிருப்பு அதிகரிப்பு என்பவை தனது ஆட்சியில் நிகழந்ததாக நரேந்திர மோடி சொல்கின்றார். மோடியின் பொருளியல் ஆலோசகர் அர்விந்த் சுப்பிரமணியன் கடந்த ஐந்து ஆண்டுகளில் மோடியின் ஆட்சிக்காலத்தில் வறுமைக் குறைப்பு மிகவும் துரித கதியில் நடப்பதாகச் சொல்கின்றார்.

### ◆ உற்பத்தித் துறையில் அதிக நாட்டம்

அதிகமாக மூலப்பொருள்களை தனது ஏற்றுமதியின் முக்கியமானவையாகக் கொண்டது இந்தியப் பொருளாதாரம். இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள் என்ற மோடியின் சுலோகம் இந்திய உற்பத்தியை அதிகரிப்பதுடன் சீனாவிற்கு சவால் விடுவதாகவும் அமைந்துள்ளது. தற்போது உலகின் பல முன்னணி நிறுவனங்கள் சீனாவில் பெருமளவு உற்பத்தி செய்கின்றன. அதை இந்தியாவின் பக்கம் ஈர்க்கும் வகையில் மோடியின் அரசு செயற்படுகின்றது.

### ◆ முதலீட்டுக்கு அழைப்பு

உலகெங்கும் உள்ள வளர்முக நாடுகள் தமது நாட்டில் அந்நிய முதலீட்டை ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றன. மோடி உலக நாடுகள் எங்கும் சென்று இந்தியாவில் முதலீடு செய்யுங்கள் என அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கின்றார். குஜராத்தில் தலைமை அமைச்சராக இருந்த போது அவர் பரவலாகப் பாவித்த வாசகம் “முதலீட்டாளர்களுக்கு சிவப்பு நாடால் இல்லை. சிவப்புக் கம்பளம் உண்டு.” அதையே மோடி இப்போது உலக அரங்கில் உரத்துச் சொல்கின்றர். உலக முதலீட்டைக் கவர்வதற்காக மோடி நிறைவேற்ற முயலும் நிலம் கையகச் சட்டம், தொழிலாளர் நல சட்டம் ஆகியவை பொதுமக்களின் நலன்களுக்கு விரோதமானவை.

### ◆ உலக அரங்கில் ஆணித்தரமான முடிவு.

சீனாவில் ஒரு தேசியவாதியான ஜி ஜின்பிங் ஓர் உறுதியான ஆட்சியை சீனாவில் நடாத்திக் கொண்டிருக்கும் போது அதற்கு ஈடு கொடுக்கக் கூடிய வகையில் மோடியின் ஆட்சி நடக்கின்றது எனச் சொல்லலாம். உலக அரங்கில் இந்திரா காந்திக்குப் பின்னர் சோனியா-மன் மோஹறன் சிங் ஆட்சியில் இந்தியாவின் செல்வாக்கு சரிந்து போய் இருந்தது. அதை மீண்டும் நிலை நிறுத்தக்கூடிய வகையில் நரேந்திர மோடி செயற்படுகின்றார் எனச் சொல்லாம். ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சீனாவிற்கும் ஐக்கிய அமெரிக்காவிற்கும் இடையிலான போட்டி ஒரு இரு துருவப் போட்டியாக முனைப்படைந்து கொண்டிருக்கையில் இந்தியாவின் பங்களிப்பு ஆசிய பசுபிக் ஒழுங்கை நிலைநாட்டுவதில் முக்கியமானது. இந்தியா சரியாகச் செயற்பட்டால் ஆசிய பசுபிக் பிராந்தியச் சமநிலையை தீர்மானிக்கும் துருப்புச் சீட்டு இந்தியாவின் கையில் என்ற நிலை ஏற்படும். இதற்குக் காங்கிரசுக் கட்சியி ஆட்சியில் இருந்தால் எப்படிச் செயற்பட்டிருக்கும் என்பதிலும் பார்க்க மோடியின் ஆட்சியின் செயற்பாடு சிறப்பானதாக உள்ளது. ஒரு மாநில ஆட்சியில் இருந்து முதற்தடவையாக மத்தியில் ஆட்சிக்கு வந்த மோடி உலக அரங்கில் ஒரு கற்றுக் குட்டியாக இருப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் உலக விவகாரங்களில் ஒரு கைதேர்தவர் போல் செயற்பட்டு ஆணித்தரமான முடிவுகளை எடுக்கின்றார்.

### ◆ வொடாஃபோனுக்கு எதிராக் வெத்து வேட்டு

மும்பை மாநில உயர் நீதிமன்றம் வொடாஃபோன் நிறுவனத்திற்கு எதிரான 3,200கோடி ரூபா பெறுமதியான வருமான வரி தொடர்பாக வொடாஃபோன் நிறுவனத்துக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கியது அதை எதிர்த்து மோடியின் அரசு மேன் முறையீடு செய்யாதது பலரையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது. வெளிநாட்டு முதலீட்டை வரவழைப்பதற்காக மோடியின் அரசு இப்படி அரசுக்கு இழப்பீடு ஏற்படக் கூடிய வகையில் நடந்து கொண்டதைப் பலரும் கண்டித்திருந்தனர்.

### ◆ என்றோ முடிந்து போன நூறாவது நாள்

நரேந்திர மோடியின் தேர்தல் வாக்குறுதிகளில் முக்கியமான ஒன்று வெளிநாடுகளில் இருக்கு இந்தியர்களின் கறுப்புப் பணத்தை ஆட்சிக்கு வந்து நூறு நாட்களில் இந்தியாவிற்குக் கொண்டு வந்து ஒவ்வோர் இந்தியனுக்கும் ஆளுக்கு 15 லட்சம் ரூபாய் கிடைக்க வழி செய்வோம் என்பதே. அந்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விடப்பட்டது. இந்தியாவில் வருமான வரிக்கு ஏய்ப்புச் செய்து வெளிநாடுகளில் அவற்றைக் கொண்டு போய் முதலிட்டவர்களின் பட்டியலை வெளிவிட்டால் அது நாட்டுக்கு உகந்தது அல்ல என்கின்றனர் மோடியின் ஆட்கள். ஆனால் மோடி ஆட்சியில் அமர தேர்தல் நிதி வழங்கியவர்களைப் பாதுகாக்கவே மோடியின் அரசு முயல்கின்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகின்றது.

### ◆ தனிமனித ஆட்சியும் காட்சியும்

மோடியின் ஓராண்டு ஆட்சியைப் பற்றி எழுதிய கட்டுரைக்கு 'India's One Man band' எனத் தலைப்பிட்டது. மோடி குஜராத்தில் முதலமைச்சராக இருந்த போதும் தன் கையில் எல்லா அதிகாரத்தையும் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. அதே குற்றம் இந்தியத் தலைமை அமச்சராக இருக்கும் போதும் முன் வைக்கப்படுகின்றது. பாரதிய ஜனதாக் கட்சியின் பிதாமகர் எனக் கருதப்பட்ட எல் கே அத்வானி ஓரம் கட்டப்பட்டார். மூத்த உறுப்பினர்களான சுஷ்மா சுவராஜ், அருண் ஜெட்லி, நிதின் கட்கரி போன்றவர்கள் ஓரம் கட்டப்பட்டு மோடிக்கு விருப்பமான அமித் ஷா முன்னிலைப் படுத்தப் படுகின்றார். முன்னணித் தலைவர்களை மோடியின் ஆட்கள் ஒட்டுக் கேட்கின்றனர் என்ற குற்றச் சாட்டும் உண்டு.

### ◆ உலகம் சுற்றும் மோடி

ஓராண்டில் மோடி 18 நாடுகளுக்கு 370 கோடி ரூபாய் செலவில் பயணம் செய்துள்ளார். ஓராண்டில் 52 நாட்கள் அவர் வெளிநாட்டுப் பயணத்தில் இருந்தார். அவரை ஒரு வெளிநாடு வாழ் இந்தியர் என ஊடகங்கள் கேலி செய்கின்றன. இந்திய உள்கட்டுமானத்தைத் துரிதமாக முன்னேற்ற வேண்டிய அவசியம் மோடிக்கு உண்டு. பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்தியாவில் முதலீடு செய்யத் தயங்குவது அங்குள்ள மோசமான மின் மற்றும் நீர் விநியோகமும் மோசமான போக்கு வரத்து வசதிகளுமே. இவற்றைச் சீர் செய்வதில் மோடியின் அரசு காத்திரமாக எதையும் செய்யவில்லை.

### ◆ தேர்தல் களநாயகனின் அமர்க்களம் அடங்கியது.

அப்படி வான்பாய்ந்து வந்தவைகளில் மதுவும் ஒன்று. பல்கலைக்கழகத்தின் 1 கி.மீ சூழலில் மட்டும் 2000த்தின் இறுதிப்பகுதியில் முறையான அனுமதிப்பத்திரம் அற்ற 18 இற்கு மேற்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள் ‘ஆசீர்வாதத்துடன்’ பகிரங்கமாக இயங்கின. அந்தக் காலப்பகுதியில் மிகவும் எமது உளநல மருத்துவ பேராசிரியருடன் , வகுப்பினூடே ஒரு உரையாடல் நடந்தது. அதில் அவர் சொன்னார், ‘போர் எமக்குத்தந்த அழிவுகளில், உயிர் உடமை இழப்புகளை விட , ‘ஊர்’ அழிந்தது தான் எமக்கு மிகப்பெரிய அழிவு. நீண்ட காலத்தில் அது தான் எம்மை (சுயத்தை ) அழிக்கும்’ என்றார்.

அவர் அன்று ‘ஊர்’ என குறிப்பிட்டிருந்தது , போரினால் சிதைந்து போயிருந்த எமது ஊரின் வீடுகளையோ நாம் இடம்பெயர்ந்து ஆக்கிரமிப்பாளர்களிடம் விட்டு வந்திருந்த எமது ஊர்களையோ அல்ல. ‘ஊரின்’ பௌதீக ரீதியிலான வரையறையையும் அவர் குறிப்பிடவில்லை.

ஊரின் சமூகக்கட்டுமானத்தை, எமக்கிருந்த உறவுகளின் பிணைப்பை, அந்த மக்களிடையேயான அந்த ஒரு ஆத்மார்த்தமான பிணைப்பைத்தான் அவர் ‘ஊர்’ என அடையாளப் படுத்தியிருந்தார். எமது சுயத்தின் முக்கிய பங்கு இந்த ‘ஊர்’ களில் இருந்தது.

தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், உறவிழப்புகள், உயிர் தப்புவதற்கான எத்தனங்கள், அந்த ‘ஊர்’ என்கிற பிணைப்பை, அந்த சமூகக் கட்டுமானத்தை அறுத்து விட்டிருந்தது.

எறிகனைகளும் குண்டுகளும் வீசி எம்மை இடம்பெயர வைத்த களத்தில் நின்ற ஆக்கிரமிப்பாளனுக்கு ஊர், சமூகம் என்பவற்றின் முக்கியத்துவம் புரிந்திருக்குமோ என்னவோ, பல தசாப்தங்களாக எம்மினத்தை ஒடுக்குவதற்கு கொழும்பிலிருந்து திட்டமிடல்களை செய்துகொண்டிருக்கும் மாஸ்ரர் மைன்ட்களுக்கும் இன்ரலெச்சுவல்களுக்கும் ‘ஊரை’ அழிப்பதன் தாற்பரியம் நிச்சயம் புரிந்திருக்கும்.

‘ஊர்’ இருந்தால், அதற்கு ஒரு சமூக ஒழுக்கம் இருக்கும், அது சட்டப்புத்தகங்களை விட வலிமையானது. ஒருவன் நெறிதவறிப்போவது சுலபமானது அல்ல. சிறு உதாரணம் மது அருந்துவது என்பது மிகப்பெரிய பாவச்செயலாக பார்க்கப்படிருக்கும். ஊரில் யாருக்காவது அது தெரிந்துவிடலாம் என்கிற பயம் அவர்களை பலநெறிப்பிறழ்வுகளில் இருந்து தள்ளி வைத்திருந்திருக்கும்.

‘எழுதப்படாத ஒழுக்க நெறிமுறை ஒன்று பேணப்பட்டிருக்கும்’ என்று அந்த பேராசிரியர் தொடர்ந்தார்.

உண்மைதான், இப்போது புதிது புதிததாய் கட்டத்தொகுதிகளும் வீடுகளும் எழும்புகின்றன, ஆனால் ‘ஊர்’ அழிந்து போய் விட்டது. அதன் விளைவுகள் தெளிவாகத் தெரியத் தொடங்கி விட்டது.

**5.** புங்குடுதீவில் அந்த மாணவிக்கு நடந்த கொடூர சம்பவத்தை தொடர்ந்து மக்களிடம் இருந்து வெளிப்பட்ட அந்த தார்மீக கோபமும் உணர்ச்சியும், பல தரப்புகளால் அவரவரின் தேவைக்கேற்றபடி கையாளப்பட்டு , வேண்டத்தகாத சில நிகழ்வுகள் நடந்துகொண்டிருந்த மே 15ம் திகதி புதன் கிழமை மாலை, நடந்த வேறு ஒரு நிகழ்வில், இது தொடர்பான ஒரு செயற்பாட்டிற்கான ஆரம்ப கட்ட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அதில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டிருந்தன, எமது சமூகத்தின் மீதான சுயவிமர்சனமாக பலகருத்துகள் அங்கு வெளிப்பட்டிருந்தது.

இறுதியில் அங்கிருந்த ஒரு துறைசார் நிபுணர் “இவ்வாறு நடக்கின்ற நெறிப்பிறழ்வுகளுக்கும் , மக்களின் உறவுகளை நெறிப்படுத்துவதற்கும் மிகப்பெரிய காரணம் எம்மிடம் ஒரு தலைமை இல்லை.எமது சமூகத்திற்கான எமது சமூகத்தில் ஒரு தலைமைத்துவ வெற்றிடம் ஒன்று உருவாகி உள்ளது” என்று சொன்னார். குறிப்பு: அவர் விடுதலைப்புலிகளின் அபிமானியாக தன்னை வெளிப்படுத்திக் கொள்பவர் அல்ல.

“NGOக்களும் சில நிறுவனங்களும் கிராமிய மட்டத்தில் சில கட்டமைப்புகளை வைத்திருக்கின்றனவே தவிர, எந்த ஒரு சமூகமைப்போ அல்லது தமிழ் அரசியற்கட்சிகளோ, கிராமிய மட்டத்தில் கட்டமைப்புகளை வைத்திருக்கவில்லை. மக்களை ஒருங்கிணைக்க ஒரு வழிமுறையும் இல்லை ” என்று அவர் சொன்னார்.

**6.** புங்குடு தீவு கொடூரத்தைற்கு ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு முன்னர், தமிழ் பகுதியெங்கும் பரவலாக நடந்தேறிவரும் சமூக நெறிபிறழ்வுகள் மற்றும் அது குறித்து மக்களிடம் ஏற்பட வேண்டிய விழிப்புணர்வு தொடர்பில் தமிழ் சிவில் சமுக அமையம் ஏப்ரல் நடுப்பகுதியில் ஒரு பகிரங்க கலந்துரையாடலை நடாத்தியிருந்தது’ போருக்கு பின் அதிகரிக்கும் சமுக நெறிப்பிறழ்வுகள் - சுயத்தை இழக்கிறதா எமது இனம்? என்கிற தலைப்பில் வடமராட்சியில் நடைபெற்ற அக்கலந்துரையாடலில் திரு. நிலாந்தன் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டு தனது கருத்துகளை முன்வைத்திருந்தார்.

**‘ஊர்’ இருந்தால், அதற்கு ஒரு சமூக ஒழுக்கம் இருக்கும், அது சட்டப்புத்தகங்களை விட வலி மையானது. ஒருவன் நெறிதவறிப்போவது சுலபமானது அல்ல.**

அக்கலந்துரையாடலில் மக்களிடம் எழுந்த கருத்துகளும் , எம்மிடம் இருக்கும் ‘வழிகாட்டல் வெற்றிடத்தை’ சுட்டிக்காடியது.

“துலாம்பரமாக அதிகரிக்கும் சமூக நெறிப்பிறழ்வுகளுக்கு வெறுமனே இளையவர்களை குறைசொல்வதில் பலனில்லை என்றும், இதன் பொறுப்பை முழுச்சமூகமும் ஏற்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

‘ஊர் அழிந்ததன்’ விளைவும் அக்கலந்துரையாடலில் இயல்பாகவே வெளிப்பட்டிருந்தது.

தூங்கு நிலைக்கு சென்றிருக்கும் சனசமூக நிலையங்களும் விளையாட்டுக்கழகங்களும் மீண்டும் புத்துயிர்ப்பு அடைவதன் மூலம் இளைஞர்களின் சக்தியை ஆக்க பூர்வமான முறையில் திருப்பலாம் என்கிற கருத்தும் முன்வைக்கப்பட்டிருந்தது.

உண்மைதான். அநேகமான விளையாட்டுக் கழகங்கள் சனசமூக நிலையங்கள் என்பன இப்போது செயற்படும் நிலையில் இல்லை. அவற்றின் செயற்பாடுகளின் மீளுருவாக்கம் நிச்சயம் பல நன்மைகளை எமது சமூகத்திற்கு தரும். இயல்பாகவே சமூக நெறிப்பிறழ்வுகள் குறைந்து போகும். எம்முன்னே உள்ள இலகுவானதும் உறுதியானதுமான ஒரு ஆக்கபூர்வமான பாதுகாப்பு பொறிமுறை இதுதான்.

எம்மிடையே நடக்கின்ற எல்லா சமூக நெறிப்பிறழ்வுகளுக்கும் நாம் வெறுமனே அரசாங்கத்தை மட்டும் சுட்டிக்காட்டிவிட்டு , எமது சமூகப் பொறுப்புணர்விலிருந்து, வசதியாக எம்மை விடுவிப்பதாக அமையும். ஆனால், அதே வேளை எமது பொறுப்பை மறந்து ,வெறுமனே அரசாங்கத்தை மட்டும் சுட்டிக்காட்டுவது எவ்வளவு அபத்தமோ அதைவிட அபத்தமும் ஆபத்தும் இச்சமூக சீர்குலைவுகளின் ஆழமான பின்னணியைக் கருத்தில் கொள்ளாமல் விடுவது தான்.

அது பிரச்சினைகளை பிழையாகப் பரிமாணப்படுத்துவதோடு, அந்தப் ‘ பின்னணிச் செய்ற் திட்டங்கள்’ தொடரவும் வாய்ப்பளிக்கும்.

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



seven | zero
graphic designers
020 7043 4310
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP
creative artwork from concept to design

# அதிகாரமில்லாத மாகாணசபையும் குற்றச்செயல்களும்

பாகம் 174

எமது தாயகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதை யோசிக்க வேதனையாக இருக்கிறது. சமீபத்தில் வித்தியா என்னும் பாடசாலை மாணவியைப் பாலியல் பலாத்காரம் செய்ததோடல்லாமல் படுகொலையும் செய்திருக்கிறார்கள் வக்கிர புத்தி கொண்ட சிலபேர். பாவம் அந்தப் பெண்ணை உயிரோடாவது விட்டிருக்கலாம். அவள் வாழப் பிறந்தவள். ஏன் இந்த இரக்கமற்ற கொடூரக் குணம் இவர்களுக்கு வந்தது ? நாம் எத்தகைய பாரம்பரியப் பண்பாடுகளுடாக வளர்ந்தோம் வாழ்ந்தோம் ! எமது கோயில்களிலும் தேவாலயங்களிலும் எமது மக்கள் சாரி சாரியாகச் சென்று கடவுளுக்கும் பாவத்திற்கும் பயந்து தமது நேர்த்திக் கடன்களைச் செலுத்தி எவ்வளவு புனிதமான வாழ்வை மேற்கொள்கிறார்கள். அத்தகையவோர் உயர்வான சமுதாயத்திற்குள் ஏன் இத்தகைய கொடூரங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன? பாவத்திற்குப் பயப்படாது, தங்கள் கட்டற்ற காமத்தைத? தீர்த்துக் கொள்வதற்காக ஓர் இளந்தளிர் பிய்த்தெறியப் பட்டிருக்கிறது. இத்தனைக்கும் இந்த அநியாயத்தைச் செய்த குற்றவாளிகள் யாரென்று முழுமையான சாட்சியங்களோடு கண்டுபிடிக்கப்படவில்லை. ஊடகங்களும் தங்களுக்குக் கிடைத்த தகவல்களை வைத்துக்கொண்டு ஒவ்வொன்றைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. பண்பட்டவோர் சமுதாயத்தில் குற்றவாளிகள் அடையாளம் காணப்படாமல் இலகுவில் நடமாடமுடியாது. ஆனால் இவர்கள் நடமாடுகிறார்கள். அந்த அளவுக்கு எமது பண்பாட்டு விழுமியங்கள் சிதைந்து போய்க் கொண்டிருக்கின்றன.

இத்தகைய சம்பவங்கள் அடுத்தடுத்து நடைபெறுவதற்குக் காரணமென்ன என்பதே தெளிவாகத் தெரியாமலிருக்கிறது. போதைப் பொருட்பாவனையால் ஏற்பட்ட விபரீதமா? செக்ஸ் படங்களை எடுத்துப் பிறநாடுகளுக்கு விற்றுப் பணம் சம்பாதிக்கும் நோக்கமா? பெரியவர்களின் மத்தியில் ஏற்படுகின்ற உட்பகையால் சின்னஞ் சிறுசுகளைப் பழிவாங்குகிறார்களா? சமூகத்தைக் குழப்பிவிடும் அரசியல் நோக்கங்கொண்ட சதிமுயற்சிகளா? அல்லது நமது சமுதாயம் தனது பாரம்பரியப் பண்புகளையும் இரக்க சிந்தனையையும் இழந்து இத்தகைய குற்றச் செயல்களுக்குப் பழக்கப்பட்ட அவல நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டதா? என்ற கேள்விகளுக்கு விடைகாணவேண்டிய தேவை இன்று ஏற்பட்டிருக்கிறது. சரியான வழியில் திட்டமிடப்பட்ட சமூக ஆய்வுகளின் மூலமே இந்த மனிதத்துக்குப் புறம்பான செயல்களை எமது தாயகத்திலிருந்து ஒழித்துக்கட்டக் கூடிய வழிவகைகளைக் கண்டறிய முடியும்.

மேற்கு நாடுகளில் குற்றவாளிகளைப் பற்றிய தகவல் வங்கி மிகவும் சிறப்பாகச் செயற்படுகிறது. அவர்களது கைரேகை, டிஎன்ஏ, புகைப்படம் என்று சகல விடயங்களையும் பொலீஸ் பதிவு செய்து வைத்திருக்கிறது. முதன் முறையாகக் குற்றமிழைப்பவர்கள் அல்லது இதுவரை பிடிபடாதவர்கள் தவிர ஏனைய சிறிய குற்றம் புரிந்தவர்கள் கூடப் பொலீஸில் மாட்டினால் அவரிடமிருந்து எல்லாத் தகவல்களையும் எடுத்துவிடுவார்கள். குற்றவாளிகளின் வசிப்பிடம் அவர்கள் நடமாடும் பிரதேசம் போன்றவை தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படக் கூடிய வசதிகள் இருப்பதால், ஒரு தடவை குற்றம் செய்து பிடிபட்டவர் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவது பெரிதும் தவிர்க்கப்படுகிறது. நமது தாயகத்தில் சிறைச்சாலைகளைத் தவிர குற்றவாளிகளைக் கண்காணிக்க வேறு வழிவகைகளில்லை. நாம் வசதி வாய்ப்புகளற்ற வறிய நாட்டைச் சேர்ந்தவர்கள். அதனால் இத்தகைய குற்றச் செயல்களை அதிகரிக்க விடாமல் தடுத்து நிறுத்த வழிவகைகள் இல்லாதிருக்கிறோம்.

**நமது சமுதாயத்துக்குள் ஆயிரம் குற்றங் குறைகளை வைத்துக்கொண்டு பிறர் மீது பழிபோட முடியாது. உண்மையில் இன்றுவரை ஏன் இந்த அநியாயம் நடந்தது என்ற கேள்விக்கு யாராலும் பதில் சொல்ல முடியவில்லை.**

சில தனிமனிதர்களிடையே பாலுணர்வு கட்டுப்படுத்த முடியாத அளவிற்குப் போவதும் அதன் விளைவாக சில தனி மனிதர்கள் சில சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படுவதும் எல்லா சமூகங்களிலும் காலங்காலமாக இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் பலர் சேர்ந்து கூட்டாக வெறித்தனத்தோடு பாடசாலை செல்லும் குழந்தைகளை இப்படிச் சிதைப்பதும் அதுவும் போதாமல் அப்பிஞ்சுகளை வாழவிடாமல் குரூரமாகக் கொன்றுவிடுவதும், நமது சமுதாயத்தில் வந்து சேர்ந்திருப்பதை நம்ப முடியவில்லை. ஒரு வெளிச் சக்தி ஏதோ ஒரு காரணத்துக்காக இந்தச் செயல்களை ஊக்குவிக்கிறதா என்ற சந்தேகமும் எழுகிறது. ஆனாலும், அரசியல் சாயத்தை நாம் இதற்?குப் பூசி, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களைக் குழப்பிவிட்டு வடக்கில் இராணுவத்தை நிலைகொள்ள வைப்பதற்குச் சிலர் முயல்கிறார்கள் என்று முடிவெடுப்பது சரியாகப் படவில்லை. நமது சமுதாயத்துக்குள் ஆயிரம் குற்றங் குறைகளை வைத்துக்கொண்டு பிறர் மீது பழிபோட முடியாது. உண்மையில் இன்றுவரை ஏன் இந்த அநியாயம் நடந்தது என்ற கேள்விக்கு யாராலும் பதில் சொல்ல முடியவில்லை.

சில காலங்களுக்கு முன் ஓர் பல்கலைக் கழக மாணவி டெல்லியில் இத்தகைய கொடுமைக்கு ஆளாகி உயிர் நீத்தாள். அப்போது மக்கள் அங்கு திரண்டெழுந்து நீதி கேட்டனர். அதே வகையில் தான் இலங்கையிலும் மக்கள் வித்தியாவுக்காகத் திரண்டெழுந்தனர். இது மக்களின் இயல்பு. ஆனால், மக்கள் போராட்டம் திசை திரும்பி சட்டத்தைத் தங்கள் கையில் தரவேண்டுமென்னும் அளவுக்குப் போனதுதான் நகைப்புக்கிடமான தாயிருக்கிறது. கைது செய்யப் பட்டுள்ளவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் இன்னும் நிரூபிக்கப்படவுமில்லை. இதற்கிடையில் குற்றவாளிகள் மக்களிடம் கையளிக்கப்பட வேண்டுமென்று போராட்டக்காரர்கள் கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். நன்கு கல்வியறிவூட்டப்பட்ட நாகரீகமானவோர் சமுதாயத்தில் இத்தகைய கோரிக்கைகளை முன்வைத்துப் போரடுவது ஆரோக்கியமானதாகப் படவில்லை.

ஓர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் முதலமைச்சராகக் கடமையாற்றும் வட மாகாணத்தில் இத்தகைய குற்றச் செயல்கள் நடைபெறுவது அவருக்கும் அவர் தலைமை தாங்கும் மாகாண சபைக்கும் பெருத்த அபகீர்த்தியைக் கொண்டு வந்திருக்கிறது. இத்தனைக்கும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொலீஸாரை மாகாண சபையின் நிர்வாகத்தின்கீழ் வைத்திருக்க மத்திய அரசு அனுமதிக்கவில்லை. அதிகாரப் பரவலாக்கல் உரிய முறையில் நடைபெறாததால் எல்லாமே குழம்பிப் போய்க் கிடக்கின்றது.

**அலசுவாரம்**

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

அதனால், அதிகாரப் பரவலாக்கல் தேவையில்லை, பொலீஸ் நிர்வாகம் மத்திய அரசிடமே இருக்க வேண்டுமென்றெல்லாம் பிடிவாதம் செய்துகொண்டு 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தாமல், ஈழத்தமிழர்களைத் தனது இரும்புப் பிடிக்குள் வைத்திருக்கும் பெரும்பான்மையரசே இத்தகைய குற்றச் செயல்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும். கையில் அதிகாரமெதுவுமில்லாத மாகாண அரசைக் குற்றங் கூற முடியாது.

இந்தியாவுக்குப் போக்குக் காட்டியபடியே அந்நாட்டுடன் செய்த ஒப்பந்தத்தை இலங்கை முழுமையாக நிறைவேற்றாமல் தட்டிக் கழிக்கிறது. 13வது திருத்தத்தின் மேலும் நாங்கள் போக இருக்கிறோமென்று ஏமாற்றிக் கொண்டே செல்லும் இலங்கை, அதையும் செய்யாமல், தமிழர் தாயகத்தின் சட்ட ஒழுங்கையும் கவனத்திலெடுக்காமல், ஓர் காட்டுமிராண்டிச் சமுதாயமாக ஈழத்தமிழர்களை மாற்றுவதற்காக மறைமுகமகமாகச் செயற்படுகிறதோ தெரியவில்லை.

உள்ளூரில் அரசியல், சமூகத் தலைவர்களெல்லாம் இருக்கக் கொழும்பிலிருந்து தனது முக்கிய வேலைகளை விட்டுவிட்டு ஜனாதிபதி வடக்குக்கு வந்து மாணவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறிக்கொண்டிருக்க வேண்டிய அவசியதேவையில்லை. அவசியதேவை அதிகாரப் பரவலாக்கல்தான். மாகாண சபைக்கான பொலீஸ் அதிகாரம்தான்.

### யாழ் நூலக எரிப்பு நினைவு வாரம்

இலங்கையரசு தனது மானுடப் பண்பாடுகளை இழந்து படு கேவலமானவோர் அராஜகப் பெரும்பான்மையின ஆதிகத்தைப் பேணும் நாடென்ற பெயர் எப்போதோ ஏற்பட்டுவிட்டது. அந்த அராஜகம் பல உச்சங்களைத் தொட்டிருந்தாலும் அதில் முக்கியமானவோர் தினம் வைகாசி 31. அந்தத் துக்க நாளும் கரிநாளாக அனுட்டிக்கப்படவேண்டும். அன்றுதான் தெற்காசியாவிலேயே மிகச் சிறந்த நூலகமாயிருந்த யாழ்ப்பாண நூலகம், அரசாங்கத்திலிருந்த பொறுப்புவாய்ந்த ஆனால் அறிவிலிகளான சில அமைச்சர்களின் தூண்டுதலிலும், மேற்பார்வையிலும் எரியூட்டப்பட்டது. கற்பூர வாசனையை அறியாத கழுதைகளாக அரசின் அமைச்சர்களும் அவர்களின் தொண்டர்களும், குண்டர்களும், பொலீஸாரும் இந்த இழிசெயலைப் புரிந்தது வரலாற்றில் பதியப்பட்டுக் கிடக்கிறது. அந்தக் கறைபடிந்த வரலாற்றைக் கடைசிவரை பெரும்பான்மையினம் அழித்துவிட முடியாது.

நூலகம் நள்ளிரவில் எரிžட்டப்பட்டதால் மறுநாளான ஜூன் 1ம் திகதியை உலகத் தமிழினம் தனது கரிநாளாகவும் அதே வேளை கல்வி எழுச்சிநாளாகவும் கொண்டாட வேண்டும். நூலகங்களுக்கு நூல்களை வழங்குதல், அறிவார்ந்த ஞாபகார்த்தச் சொற்பொழிவுகளை நிகழ்த்துதல், ஏழை மாணவர்களுக்கு கல்விக்கான நன்கொடைகள், புலமைப்பரிசுகள் போன்றவற்றை வழங்குதல் உட்படப் பல நன்மை பயக்கும் விடயங்களைச் செய்வதற்கு இந்த நாள் மிகவுகந்த நாளாகும். இந்தக் கல்வி எழுச்சிக்குரிய நாளைத் தமிழர்கள் கொண்டாடுவதைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினாலோ அல்லது வேறெந்தச் சட்டங்களாலோ எவரும் தடுத்துவிடமுடியாது. தவிரவும், எமது இனத்திற்குச் செய்யப்பட்ட துரோகமும் காலங்காலமாக நினைவு கூரப்பட இந்த நாள் எமக்கு உதவும்.

**ஓர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் முதலமைச்சராகக் கடமையாற்றும் வட மாகாணத்தில் இத்தகைய குற்றச் செயல்கள் நடைபெறுவது அவருக்கும் அவர் தலைமை தாங்கும் மாகாண சபைக்கும் பெருத்த அபகீர்த்தியைக் கொண்டு வந்திருக்கிறது.**

நாம் இன்றுவரை எந்தவித உரிமைகளும் அதிகாரமும் கிடைக்காத வெற்று மாகாண சபை ஆட்சியமைப்புக்குள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே வாழ்கிறோம். நமக்கு நடந்த அனியாயங்களை அடிக்கடி ஞாபகப்படுத்தி அதனைச் செய்தவர்களுக்கும், உலகிற்கும் உணர்த்தாவிடில் நமது உரிமைளை நாம் வென்றெடுக்க முடியாது.

யாழ் நூலக எரிப்பு நாளை நாம் சமாதான வழிகளில் கல்வி எழுச்சிநாளாக அனுட்டித்து முடிந்தால் சிங்கள மக்களும், மாணவர்களும் கூட அதனால் பயனடையக் கூடிய வகையில் செய்வோமானால், அது யாவருக்கும் ஓர் பாடமாகவும் எதிர்காலச் சந்ததிக்கு நல்ல பலன்களைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

*தொடருவம்..*

**புலம்பெயர் தேசங்களில் வாழும் எம் உறவுகளே!**

உங்கள் வணிக நிலையங்களில் நடைபெறும் திருட்டு, மோசடி போன்றவற்றை தடுக்கவும் உங்கள் நம்பிக்கை தன்மையை பேணவும் நேரடியாக கண்காணிப்பு கமராவினுடான பதிவுகளை இலங்கையிலிருந்து அனுபவம் வாய்ந்த பணியாளர்களின் மூலம் 24 மணி நேர கண்காணிப்பு சேவையினை வழங்குவதோடு இலவச தொலைபேசி இணைப்பின் ஊடாக உடனுக்குடனான தகவல்களையும் தங்களுக்கு அறியத் தருவோம். எமது சேவை தங்கள் வணிக நிலையங்களுக்கு தேவைப்படின் கீழ் கண்ட இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.



**Eagle Vision**

**CCTV Monitoring Service**



172a, Mill Road, Vavuniya, Sri Lanka

Tel : 0094773180716 | 0094242051150

EMail: shopigan@gmail.com

இலண்டனில் தொடர்புகளுக்கு சிவா : 07405 406 806

வெகுவிரைவில் தரணியெங்கும்...

தமிழ்

வணக்கம் தமிழ் | ஞாபகம் வருதே | விம்பம் | உப்பு புளி காரம் |
| வெள்ளித் திரை | ஒளித்தடம் | மயக்கும் மாலைப் பொழுது | அரும்புகள் |
| நான் நீ ! | மருத்துவம் | நாம் யார் ? | நடந்து வந்த பாதை |
| வேங்கைகள் | பாட்டுக்குப் பாட்டு | யாதும் ஊரே | உண்மையின் வெளிச்சம் |
| தரிசனம் | நிகழ்வுகள் | இன்றைய பார்வை |
மற்றும் பல சுவையான நிகழ்ச்சிகள்...

**மேலதிக விபரங்களுக்கு**

Tel : 020 7043 4316

Web : www.tamil.com

Facebook.com/tamiltelevisionnetwork | @tamiltvnetwork

# வித்யாவும் இசைப்பிரியாவும்;

## இசைப்பிரியாவின் வல்லுறவுப் படுகொலையில் பெருக்கெடுத்தோடிய குருதியைக் காணமறுத்த மனிதர்கள்



யாழ்ப்பாணம், புங்குடுதீவைச் சேர்ந்த சிறுமி வித்யா சிவலோகநாதனின் பாலியல் வல்லுறவுப் படுகொலைச் சம்பவம், வருடக்கணக்காகத் தமிழ்ச் சமூகத்துக்குள் புழுங்கிக் கொண்டிருந்த அழுத்தம் வெடித்து வெளிக்கிளம்புவதற்கான ஒரு சந்தர்ப்பமாக அமைந்துவிட்டமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே, அதன் அதிர்வு தெற்கில் உள்ள பல்வேறு சமூகக் குழுமக்களையும் பாதித்தமையைக் காணக்கூடியதாக உள்ளது. எனினும், அது தெற்கில் வழமையாக வழங்கிவரும் ‘எதிர்ப்புக் கலாசாரத்தின்’ மற்றோர் அங்கமே என்று யாரேனும் கூறுவார்களெனில், அதனை அப்படியே ஒப்புக்கொள்வதற்கு முன் அவர்கள் தத்தமது மனசாட்சியை ஒருதரம் தொட்டுப்பார்த்துக் கொள்ளுமாறு முதற்கண் வேண்டிக்கொள்கின்றோம். இதன் கருத்து, சிறுமி வித்யாவுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காகத் தெற்கில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புப் பேரணிகள் எந்தப் பயனும் அற்றவை என்பதல்ல. அதன் மூலம், தெற்கில் வாழும் சமூகங்கள் மத்தியில் தமிழ்ச் சமூகத்தின் துன்பியலான வாழ்வியல் துயரம் அவ்வாறேனும் கலந்துரையாடலுக்கு உட்படுவது முக்கியமானதாகும் என எவரேனும் வாதிட்டால், அதனை நாம் புறந்தள்ள முடியாதுதான்.

முன்னரைப் போலன்றி, பாராளுமன்ற அமைச்சர்கள் முதல் திவயின பத்திரிகை வரையும், அரச சார்பற்ற நிறுவனம் முதல் சாதாரண சமூக அமைப்புகள் வரையும் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. தெற்கில் சுமார் 100 சிறுமியரை வல்லுறவுக்குட்படுத்தி, அதனை பார்ட்டி வைத்துக் கொண்டாடிய காமக்கொடூரர்களான அரசியல்வாதிகளைப் பற்றி வாயே திறக்காத தெற்கின் சிங்கள பௌத்தர்கள், வித்யாவுக்காகக் குரல் எழுப்பினர். (ராஜபக்ஷ மற்றும் அக்கோஷ்டியில் உள்ள கயவர் குழுவைத் தவிர) தெற்கில் நடந்த அக்கொடூரம் பற்றி வாய்திறக்காத பல்வேறு சமூகச் செயற்பாட்டாளர்கள், மகளிர் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பெரும்பாலானோர் வித்யாவுக்காகக் குரல்கொடுப்பதில் முன்னின்றமை குறிப்பிடத்தக்கது.

### வித்யாவும் இசைப்பிரியாவும்

வித்யாவின் கொலைஞர்கள் தமிழர்களாக இருந்தமை, தெற்கில் ஏதோ ஒருவகையில் அதற்கான எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையிலான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தத் தூண்டுதலாக அமைந்தமையானது, இலங்கையில் தமிழராக இருப்பதன் பின்னாலுள்ள ‘அரசியலை’ இன்னுமின்னும் ஆழமாக வெளிக்காட்டும் வகையில் அந்நிகழ்வு அமைந்துவிட்டது எனலாம். அது ஒரு பாரபட்சமான/ நேர்மையற்ற தூண்டுதலே என்பதை அவர்கள் அறியாதவர்களா? அந்தத் தூண்டுதல் எவ்வாறானது?

அப்போதுதான் தூக்கத்தில் இருந்து விழித்துக்கொண்டது போல் தெற்கின் அமைச்சர்களும், இதுகாலம் வரையில் வடக்கில் இடம்பெற்ற அத்தகைய பாலியல் வல்லுறவுகள், கொலைகள் தொடர்பில் இத்தகைய விழிப்புணர்வோடு எதையுமே செய்யாத தெற்குவாழ் மக்களும் மேற்படி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ள முன்வந்திருந்தனர். அவ்வாறான எதிர்ப்புப் பேரணிகள், கொழும்புக் கோட்டையில் இருந்து பொரல்ல வரையும், பல்வேறு இடங்களிலும் வீதிகள்தோறும் இடம்பெற்றன. இன்னும்கூட இடையறாது இடம்பெற்று வருகின்றன. அதில் எந்தத் தவறும் இல்லை. என்றாலும், இதற்கு முன்னர் நிகழ்ந்த இதுபோன்ற குற்றச்செயல்கள் தொடர்பில் இதையொத்த எதிர்வினைகள் ஏன் எழவில்லை என்பதைப் பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்வது அவசியமாகும்.

வித்யா பாலியல் வல்லுறவுக்குள்ளாகி படுகொலை செய்யப்பட்டதைப் போலவே வன்னியில் கல்விகற்று பின் எல்.டி.டி.ஈ. அமைப்பின் ஊடகத்துறையில் இணைந்த சோபா இசைப்பிரியாவும் படுகொலை செய்யப்பட்டார். ஒரு குழந்தைக்குத் தாயான இசைப்பிரியா, 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரச படையினரால் நிகழ்த்தப்பட்ட ஷெல் தாக்குதலில் தனது குழந்தையைப் பறிகொடுத்து, அதே வருடம் தனது கணவனையும் போரில் இழந்து ஆற்றொணாத் துயரில் ஆழ்ந்திருந்தவர். எது எப்படி இருப்பினும், புலிகள் இயக்கத்தின் ஊடகப்பிரிவில் செய்தியாளராகப் பணியாற்றிய இசைப்பிரியா, போரினால் தற்செயலாகக் கொல்லப்படவில்லை என்பதை இன்று உலகறியும். 2009 ஆம் ஆண்டு இறுதிப்போரின் பின் அரச படையினரிடம் சரணடைந்த இசைப்பிரியா, இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டார். இராணுவத்தால் கைதுசெய்யப்படும்போது, எந்த உடல் நலக் கோளாறும் இன்றிக் காணப்பட்ட இசைப்பிரியா, பின்னர் இராணுவச் சிப்பாய்களால் மிலேச்சத்தனமான இம்சைகளுக்கு உள்ளாக்கப்பட்ட உயிரற்ற நிர்வாண உடலாகக் கண்டெடுக்கப்பட்டமைக்கு இணையவெளி முழுதும் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தும் வகையில் அமைந்த வீடியோ மற்றும் புகைப்படங்களும் சான்று பகன்றன. (சனல் 4 எனும் தொலைக்காட்சியும் இதுதொடர்பில் இலங்கை இராணுவத்துக்குச் சவால் விடுக்கும் வகையில் சர்ச்சைக்குரிய வீடியோ ஒன்றை வெளியிட்டது. உலகம் முழுதும் உள்ள துறைசார் நிபுணர்களால் குறித்த வீடியோ உண்மையானது என உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும், இந்த வீடியோ போலியானது என வாதிடும் நபர்கள் இந்தத் தீவில் இன்னுமே இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படியானவர்களும் கூட தற்போது வித்யாவுக்காகக் குரல் எழுப்பி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது).

அவ்வாறே, கடந்த ஆறு வருட காலமாக இசைப்பிரியாவின் படுகொலை தொடர்பான புகைப்படங்களும் வீடியோவும் இணையத்தளமெங்கும் உலவின. என்றாலும், இன்று வித்தியாவுக்காக எதிர்ப்புக் குரல் எழுப்புகின்றவர்கள் அன்று இசைப்பிரியாவைக் கண்டுகொள்ளவில்லை. இசைப்பிரியாவின் உயிரற்ற உடலருகே மிருகங்களைப் போல் நடந்துகொண்ட கொடூரர்களைக் கண்டுகொள்ளவில்லை.

ஏன் அப்படி நிகழ்கின்றது? ஏன் அப்படி நிகழ்ந்தது?

மிகப் பொதுவான அதேநேரம் ஆழமான இனவெறியைப் பிரதிபலிக்கும் அவலமான நிலையே இதன் காரணமாகும்.

வித்யா அவருடைய சமூகத்தைச் சேர்ந்தவர்களாலேயே படுகொலை செய்யப்பட்டார். அதனால், நாம் அந்த வல்லுறவாளர்களுக்கும் படுகொலையாளர்களுக்கும் எதிராய் அணிதிரண்டுள்ளோம். அதனால், வித்யாவுக்காக நீதிகேட்டு நாம் வீதியில் இறங்கிப் போராடுகிறோம். வித்யாவைப் படுகொலை செய்தவர்களுக்கு உச்சபட்சமான தண்டனையை வழங்குமாறு கோரிநிற்கின்றோம். அதில் தவறில்லை. அது அப்படித்தான் செய்யப்படல் வேண்டும்.

ஆனால்..!

இசைப்பிரியாவைப் படுகொலை செய்தவர்கள் நம்மவர்கள். தெற்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நம் சிங்கள இனத்தவர்கள். அவர்கள் தமிழர்கள் அல்லர். அதனால், சிங்களவர்களாகிய நாம் சலனமின்றி மனசாட்சியை நாட்டுப்பற்றினால் சுற்றிக் கட்டி, நல்லிணக்கம் பற்றிக் கதைபேசுகின்றோம். இசைப்பிரியாவைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியோரும், படுகொலை செய்தோரும் நம்மவர்கள் என்பதால், அதனை அவர்கள் செய்தது, நாட்டின் விடுதலைக்காக என்று கொள்கின்றோம். அதனால், நாம் இசைப்பிரியாவைப் பற்றி ஒரு வார்த்தைதானும் பேசுவதில்லை. இசைப்பிரியாவின் உடலில் இருந்து பெருக்கெடுத்தோடிய இரத்தத்தை நாம் கண்டும் காணாததுபோல் இருந்துவிடுகின்றோம். அதனால், ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் கோட்டையிலோ பொரல்லையிலோ வேறெந்த இடத்திலுமோ இசைப்பிரியாவின் பெயரைத் தவறிக்கூட உச்சரித்துவிடாமல் மிகக் கவனமாக இருக்கிறோம்.

தற்போது வித்யாவுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று போராடும் எதிர்ப்புப் பேரணிகளில் இசைப்பிரியா போன்ற பெண்களின் துயரமும், அவர்களின் உடல்களில் இருந்து பெருக்கெடுத்தோடிய குருதியும் நம்மை எதிர்கொள்ளாமலேயே கடந்துபோய் விடுவதும் அதனால்தான்.

வித்யாவைப் படுகொலை செய்தவர்கள் தமிழர்கள் என்பதால் சிங்களவர்களாகிய நாம் அந்தப் படுகொலைக்கு எதிராகக் குரல் எழுப்பி வீதியில் இறங்கிப் போராடுகின்றோம். இசைப்பிரியாவின் படுகொலையாளர்கள் சிங்களவர்களாக இருப்பதால், சிங்களவர்களாகிய நாம் போலியான நாட்டுப்பற்று எனும் போர்வையைப் போர்த்திக்கொண்டு பாரபட்சமாய் நடந்துகொள்கின்றோம். இன்று தெற்கில் அதுதான் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது.

இதற்குச் சமாந்திரமான மற்றோர் உதாரணத்தைத் தருகின்றோம். சில மாத காலத்துக்கு முன்னர், இராணுவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சிலரால் பாலியல் வல்லுறவுக்குள்ளான கிளிநொச்சியைச் சேர்ந்த தமிழ்ச் சிறுமி தொடர்பில் தெற்கில் உள்ளவர்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டாததும் இதுபோன்றதே!

### வித்யாவுக்காக நீதிகேட்டுப் போராடும் வடக்குவாழ் மக்கள் தெற்கில் வாழும் நமக்கு ஒரு புதிய பாடத்தைப் புகட்டியிருக்கிறார்கள் என்பதை உணர்வோம்

ஆகவே, இந்த இரட்டை நிலைப்பாட்டைக் குறிப்பதற்குப் பொருத்தமான சொல்லொன்று இருக்கிறதா?

இந்தக் குறிப்பினை நிறைவுசெய்வதற்கு முன், “வித்யாவுக்குப் போலவே இசைப்பிரியாவுக்கும் நீதி கிடைக்கச் செய்யுங்கள்! வித்யாவுக்குப் போலவே இசைப்பிரியாவின் வல்லுறவுப் படுகொலையாளர்களைச் சட்டத்தின் முன்னிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுங்கள்!” என்று கேட்டு, தெற்கில் உள்ளோர் எப்போது போராடப் போகின்றார்கள்? அப்போதுதான் நமக்கு நல்லிணக்கம் பற்றியும் சகோதரத்துவம் பற்றியும் மனப்பூர்வமாகப் பேசக்கூடியதாக இருக்கும்.

நீங்கள் உங்கள் இதயத்தைத் தொட்டுக் கேளுங்கள். வல்லுறவாளனின், படுகொலையாளனின் வர்க்கம், இனம் என்பவற்றின் அடிப்படையிலா நீங்கள் வல்லுறவுக்கும் படுகொலைக்கும் எதிராகக் குரல்கொடுப்பீர்கள்?

வித்யாவின் படுகொலையின்போதும் வடக்கு மக்கள் சரியான நிலைப்பாட்டிலேயே நின்றிருக்கிறார்கள். ஆனால், தெற்கின் மக்கள்?

இசைப்பிரியாவின் படுகொலை தொடர்பில் நடுநிலைதவறிய பாரபட்சமான நிலைப்பாட்டில்தான் இருக்கிறார்கள் என்றால், வித்யாவுக்காக நீதிகேட்டுப் போராடும் வடக்குவாழ் மக்கள் தெற்கில் வாழும் நமக்கு ஒரு புதிய பாடத்தைப் புகட்டியிருக்கிறார்கள் என்பதை உணர்வோம்.

*சிங்களத்தில்: http://www.vikalpa.org/?p=24033 தமிழில்: லறீனா அப்துல் ஹக்*



NAG & Co.
SOLICITORS

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

# காங்கேசன் சீமெந்து



காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மீண்டும் உற்பத்திகளை ஆரம்பிக்கும் முயற்சிகள் முடுக்கி விடப் படுவதாக அண்மையில் செய்திகள் தெரிவித்தன. நினை வில் அந்த எழிலான தொழிலகம் இருந்தது. அதனால் தொழில்வாய்ப்பு பயன்பட்டு வாய்ந்த சுற்றுக் கிராமங் களைச் சேர்ந்த குடும்பங்களின் நினைவும் வந்துபோயின. சுற்று வட்டாரக் கிராமங்களில் ஒன்று தான் என்னுடைய பிறந்த கிராமமும் கூட. 1948இல் டி.எஸ். சேனநாயக்க அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் முயற்சியால் இது எமக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று அந்தக் கட்சிகள் தேர்தல் காலத்தில் உரிமை கொண்டாடின. சீமெந்துத் தொழிற்சாலைக்கு தேவையான முக்கிய மூலப்பொருளான சுன்னாக் கல் இப் பகுதியில் பெருகிக் கிடந்ததும் காங்கேசன் துறைக்கு ஏற்றுமதி வசதிக்குரிய மன்னார் முருங்கன் போன்ற ஏனைய வடபகுதி கிராமங்களிலிருந்து களிமண் ரயில் பெட்டிகள் மூலம் கொண்டுவரக் கூடிய வசதிகள் இருந் ததும், இப்பிரதேசத்தில் இத்தொழிற்சாலை நிலைக்கக் காரணமானது என்றும் கூறப்படுகிறது.

சுற்று வட்டாரத்தில் சுன்னக்கற்கள் தோண்டி எடுக்கப் பட்டு குவாரக் கிடங்கில் என்ற பெயரில் மாவட்டபுரம் கீரிமலை இடையிலான தச்சன்காட்டு வீதி வரைக்கும் அது 1990இல் விரிவடைந்தது. மூலப்பொருள் தேவைக்காக இத னோடு ஒட்டியிருந்த போயிட்டி என்ற கிராமம் 1965இல் எழுப்பப்பட்டு அந்தக் கிராமம் முற்றாக பள்ளமாக்கப் பட்டு விட்டது. பாக்கு நீரிணை வடபகுதி எல்லையை குறுக்கிவிடுமோ என்ற அச்சமும் அப்போது தெரிவிக்கப் பட்டன. ஆயினும் இந்தத் தொழிற்சாலை சுற்றுவட்டாரத் திற்கு தந்த வளங்கள் அதிகம். காங்கேசன்துறை வீதியில் முகப்பைக் கொண்டதாக இந்தத் தொழிற்சாலை எழுப் பப்பட்டிருந்தது.

சூழையிலிருந்து சுன்னாம்புக் கல் பொடியாக்கப்படு வது அனலை கக்கி வெளிப்போகும் கழிவுத் தூசிகளை கடத்த ஒரு பெரும் குழாய் வானுயர எழுப்பப்பட்டிருந்து. அந்தப் புகைக்குழாயூடாக 24 மணி நேரமும் புகை வெளிபட்டுக் கொண்டேயிருக்கும். புகையோடு சேர்ந் துள்ள தூசிகள் காட்டுத் திசை மாறும்போது சுற்றுக் கிராமங்களை குறிப்பாக வீட்டுக் கூரைகள், தோட்டங் களை எந்தநேரமும் தூசிப்படலமாக்கிக் கொண்டிருக் கின்ற காட்சிகளும் இந்த காற்று மாதக் காலங்களில் காணக் கூடியதாக இருந்தது. சுமார் 1 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த வானுயர்ந்த கட்டிடங்கள் வியாபித்திருந்தன. 3000 வரையான தொழிலாளர்களுக்கு இந்தத் தொழிற்சாலை வேலை வாய்ப்பு தந்தது. வலிவடக்கு பிரதேசங்கள் விவ சாயக் கிராமங்களை கொண்டிருந்தது. தோட்டச் செய்கை மூலமான வருவாயை நம்பி வாழ்ந்த மக்கள் இப்பிரதேசத் தவர்கள். இவர்களில் பெரும்பான்மையினரான குடும்பங் களுக்கு இத்தொழிற்சாலை வேலை வாய்ப்பு தந்தது. கூலித் தொழிலாளர்களின் தேவையை இத்தொழிற் சாலை சுற்றுப் புற தொழிலாளர்களைக் கொண்டே நிரப்பிக் கொண்டது.

காலை, பிற்பகல், மதியம் என்று தொழிலாளர்களின் வேலை மாற்றத்தை தெரிவிக்கும் பயர்எட் மணியோசை ஒலி சுற்றுக் கிராமங்களுக்கு எந்தநேரமும் சொல்லிக் கொண்டேயிருக்கும். காலை, மாலையென்று தொழிலா ளர்கள் நாலா திசைகளிலும் இருந்து காங்கேசன் துறை தொழிற்சாலை நோக்கி வருவது வீதிகளில் தினசரி காட்சி. காக்கிநிறத்திலான கட்டை காற்சட்டை, அதே நிறத்திலான மேல்சட்டை என்பது தொழிலாளர்களின் அணி உடை. கண்ணிவெடிகள் மூலம் சுண்ணக்கல் பிளக்கப்படுவதும் அவை பெரும் அரைப்பு இயந்திரங்கள் மூலம் ஓயாது அரைக்கப்பட்டு பொடியாக்கப்படுவதுமான செயற்பாடு கள் தொழிற்சாலையை தூசியால் மூழ்கடித்துக் கொண் டிருக்கும். தொழிலாளர்களின் உடல் முழுவதும் தூசிப் படலம் மூடிக் கிடக்கும். தினமும் வீடு திரும்பியதும் தலை முழுகி உடலை சுத்தமாக்கும் தேவை இந்தத் தொழிலாளர்களுக்கு இருந்தது. இவர்களின் சேவையை பாராட்டி 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை துவிச்சக்கர வண்டி பரிசளிக்கும் நிகழ்வுகளும் நடைபெற்றன.

தினமும் உடலை தூசி மூடி விடுவதால் தோல் மயிர் துவாரங்களில் தூசி படிந்து நோயாளர்களானதும் இவர்க ளில் அநேகம், 30 ஆண்டுகளுக்கு மேல் இங்கு தொழிலா ளர்களாக பணி புரிந்து ஓய்வு பெற்ற எமது குடும்ப உறவு அம்பனை நாகலிங்கம் அம்மானும் இதனால் தான் மரணித்தார் என்று கூறப்படுகிறது. மாறாத தோல் புற்று நோய் இவருக்கும் ஏற்பட்டிருந்தது. தோட்ட வருமானம் வீட்டுச் செலவை ஈடுகட்ட, இந்த வருவாயில் சீட்டுக் கட்டி கல்வீடு கட்டிக் கொண்டோர் இந்தச் சுற்றுப்புறத்தில் அதிகம். தென்னிலங்கை உட்பட பிற இடங்களிலிருந்து குடும்பமாக நிலையாக வந்து உத்தியோகம் பார்ப் போரும் இந்த சீமெந்துத் தொழிற்சாலையில் இருந்தார் கள். இவர்களுக்கென மாஞ்சோலை என்ற பின்புற கிராமத் தில் குடியிருப்பு மனைகள் கட்டப்பட்டிருந்தது. பௌத்த விகாரை, சிங்களப் பாடசாலை என்பன இவர்களுக்காக காங்கேசன்துறையில் இயங்கின.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

ஆனாலும், 1977 கலவரம் வரை இது நில ஆக்கிரமிப்புத் திட்டம் என்ற கண்ணோட்டம் எழவில்லை. உள்ளூர் மக்க ளோடும் இந்தக் குடும்பங்கள் நெருங்கிய உறவை ஏற்ப டுத்திக் கொண்டிருந்தார்கள். தொழிற்சாலைக்கான வருகை தரும் தொழிலாளர்கள் மூலம் அயலில் உள்ள உணவகங்கள், தேனீர்க் கடைகள், பலசரக்குக் கடை கள் என்று பயன்பாட்டைத் தந்தன. சீமெந்துத் தொழிற் சாலை நீடிக்கப்பட்ட புகையிரதச் சேவை ஏற்றுமதி, இறக் குமதிக்கான வாய்ப்பை தந்தது. காங்கேசன்துறை துறை முகம் இதனை பெற்றுக் கொடுத்தது. பலாலி விமான நிலையம் என ஏனைய இடங்கள் உட்பட கோயில்கள், பள்ளிகள் என இந்த தொழிற்சாலையினுடைய வளத்தா லும் வருமானத்தாலும் இருப்பாலும் பயன்கண்டது என்று கூறலாம்.

ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்க படிப்படியாக சீமெந்துத் தொழிற்சாலை ஆட்டம் காணத் தொடங்கியது. கம்பீரமாக எழுந்து நின்ற இந்தத் தொழிலகம் நிர்மூணமானது. இராணுவ வதிவிடமாக இது மாற, சுற்றுக் கிராமங்களுக்கு ஷெல் அடிகளால் நெருக்குவாரங்கள் கொடுக்க ஆள் அர வமற்றதாக இந்தக் கிராமங்கள் மாறி புதர் மண்டிக் காடாகின. 25 ஆண்டு இடைவெளி போர் ஓய்வு கண்டது. போரின் பின்பான வடுக்கள் இந்த நிலத்தில் மாறாமல் நிற்கின்றது. எல்லாவற்றையும் இழந்தோம். என்று எப் போது மீண்டும் பெறப்போகின்றோம்.

# கோர்த்து விடும் செய்திகள்

### ■ ஆலயங்களில் ஒலிக்கும் இயக்கப்பாடல்கள்

புதுவையின் வரிகளும் கண்ணனின் இசையும் இணைந்த பாடல்கள் காலத்தால் அழியாத இலக்கியப் படைப்புக்கள். அவை இப்போதும் தாயகத் தில் கோவில்களில் நாதசுரங்களில் இசைக்கப் படுகின்றனவாம். அதுக்குச் சட்ட ரீதியான தடை செய்ய முடியாது. ஆமிக்காரன் வாசிச்ச வையைக் கொண்டு போய் முகாமில் வைத்து கும்ம மட்டுமே முடியும். அதுக்கும் பயப்படாமல் வாசிக்கப்படுகின்றதாம்.

### ■ சபாஷ்ஷ் சரியாஆஆஆஆஆஆன் போட்டி

அமெரிக்க அதிபர் தேர்தலிலும் பார்க்க இரு கட்சிகள் சார்பிலும் யார் வேட்பாளர் என்ற தேர்தல்தான் பெரும் போட்டியாக இருக்கும். அது இந்த முறை வடக்கில நடக்கத் தொடங்கிவிட்டதாம். கூட்டமைப்பில் யார் பாராளமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றது என்று கடும் போட்டியாம். நிறை யக் கழுத்து அறுப்புக்களும் நடக்குதாம். பெரிசு தனக்கு தேசியப் பட்டியல் எண்டுட்டுதாம். அதால கிழக்கில அவற்றை இடத்தில யார் போட்டி என்றதில குத்து வெட்டாம். பின்கதவால வந்த பவர் ஸ்டார் வடமராட்சியில ஒரு பணி மனை திறந்தாராம் அது திரு தரமானவர் ஏற்கனவே திறந்த பணிமனைக்குப் போட்டியாம்.

சட்டத்துறையில இருந்து ஓய்வு பெறும் புள்ளிகள் ஏற்கனவே புங்குடுதீவில புடுங்குப் பட்டினம். எல்லாம் போதும் போய் கம்பஹா மாவட்டத்தில இறங் குவம் எண்டும் யோசிக்கினமாம். அங்க வத்தளை முதல் நீர் கொழும்புவரை தமிழினம். ஆனா மனோ சம்மதிக்க வேண்டும்.

### ■ ஒண்டு கூடீட்டாங்களப்பா ஒண்டு கூடீட்டாங்கள்

2009-ம் ஆண்டு ஐநா மனித உரிமைக்கழகத்தில் இலங்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் கொண்டு வந்த போது அதை இந்தியா வுடனும் சீனாவுடனும் சேர்ந்து இலங்கையைப் பாராட்டும் தீர்மானமாக மாற்றிய தென் ஆபிரிக்கா, சீதையைப் பிடிக்க வந்த மாய மான் போல் தமிழர் போராட் டத்தை அழிக்க வந்த எரிக் சொல்ஹெய்ம், மங்கள சமரவீர ஆகியோரை உலகத் தமிழர் பேரவையினரும் சுமந்திரனும் இலண்டனில சந்திக்கினமாம். சந்திப்பின் நோக்கம் எப்படி பன்னாட்டு விசாரணை வர விடாமல் தடுப்பது என்பது போலத்தான் இருக்கின்றது. ஏற்கனவே சுமந்திரன் பன்னாட்டுத் தரம் வாய்ந்த உள்நாட்டு விசாரணை என்று புசத்திக் கொண்டு திரிஞ்சவர். அருட் தந்தை புது டில்லிக்கு மருண்ட தந்தை. ஆரைக் குடி கெடுக்க இந்த ஆண்டி வேசம்?

### ■ பிச்சுப் புடுங்கின 13ஐ ஒட்ட வைக்கவோ?

அரசியல் அமைப்புப் பேரவைக்கு திரு இரா சம்பந்தனை நியமிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு, ஆகிய கட்சிகள் ஓமெண்டிருக்கினமாம். ஏற்கனவே பிச்சுப் புடுங்கின 13 ஐ ஒட்ட வைக்கப் போயினமோ அல்லது இன்னும் பிய்க்கப் போகினமோ ?

### ■ வழக்குக்காரனில வழக்கு

எல்லார் மேலேயும் வழக்குப் போட்டுக் கொண்டிருக்கின்ற சூனா சுப்பிர மணிய சுவாமியில ஒரு வழக்கு போட்டிருக்கினமாம். மசூதியை உடைப் பதில் தப்பில்லை எண்டு சொன்னபடியால் அசாம் நீதிமன்றத்தில் இவருக்கு எதிரா வழக்குப் போட்டினமாம். இந்தாள் அங்க போகதபடியால் பிடிவிறாந்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

*- ஊருளவாளி*



எங்கள் நாட்டில் எங்கள் தேசியக்கொடி
மட்டும்தான் உயரப்பறக்கமுடியும்...
ஏன் தெரியுமா ?
அது... எங்கள் புலி வீரர்களின்
குருதியால் சிவந்த கொடி
புலிக் கொடி !

TrainingConnect
For British Citizenship and Indefinite Leave to Remain (ILR) | All Applicants after 28th October 2013
Home Office Approved Test | City & Guilds Approved Centre
Life in the UK Course B1 Speaking & Listening
- Settlement
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport/Naturalisation
IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test



City & Guilds Approved Centre
OUR 100% COMMITMENT
We Train You until You Pass | FREE INITIAL ASSESSMENT
0207 099 2400
694-712 London Road, Hounslow, TW3 1PG
contact@trainingconnect.co.uk | www.TrainingConnect.co.uk

# பாலா அண்ணை சொன்ன இரகசியமும் பேச்சுக் கேக்காத தலைவரும்...



வணக்கம் வணக்கம் எல்லாருக்கும் வணக்கம்

என்ன அப்பு இண்டைக்கு கலாதியா 3 தரம் வணக்கம் வைக்கிறார் எண்டுதானே யோசிக்கிறியள்.

தம்பி பிழையா நினைக்கக்கூடாது. நான் இப்ப கொஞ்சம் பிசி தம்பி. உங்களுக்கு தெரியும்தானே எங்கயும் பிரச்சனை எண்டால் என்னட்டைதான் வந்துநிப்பாங்கள்.

நான் இப்ப பாலா அண்ணை சொல்லிப் போட்டுப் போன விசயங்களை தம்பி ஒரு புத்தகமா எழுதிக் கொண்டிருக்கிறன்.

ஏனப்பு இப்ப அவசரம் எண்டு கேப்பியள் என்ன?

உனக்கு சொன்னா என்ன தம்பி. பாலா அண்ணை கடைசி நேரத்தில சரியான கவலையோட கனக்க இரகசியங்களை சொன்னவர். ஓமோம் தலைவரைப்பற்றியும் தான்.

உந்தச்சண்டையில எல்லா தளபதிமாரும் செத்துப் போடுவினம் எண்டும் சொன்னவர் தம்பி. எனக்கு அப்ப அதைக்கேக்க பயங்கர சொக்கா இருக்கும் எண்டும் நீர் நினைப்பீர். ஆனா எனக்கும் தெரியும் தம்பி.

அமெரிக்கன் எங்க ஆப்பு வைப்பான் எண்டும் சீனாக்காரன் எங்க சீண்டுவான் எண்டும் எங்கட இந்தியக்காரன் விடுவானோ எண்டு எனக்கு எப்பவோ தெரியும் தம்பி.

பாலா அண்ணை சொன்னவர் தம்பி "முல்லைத்தீவு சிகரம் கிளிநொச்சி தகரம்". முல்லைத்தீவை விட்டா பெரிய பிரச்சனை எனக்கு தெரியும்.

இதை உடன போன் அடிச்சு கிளிநொச்சியில ஒரு பொடியனுக்கு சொன்னனான் தம்பி. அவன் கேக்கல்ல.

இந்த இராணுவ இரகசியம் எங்கட தலைவருக்கு தெரிஞ்சிருந்தா இந்தச்சண்டையில வெண்டிருக்கலாமடா.

எனக்கும் பாலா அண்ணைக்கும் தெரிஞ்ச இந்த இரகசியத்தை ஏன் எங்கட தலைவர் அறிஞ்சுகொள்ளாமல் இருந்தவர் எண்டு நீங்கள் யோசிக்கலாம்.

ஆனா இயக்கம் ஆரம்பிச்ச காலத்திலயிருந்து ஆயுதம் தூக்கினது நான்தான் தம்பி. இயக்கம் இடைக்கிடை போர்நிறுத்தம் செய்யும் சமாதானப் பேச்சுவார்த்தை செய்யும்.

நான் அப்பிடியான ஆள் இல்லை தம்பி. என்ர ஆயுதத்தை நான் ஒருக்காலும் வைக்கல்ல.

தலைவரோட சாப்பிடக்க தலைவரும் அடிக்கடி அதைச் சொல்லுறவர்.

கருணா பிரச்சனை வரமுதலே பாலா அண்ணை சொன்னவர் என்ன. கருணாவில ஒரு கண்ண வைச்சிரடாப்பா விளையாட்டுக்காட்டப்போறான் எண்டு.

தலைவர் கேக்கல்ல என்ன.

நீங்கள் கேக்கலாம் தலைவர் கேக்காட்டி ஒருக்கா பொட்டு விட்ட எண்டாலும் சொல்லியிருக்கலாம் தானே எண்டு.

நீங்கள் அப்பிடி ஒரு கேள்வி கேக்கலாம். ஆனா உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமோ.

எனக்கு முன்னால பொட்டன் இருக்கமாட்டான் என்ன? சிரியாதை தம்பி. உண்மையாத்தான் சொல்லுறன் என்ன. அவ்வளவுக்கு என்னில அவனுக்கு மதிப்பு. ஏன் தெரியுமோ?

நாங்கள் பெரிய வகுப்பு படிக்கக்க அவன் சின்னப் பொடியன் தம்பி.

அப்பிடிப்பட்ட பொடியனிட்ட நான் அப்பிடிக் கேக்க கூடாது என்ன?

கடைசியா மாவீரர் நாள் உரை வரப்போகுது. சற்றலைற் போன் எடுத்து அந்தச்சண்டை நேரத்திலயும் கோல் எடுத்து சொன்னனான் தம்பி. இந்தியா எங்கட பிறண்ட்ஸ் எண்டு தலைவர மாவீரர் நாள் உரையில சொல்லச் சொல்லி.

தலைவர்ர கடைசியா வந்த உரையை பாருங்கோ ஒரு சேஞ் இருக்குது என்ன? என்ர ஆயுதத்தின்ர பவர் தம்பி.

அந்தநாளல எம்.ஜி.ஆருக்கு தலைவருக்கும் லிங்கை ஏற்படுத்த எத்தினை கஸ்ரப்பட்டனான் தெரியுமே.

தலைவர்ர படம் பாலா அண்ணையின்ர படம் எம்ஜிஆரின்ர படம் எண்டு போட்டு ஒரு இம்பிறசன் கொண்டு வந்தது நான் தான் தம்பி.

இப்ப என்னத்திற்கு கடுமையா யோசிக்கிறாய். என்னண்டாலும் கேள் தம்பி.

எனக்கு விளங்குது. கடைசியா பாலா அண்ணை அந்த இரகசியங்களை என்னட்டை சொன்னவர் தானே. அதுகளை ஒருக்கா அறிவம் எண்டுதானே.

குறைநினைக்காத தம்பி நான் அதுகளை இப்ப சொல்ல மாட்டன்.

ஆனா என்ர ஆயுதத்திற்கு எப்பவும் றெஸ்ற் இல்ல தம்பி.

எழுத்தாயுதம் தம்பி எழுத்தாயுதம்.

ஊ..... ஊ....... டும்

என்ன தம்பி நக்கல் அடிக்கிறாய் என்ன?

நீ கெட்டிக்காறனடா ?

உடன பிடிச்சிட்டாய் என்ன?

அப்ப வரட்டே.

ஆங்கிலத்தில் வெளிவந்த முன்னாள் உதயன் பத்திரிகை ஆசிரியர் வித்தியாதரனின் நேர்காணலை அடிப்படையாக கொண்ட பதிவு

*நன்றி: tamilleader.com*

# அடையாளம்

பக்கத்துவீட்டுக்காரன்
செத்து புழுத்து மணந்தாலும்
எட்டிப்பார்த்து ஏன் எண்டு
கேட்கா தேசத்தில் வாழ்ந்தாலும்...
இப்போதும் ஈழத்தமிழராய்த்தான்
வாழ்கிறோம்.
எனக்கொண்டெண்டால்
பத்துமைலுக்கப்பால்
வாழும் என் நண்பன்
ஓடி வருவான் அவனுக்கு
ஒண்டெண்டால் நான் ஓடிப்போவன்
கிழமையில் ஒருநாள் எண்டாலும்
அவன் வருவான்
இல்லையெண்டால் நான் போவன்

பிறந்தநாள் மண்டபத்தில்
கதிரை காணாமல் வருது
கொத்துரொட்டியும் பாணும்
பருப்பும் ரோல்சும் வடையும்
உடன் ஆட்டிறைச்சியும்
புட்டும் இடியப்பமும்
சொதியும் சம்பலும் ஒடியற்கூழும்
இன்னும் தமிழ்க்கடைகளில்
விற்பனைக்கு இருக்கு

கோயில்களும், திருவிழாவும்
தேரும் தீர்த்தமும்
கும்பாபிசேகங்களும்
மணிக்கடைகளும் அன்னதானமும்
கொண்டக்கடலையும்
கச்சானும் இங்கையும் இருக்கு...
கோவில் நிருவாகச்சண்டையும்
சங்க பொதுக்கூட்ட சண்டையும்
திருவிழா ஆர் செய்யுறது எண்ட
குழப்பமும் இப்பவும் இங்க இருக்கு..

அடுத்த தலைமுறையோட
புலம்பெயர்தமிழன்
செத்துப்போவான்
எண்டு எவன் சொன்னவன்?
தமிழ்பள்ளிக்கூடம் இருக்கு
விளையாட்டுப்போட்டி இருக்கு
ஆடிப்பிறப்பு இருக்கு
தமிழ்தின போட்டிகள் இருக்கு...
சின்ன சின்ன பிள்ளைகள்
தமிழ்ப்பேச்சும் இருக்கு...

காத்தான் கூத்து இருக்குது
நாடகம் இருக்குது
வில்லுப்பாட்டு இருக்குது
கூட்டு மேளம் இருக்குது
பறையும் இருக்குது
எந்த மடையன் சொன்னான்
அடுத்த தலைமுறையோட
வெளிநாட்டில் தமிழ்
செத்துப்போகும் எண்டு?
கொல்லும் குளிரிலும்

வேட்டியும் சால்வையும்
பட்டுச்சீலையும் கட்டியே
இப்பவும் இங்க கோவிலுக்குப்போறம்
ஜீன்சும் சேட்டும் போட்டு
அங்கபிரதட்சணை செய்வதுமில்லை
காவடி எடுப்பதும் இல்லை..
எந்த அறிவுக்கொழுந்து சொன்னான்
எங்கள் கலாச்சாரம் வெளிநாட்டில்
அழிந்துவிடும் எண்டு?
இங்க இப்பவும்
இரவு பத்துமணிக்கு பின் வந்தால்
அம்மா ஏசும் அப்பா அடிக்கும்
அண்ணா முறைப்பான்...
தங்கச்சி மூஞ்சையை நீட்டுவாள்..
என் காச்சட்டை ஒட்டையை
அம்மாதான் தைக்கிறா
என் உடுப்புகளை தங்கச்சிதான்
தோய்க்கிறாள்

எவனடா சொன்னது
அடுத்த தலைமுறையோடு
பண்பாடு வெளிநாட்டில்
அழிஞ்சுபோடும் எண்டு??
மாதாமாதம் அப்பம்மாவுக்கும்
அம்மம்மாவுக்கும் அம்மாதான் காசு
அனுப்புறா...
பத்து வருசம் கழிச்சும்
மாமியின் மூத்த மச்சாளின்
சாமத்தியவீடு அப்பாவின்
இரண்டுமாத சம்பளத்தில்தான்
நடந்தது..

அப்பப்பாவின் செத்தவீடு
என்ர செலவு அம்மம்மா
செத்தாலும் அதுவும்
என்ர செலவுதான்
ஊரில எத்தின பேரன் இருந்தாலும்
ஆயிரம் மைல் கடந்து நான்
இருந்தாலும் எனக்கும் உரிமை
இருக்கு உரித்தும் இருக்கு

எந்த லூசன் சொன்னவன்
வெளிநாட்டுக்கு போனவங்கள்
வாயை பொத்திக்கொண்டு இருக்க
வேணும் எண்டு??
என்னதான் சம்போ போட்டு
முழுகினாலும்
என்ர தலையில வீட்டு முற்றத்து
மண்ணும் என்னதான்
கைகழுவினாலும்
கரவலை மீன் கறி வாசமும்
போகுதேயில்லை...
ஆயிரத்தில ஒண்டு வெள்ளைகள்
போல மாறினாலும்
தொள்ளாயிரத்து தொண்ணூற்று
ஒன்பதும் தமிழனாத்தான் வாழுறம்.

-தமிழ்ப் பொடியன்-


திருமண நிகழ்வுகள், பிறந்த நாள் விழாக்கள், வியாபாரக் கருத்தரங்குகள்
என்பவற்றை மிகச் சிறப்பாக நடாத்திட தொடர்பு கொள்ளுங்கள்

- Capacity of 750 standing or 350 seated
- Licensed until 6am
- Licensed for Marriage
- Extensive Car Park




Birthdays , Corporate Private Hire, Weddings, Club Nights, Day Hire

Crystal

Crystal Club
1 Poppin Building Southway, Wembley,
Middlesex, HA9 0HB

For More Details : 020 3576 5765

✦ Facebook: /crystalclubs ✦ Twitter: @crystalclubs ✦ E-mail: info@crystalclubs.com

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 33 வயது, 5'9" UK citizen graduate working as a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4347

2. 31 வயது, 5'5" work permit Graduates working as a financial sector. தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4650

3. 31 வயது, 6'1" PSW visa graduates working as a Electronic Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4687

4. 35 வயது, 5'6" British citizen graduates working as a Store Manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3481

5. 31 வயது, 5'8" UK citizen graduate working as a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3361

6. 35 வயது, 6'2" UK citizen graduate working as a financial sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4510

7. 33 வயது, 5'6" UK citizen graduate working as a manager of five star hotel தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5258

8. 32 வயது, 5'5" work permit graduate working as a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3397

9. 35 வயது, 5'6" UK citizen graduate working as a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4169

10. 32 வயது, 6'0" UK citizen graduate doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 587

11. 31 வயது, 5'6" Divorced UK citizen doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5343

12. 34 வயது, 5'5" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5267

13. 32 வயது, 5'6" British citizen doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3272

14. 27 வயது, 5'8" Work permit graduate. Working as a Tesco team Leader தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5451

15. 39 வயது, 5'10" Divorced British citizen graduates now studying PHD தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5444

16. 29 வயது, 5'10" Asylum seeker graduates. currently doing CIMA தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5446

17. 58 வயது, 6'0" Divorced France citizen working as a cashier தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5452

18. 53 வயது, 5'9" widowed living in Qatar working as a Information Technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5453

19. 30 வயது, 6'2" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5454

20. 30 வயது, 5'11" British citizen graduate working as a manager in Bank தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5433

21. 35 வயது, 6'2" Permanent residence graduate working in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5428

22. 29 வயது, 6'0" Graduate manager in a company in India தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5419

23. 26 வயது, 5'9" EU citizen living in uk accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5388

24. 28 வயது, 5'8" EU visa Graduate working as a Team leader in a Super market in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5423

25. 37 வயது, 6'1" Divorced graduate discreation leave to remain visa eligible to apply permanent residence and living in uk for the past 17 years and doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5420

26. 35 வயது, 5'8" Divorced British citizen self employed graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5418

27. 30 வயது, 6'1" work permit visa Engineer living in Singapore தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5414

28. 44 வயது, 5'7" Divorced German citizen driver living in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5410

29. 31 வயது, 5'8" Permanent residence graduate working as a support engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4927

30. 30 வயது, 5'10" US citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5407

31. 46 வயது, 6'0" Permanent residence working as machine operator in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5334

32. 30 வயது, 5'6" British citizen Doctor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5406

33. 51 வயது, 5'8" Divorced permanent residence in Ireland Graduate managing director in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5405

34. 30 வயது, 5'8" student visa Engineer in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5403

35. 35 வயது, 5'6" student visa Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5396

36. 53 வயது, 5'7" Permanent residence in uk widower living with his daughter and working as a caretaker in a school தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5383

37. 31 வயது, 6'0" Business visa graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5395

38. 38 வயது, 5'5" Divorced Born and brought up in uk Engineer working as a company director தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5393

39. 37 வயது, 5'6" living in Uk for the past 17 years Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4633

40. 33 வயது, 5'7" Permanent residence in uk working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5383

41. 31 வயது, 5'8" Student visa self employed graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5378

42. 34 வயது, 5'8" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5372

43. 37 வயது, 5'3" British citizen working as a manager in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5371

44. 27 வயது, 5'10" 3 year Entreprenuer visa Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5370

45. 37 வயது, 5'4" Asylum seeker living in uk for the past 14 years தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5364

46. 37 வயது, 5'11" British citizen working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5355

47. 37 வயது, 5'11" British citizen working in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5352

## மணமகன் தேவை

1. 26 வயது, 5'4" born in UK Graduate working financial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3504

2. 30 வயது, 5'3" British citizen graduate working in school teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4629

3. 29 வயது, 5'3" British citizen graduate working Assistant financial controller தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4477

4. 29 வயது, 5'4" British citizen graduate working in Accountants தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4096

5. 30 வயது, 5'2" British citizen graduate working as Accounts Assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4754

6. 31 வயது, 5'6" British citizen working as an investment banker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1722

7. 27 வயது, 5'2" British citizen as a doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1408

8. 29 வயது, 5'5" British citizen working medial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3615

9. 29 வயது, 5'2" British citizen working nurse தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4681

10. 29 வயது, 5'2" British citizen working medial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3615

11. 29 வயது, 5'7" British citizen graduate working as a information technology தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4703

12. 29 வயது, 5'7" France citizen working as a Administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4147

13. 30 வயது, 5'8" British citizen working medial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

14. 36 வயது, 5'1" Divorced Asylum seeker living uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5438

15. 30 வயது, 5'4" Living in Sri Lanka Graduate working in a English teacher at school தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5439

16. 25 வயது, 4'8" Living in Sri Lanka Graduate working in a maths teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5447

17. 26 வயது, 5'4" British citizen as a doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5448

18. 21 வயது, 5'4" Living in Sri Lanka working as a pharmacist தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5449

19. 25 வயது, 4'8" Living in Sri Lanka Graduate working Administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5450

20. 35 வயது, 5'3" Living in Sri Lanka Graduate working as a accounts executive தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5425

21. 22 வயது, 5'4" Permanent residence in UK graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5435

22. 32 வயது, 5'4" EU citizen graduate living in Germany தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5431

23. 24 வயது, 5'1" EU citizen graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5424

24. 29 வயது, 5'6" British citizen Graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5417

25. 27 வயது, 5'5" British citizen MBBS doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5413

26. 30 வயது, 5'1" British citizen Graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5400

27. 30 வயது, 5'10" German citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5399

28. 25 வயது, British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5398

29. 28 வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5397

30. 42 வயது, 5'3" Permanent residence in uk divorced working in a factory தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5374

31. 30 வயது, 5'6" Graduate nurse living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5391

32. 25 வயது, 5'4" German citizen doctor living in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5376

33. 27 வயது, 5'6" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5360

34. 29 வயது, 5'4" student visa graduate working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5354

35. 32 வயது, 5'3" British citizen Graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5345

36. 26 வயது, 5'3" British citizen Graduate Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5343

37. 25 வயது, 5'0" British citizen Graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5331

38. 35 வயது, 5'2" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5329

39. 22 வயது, 5'2" இந்தியாவில் வசிக்கும் இலங்கை மணமகளுக்கு (Engineer) தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5317

40. 23 வயது, 5'2" British citizen Graduate working in a company மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5225

41. 28 வயது, 5'3" Discretion leave to remain visa 3 year visa eligible to apply permanent residence in uk graduate accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

42. 31 வயது, 5'2" British citizen Graduate working in a medical sector மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388

43. 25 வயது, 5'0" பிறப்பிலிருந்து வாய் பேச முடியாத மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5299

44. 30 வயது, 5'0" Graduate working as a Technical officer in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5291

45. 21 வயது, 5'1" இந்தியாவில் வசிக்கும் இலங்கைப் பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5236

46. 30 வயது, 5'1" British citizen Graduate.working as a Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5282

47. 29 வயது, 5'5" Graduate divorced living in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5264

48. 40 வயது, 5'6" Teacher in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5259

49. 30 வயது, 5'4" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5252

50. 29 வயது, 5'3" lawyer working in Australia தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5246

51. 24 வயது, 5'5" Graduate german citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5245

52. 24 வயது, 5'5" Engineer living in India தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4902

53. 24 வயது, 5'3" British citizen accountant working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5215

54. 43 வயது, 5'4" British citizen divorced working as a care coordinator in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5189

55. 30 வயது, 5'7" British citizen chatered accountant in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5158

56. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5169


57. 33 வயது, 5'4" British citizen graduate student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5162

58. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5154

59. 33 வயது, 5'7" Canadian citizen graduate working in a mediacal sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5125

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# ஹரோ மேயராக சுரேஸ் கிருஸ்ணா பதவியேற்றார்



ஹரோ உள்ளூராட்சிச் சபையின் புதிய மேயராக லண்டன் பாபா என அழைக்கப்படும் திரு. சுரேஸ் கிருஸ்ணா தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்தவருடம் உதவி மேயராகத் தெரிவு செய்யபட்ட நிலையில் புதிய மேயருக்கான தெரிவு கடந்த வாரம் நடைபெற்றபோது 32 உறுப்பினர்கள் திரு. கிருஸ்ணாவிற்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

2010 இல் தமிழர்கள் அதிகமாக வாழும் Rayners Lane வட்டாரத்தில் தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்டுத் தெரிவான சுரேஸ் கிருஸ்ணா 2014 இல் இரண்டாவது தடவையாக தெரிவு செய்யப்பட்டார். இவரது மனைவி சசிகலா சுரேஸ் அவர்களும் ஹரோ உள்ளூராட்சி சபையில் உறுப்பினராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேயர் பதவிக்கு தெரிவானதன் பின்னர் அவையில் உரைநிகழ்திய மேயர் சுரேஸ் கிருஸ்ணா. "இன்றைய நாள் எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் பெருமைக் குரிய நாள். ஏனெனில், ஹரோ மக்களுக்கு பணியாற்ற வேண்டும் என்ற எனது நீண்ட கால விருப்பம் இன்று ஈடேறியிருக்கிறது" எனக் குறிப்பிட்டார்.

ஏற்கனவே திரு. மனோ தர்மராஜா அவர்கள் ஹரோ உள்ளூராட்சி சபையின் மேயராக இருந்துள்ளார். அவை முதல்வராக திரு. தயா இடைக்காடர் பணியாற்றியிருக்கிறார். அந்தவகையில் சிறப்புப் பெறும் இன்னொரு தமிழராக இருக்கிறார் திரு. சுரேஸ் கிருஸ்ணா.

லண்டனில் தயாரிக்கப்பட்ட 'சூரியா', 'நீரைக்காணாத வேர்கள்', 'தமிழ் எம்ஜ7' ஆகிய திரைப்படங்களில் கதா நாயகனாக நடித்திருக்கும் சுரேஸ் கிருஸ்ணா தமிழ் எம்ஜ 7 திரைப்படத்தின் இயக்குனராகவும் பணியாற்றினார். ரஜனிகாந் நடித்த 'பாபா' திரைப்பட பாடலுக்கு ரஜனி ஏற்றிருந்த வேடத்தில் நடித்ததன் மூலம் லண்டன் பாபா என்ற பெயர் அவருடன் தங்கிவிட்டது.

வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரான சுரேஸ் கிருஸ்ணா அதன் பழைய மாணவர் சங்க லண்டன் கிளை உட்பட பல்வேறு சமூக நிறுவனங்களுக்கு உதவிபுரிந்து வருகிறார்.

# மே 18 இன அழிப்பு நினைவு நாள்



ஸ்கொட்லாந்து கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற மே 18 இன அழிப்பு நினைவு நாள் நிகழ்வுகள்

## யாழ் நூலக எரிப்பு (நினைவுக் கவிதை)

ஏன் செய்தார்
இந்த இழிவு தரும்
செய்கை தனை
சதிகாரர் எங்களுக்குச்
சகுனப் பிழை காட்ட
மூக்கை அறுத்துவிட்டு
முழு வியளம் வந்தனரா?
போக்கிரிகள் ஏன்
இந்தப் பொல்லாப்பைச்
செய்திட்டார்?
தீக்கு இரையாகத்
தேசத்தின் செல்வத்தை
ஆக்கியதால் மூடர்
அடைந்த நயமென்ன?

ஆங்கிலத்தில்
ஆரியத்தில் அருந்தமிழில்
சிங்களத்தில்
பாங்காய் அறிவு
தந்து பயன்பட்ட
நூல்களெல்லாம்
தீங்கென்ன செய்தன இத்
தீயவர்க்குத் தீயிலிட?

அன்னைத் தமிழ்
மண்ணின் அறிவுக்கு
அணைபோடும் அவலை
நினைத்து வெறும்
உரலை இடித்தனரா?
சூரியனைக்
கொள்ளியினாற்
சுட்டெரிக்க முயல்கின்ற
காரியத்தை இந்தக்
கடைப்பழிகள் ஏன்
செய்தார்?
நாசத்தைச் செய்து
நம்மை அழித்திடவா
தேசத்தின் சொத்தைச்
சிதைத்தார் முழு மூடர்

உள்ளத்தில் உண்மை
ஒளி பாய்ச்சம் பேரறிவு
வெள்ளத்தின் மீது
வெறுப்புற்ற மூடர்களாய்
மன வழுக்கை நீக்கி மதி
கூட்டும் நல்லறிவுக்
குளத்தோடு கோபித்துக்
குப்பையை ஏன்
போட்டார்கள்
தூசி விழுந்த கண்ணைத்
துடைத்து விடமாட்டாமல்
ஊசி கொண்டு
குத்தி ஒளி இழந்த பேதையராய்
தம் கண்ணில் தாமே
மண் வாரிப் போட்ட இந்த
வம்பர்களைப் பார்த்து
வரலாறு சிரிக்கிறது
மானுடமோ தன்றன்
மதிப்பைக் குறைத்திட்ட
ஈனப் பிறவிகளை எண்ணிக்
குமைகிறது
மண்ணை இழிவுசெய்ய மலம்
சொரிந்து மகிழ்ந்திட்ட
பொண்ணையரைப் பார்த்திந்தப்
பூமி முறைக்கிறது
உளங்காட்டும்
கீழ்மை உணர்வைப் பறைசெய்த
வளங்காதவாகளுக்காய்
வையம் சிரிக்கிறது
மூக்கையறுத்துத் தடிமலுக்குச்
சிகிச்சை செய்த
மொக்குத் தனத்தையெண்ணி
முழுவுலகும் அழுகிறது

சிரித்தென்ன அழுதென்ன
திருவழிந்து போனபின்னர்
உரித்தாய் எமக்கிருந்த
ஒப்பற்ற நூல்கள் தமை
அரித்த கறை யான்களுக்கு
ஆறறிவா ஓரறிவா
யார்க்கிதனால் லாபமென்று
நாய்க்குணத்தோர் கேடு செய்தார்?
அறிவை அழித்தொழிக்க
அற்பர்கள் ஏன் பாடுபட்டார்
கடலை அழுக்காக்கக் காறி
உமிழ்ந்தது போல்

முடைநாற்றச் சாக்கடையை
முல்லைக் கெறிந்ததுபோல்
அம்புலியைக் கையால் அணைக்க
முயன்றதுபோல்

அன்னை தமிழை அறிவுச் சுடர் வீசும்
பொன்னை இழிவு செய்யப்
புகையடித்துப் பார்த்தாரா?

கோயிற் சிலைக்குக்
குத்துகின்ற முள்ளெடுத்துச் சாத்தி
மகிழ்ந்திட்ட தரங்கெட்ட
செய்கையினால்
யாருக்கு நட்டம்? நாங்கள்
விழுதெறிந்த ஊருக்கா? உயிராம்
தமிழுக்கா? இல்லை
பாருக்கு, கல்விப் பயனறிந்த
யாவருக்கும்.

அன்னை தமிழீழத்தின்
அறிவுக் கருவூலத்தில்
சின்ன மதியால்
சேறிறைத்த தீச்செயலை
முழுவுலகும் பார்த்து
மூக்கில் விரல் வைக்கிறது!
இப்படியும் ஓர் உணர்வா?
இப்படியும் ஓர் பகையா?
யார் இவர்கள்?
எக் காட்டு நாய் நரிகள்?
ஏன் இவர்கட்கிந்த
இழிபுத்தி—இந்தப்
பாரின் வரலாற்றில்
பழி முடிக்க இத்தகைய
கோரச் செயலைக்
கொடுமைதனை ஓர் நாளும்
யாரும் புரிந்ததில்லை நாகரிகம்
கெட்டதில்லை

பாசிசத்திலூறிப்
பழிபுரிந்த ஹிட்லரும் தன்
நாசிப் படைகளுக்கு
ஆணையிட்டபோதினிலே
வீசு குண்டை லண்டனுக்கு
மியூசியத்தைத் தாக்காதே
என்றுதான் சொன்னான் ஏன்
சொன்னான்? அங்குதான்!
அறிவுக் கருவூலம் அடங்கிக்
கிடந்ததன்று

மோடையரோ? இந்தக் கேம
கண்ண யோதையரோ
தெற்காசியாவின்
சிறந்ததொரு நூலகத்தை
செக்கோ
சிவலிங்க மென்றோ அறியாமல்
நக்கி முகர்ந்தும் நலமெதுவும்
காணாமல் கால் தூக்கி நின்று
கழிவு செய்த பேதமையை
மறக்க முயன்றாலும் மனமதனைச்
செய்திடுமா?

பாவியர்கள் எங்கள்
படிப்புச் சுரங்கத்தைக்
காவு கொண்ட
இந்தக் கயமைத் தனந்தன்னை
நாவு கொண்டு
தூற்ற நமக்கேது சொல் உலகில்?
சாவு வந்த பின்னும் தமிழ் மீது
பற்றுடையோர்
ஆவி இவர்மீது அழுதழுது
சாபமிடும்

செய்வதையும் செய்துவிட்டு
பொய்மையிலே ஊறியவர்
கண் தீப் புனல் சொரியும்
கலைவாணித் தாயவளாம்
வெண்தாமரையாளை
வேதனைக்குள் ஆழ்த்திவிட்டு
புண்தீவிரம் குறையப் புனுகு
தடவுகிறார்
தயக்கமெதுவுமின்றித் தமிழை
அழித்தவர்கள்
இயக்கம் அமைத்தெமக்காய் என்ன
செய்யப் போகின்றார்?
கல்வி தனை மதியாக் கயவர்
எமக்காகக்
கல்சேர்த்து நூல் சேர்த்துக்
காட்டுகின்றார் பம்மாத்து
ஆடைதனைத் தூக்கி அவர்கள்
வெட்கம் போக்குதற்காய்
முகம் மறைத்து நிற்கின்றார்
முழுவுலகும் சிரிக்கிறது.

வார்த்தையினாற் சீறி வசைபாடி
நின்றாலும்
ஆர்த் தெழுந்து இந்த
அறிவிலிகள் தோற்றோட
போர்த்திறன்கள் காட்டிப்
புயலாயடித்தாலும்

கழுதையறியாது கற்பூர
வாசனையை
கல்வி அதற்கு வெறும் காகிதம்
தான் தின்று விடும்
அறிவை அசைபோடும்,
ஆர்ப்பரித்துக் கூச்சலிடும்.

ஆதலினால் என்றன் அருமை
உறவுகளே!
தீதே இயற்கையதாய்ச்
செயல்புரிவோரால் உற்ற
வேதனையைத் தூக்கி
வீசியெறிந்திடுவோம்.
பாதகர்கள் செய்யும் பழிக்கு
மருந்தாக
கல்வியிலே ஊறிக் கரைதேர்ந்து
நாமுயர்வோம்
இல்லங்கள் தோறும்
இணையில்லா நூல்கள் பல
நாம் சேர்த்து எங்கள்
நாட்டிற்காய்வைத்திடுவோம்

காய்ந்து வெடித்த
கழித்தரையில் நீர் சேர
ஓய்ந்து விடாது உடன் முகிழ்த்துப்
பூச்சொரியும்
ஆம்பர், ஒட்டி, அல்லி,
அரவிந்தமாய் மலர்வோம்.
சாம்பரிலே நின்று பீனிக்ஸ்
பறவைகளாய்
மீண்டும் எழுவோம்
விரைந்துயர்வோம், இஃதுறுதி.

— முற்றும்—

*1. சிங்ஹலயா மோடையா(மடையர்) காம கண்ண யோதையா(சோற்றுத் துருத்திகள்) என்பது சிங்களவர் தமக்கே கூறிக் கொள்ளும் பழமொழி.*
*2. இது இலங்கையரசின் வெண்தாமரை இயக்கம் பற்றியது*



# தற்கொலைப் பாதையில் தமிழ் சினிமா ?



தயாரிப்பாளர் ஜீ.வி. தற்கொலை செய்துக் கொண்டார்.

ஏவி.எம். ஏன் அமைதியாக இருக்கிறது ?

தொண்ணூறுகளின் பிரம்மாண்ட தயாரிப்பாளர் கே.டி.குஞ்சுமோன் எங்கு போனார்?

அசைக்க முடியாத ஆள் என்று பெயரெடுத்த ஆஸ்கர் மூவிஸ் ரவிச்சந்திரனை வங்கிகள் ஏன் மிரட்டுகின்றன?

சூர்யா மூவிஸ் ஏ.எம்.ரத்னம் ரத்தக்கண்ணீர் வடித்த கதையெல்லாம் தெரியுமா?

லஷ்மீ மூவி மேக்கர்ஸ் என்ன ஆயிற்று?

ரோஜா கம்பைன்ஸ் இப்போது எங்கே?

சத்யஜோதி ஃபிலிம்ஸ் எங்கே?

பிரமிட் சாய்மீரா என்ன ஆனது?

செவன்த் சேனல் மாணிக்கம் நாராயணன்?

அழகன் தமிழ்மணி ?

ராஜ் பிலிம்ஸ் ராமநாதன் ? கோவைத்தம்பி?

'வின்னர்' படத்தை தயாரித்த தயாரிப்பாளர், இப்போது துணை நடிகராக துண்டு துக்கடா வேடங்களில் நடிப்பது ஏன்?

யோசித்துக் கொண்டே போனால் இந்த பட்டியல் செஞ்சுரி அடிக்கும். வடபழனியில் மொட்டை போட்டுக்கொண்டு, வெயிலுக்கு தலையில் துண்டு போட்டுக் கொண்டு கோடம்பாக்கம் தெருக்களில் ஹவாய் செருப்பு தேய நடந்துக் கொண்டிருப்பவர்கள் யாரென்று நினைக்கிறீர்கள்? நம்ம தமிழ் சினிமா தயாரிப்பாளர்கள்தான்.

உழுதவன் கணக்கு பார்த்தால் உழக்காவது மிஞ்சும். சினிமா தொழிலில் அதுகூட கிடைக்காது. ஊரை சுற்றி வட்டிக்கு வாங்கிய கடன்தான் கழுத்தை நெறிக்கும்.

இன்னும் நாலு ஹிட் கூட கொடுக்காத இளம் ஹிரோ ஒருவர் பத்து கோடி சம்பளம் கேட்பதாக சொல்கிறார்கள். இத்தனைக்கும் அவர் நடித்த கடைசி இரண்டு படங்கள் அட்டர் ஃப்ளாப். ஹிரோவின் கவுரவத்தை காக்க தியேட்டரில் ஆள் வைத்து ஈ ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் சினிமாவின் வசூல் வரலாற்றில் மறக்க முடியாத படங்களான 'முரட்டுக்காளை'யும், 'சகலகலா வல்லவ'னும் ரிலீஸ் ஆனபிறகும் ரஜினியும், கமலும் எவ்வளவு சம்பளம் வாங்கினார்கள் என்று யாராவது 'இந்த' புதிய ஸ்டார்களுக்கு எடுத்துச் சொல்லலாமே.

சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. பொள்ளாச்சிக்கு அருகில் அந்த படத்தின் படப்பிடிப்பு. தயாரிப்பது பாரம்பரியமான நிறுவனம். நம் படத்தின் வேலைகள் எப்படி போய்க் கொண்டிருப்பது என்று பார்க்க சென்னையிலிருந்து தயாரிப்பாளர் கிளம்பிப் போகிறார்.

தயாரிப்பாளரை கண்டதுமே இயக்குநர் பதறிவிட்டாராம். "நீங்க எதுக்கு சார் இங்கே வந்தீங்க ? ஹிரோ கோச்சிக்கப் போறாரு !?" என்று விரட்ட ஆரம்பித்தாராம்.

"என்னங்க அநியாயமா இருக்கு. பணத்தை போட்டு படமெடுக்குறது நாங்க. ஒழுங்கா எடுக்கறீங்களான்னு பார்க்க வந்தா ஹிரோ எதுக்குங்க கோச்சிக்கணும் ? அவங்க அப்பாவையே வெச்சி படமெடுத்தவங்க நாங்க தெரியுமில்லே?" என்று தயாரிப்பாளர் அமைதியாக சொல்லியிருக்கிறார்.

கேரவனிலிருந்து ஹிரோ இறங்கினாராம். தயாரிப்பாளர் அவருக்கு வணக்கம் வைத்திருக்கிறார். தயாரிப்பாளரை பார்த்ததுமே ஹிரோவுக்கு கோபம் (!) வந்து, 'பேக்கப்' சொல்லிவிட்டு மீண்டும் கேரவனுக்குள் போய்விட்டாராம். தயாரிப்பாளர் முன்னிலையில் ஹிரோவுக்கு ஹிரோயினுடன் 'கெமிஸ்ட்ரி' வேலை செய்யாதாம்.

அதிர்ச்சியடைந்துப் போன தயாரிப்பாளர் தலையில் அடித்துக் கொண்டு, "இந்த தமிழ் சினிமா நாசமாதாண்டா போகப்போவுது" என்று மண்ணைத் தூற்றி அப்படியே சென்னைக்கு பஸ் ஏறினார். தியேட்டர்களுக்கு ஒழுங்காக லாபம் வரக்கூடிய படங்களாக வருடா வருடம் மூன்று, நான்கு படங்களை தயாரித்துக் கொண்டிருந்த அந்நிறுவனம் அதன் பிறகு படத் தயாரிப்பையே நிறுத்திக் கொண்டது.

இப்படிதான் தமிழ் திரையுலகம் சீரழிந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தில் இருப்பதே தோராயமாக 1300 திரையரங்குகள்தான். என்னதான் பெரிய படமாக இருந்தாலும் 700 முதல் 800 தியேட்டர்களில் ரிலீஸாவதே பெரிய விஷயம். எந்திரனோ அல்லது தசாவதாரமோ பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் வரும்.

FMS ஏரியா என்று சொல்லக்கூடிய அயல்நாடுகளில் ஒட்டுமொத்தமாக ஐம்பது, அறுபது தியேட்டர்களில் ஒரு தமிழ் படத்தை ரிலீஸ் செய்ய முடிந்தாலே அதிசயம். தெலுங்கில் மார்க்கெட் / இந்தியில் / பேமஸ் என்பதெல்லாம் டுபாக்கூர். ஷாருக்கான், அமீர்கானை எல்லாம் கூடதான் தமிழ்நாட்டில் எல்லாருக்கும் தெரியும். அவர்கள் படங்கள் இங்கே ரிலீஸ் ஆனால் கோடி கோடியாகவா வசூல் ஆகிறது?

ஒரு பக்கா கமர்ஷியல் ஹிட் என்பது இங்கே ரூ.50 கோடிதான் வசூலிக்கும். இது, முன் பின் மாறலாம். நகரங்களில் அதிகபட்சமாக (மல்டிப்ளக்ஸ் அரங்குகளில்) ரூ.120 டிக்கெட் கட்டணம், சாதாரண அரங்குகளில் 50, 60 ரூபாய். சிறுநகரங்களில், போஸ்டரிலேயே இரண்டாவது வாரத்திலிருந்து ரூ.20 கட்டணம் என்று கூவிக்கூவி தியேட்டருக்கு அழைக்க வேண்டியிருக்கிறது.

தயாரிப்பு, விளம்பரம், வினியோகம், தியேட்டர் வாடகை, QUBE/UFO கட்டணம் என்றெல்லாம் இதர செலவுகள் போக மிஞ்சுவதுதான் ஒரு படம் கொடுக்கக்கூடிய லாபம். உண்மை இப்படியிருக்க, ரூ.40 - 50 கோடியில் ஒரு தமிழ் படத்தை எடுத்தால் எப்படி லாபம் கிடைக்கும்? அட, முதலாவது தேறுமா?

பத்து, இருபது, முப்பது, நாற்பது என்று நட்சத்திரங்களுக்கு கோடிகளை தூக்கி கொட்டிவிட்டு வினியோகஸ்தர்களுக்கும், திரையரங்கு உரிமையாளர்களுக்கும், ரசிகர்களுக்கும், கடைசியாக தனக்கு தானேயும் கூட நாமம் போட்டுக் கொள்கிறார்கள் நம் தயாரிப்பாளர்கள்.

இதுவரை சோலோவாக ஒரே ஒரு ஹிட்டு கூட கொடுக்காத ஒரு ஹிரோ கேட்கும் சம்பளம் நாலு கோடியாம். மூன்று வருடங்களாக ஒரு ஹிரோவுக்கு படமே இல்லை. ஆனால், அடுத்த சூப்பர் ஸ்டார் நான்தான் என்று சொல்லிக் கொண்டு சம்பளமாக பத்து விரல்களையும் விரித்துக் காட்டுகிறாராம்.

எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் ஒரு வெற்றிப்படத் தயாரிப்பாளர் அடுத்து நான்கு படங்களாவது தயாரிக்கக்கூடிய தெம்பில் இருப்பார். இன்றோ ஒரு தயாரிப்பாளர் தன் வாழ்நாளில் மூன்று படங்களை தயாரித்து விட்டாலே அது சாதனைதான்.

இயக்குநர்களின் இன்னொரு கதை. 'டபுக்கு டபான்' டான்ஸ் ஆடுவதற்கு எதற்கு நியூஸிலாந்து லொகேஷன்? சுவிட்சர்லாந்தின் ஆல்ப்ஸ் மலைக்கு போயும் கூட ஹிரோயினின் மத்தியப் பிரதேசத்தை ஹிரோ முகரும் காட்சிகளை தானே படம் பிடித்து வருகிறார்கள். இதை ஊட்டியிலோ, கொடைக்கானலிலோ எடுத்துத் தொலைத்தால் என்ன?

ஒரு கதைக்கு எது தேவையோ, அதை தவிர்த்து அத்தனை செலவையும் தயாரிப்பாளர்களுக்கு வைக்கிறார்கள். கேட்ட சம்பளத்தை விட கெஞ்சிப்பேசி கொஞ்சம் குறைத்து ஒப்புக் கொள்ள வைத்த தயாரிப்பாளரிடம் "ஒரு மலை முழுக்க சிகப்பு பெயிண்ட் அடிக்கணும்" என்று பாடல் காட்சியொன்றுக்கு ஓர் இயக்குநர் டிமாண்ட் செய்தாராம். அவ்வளவு பெயிண்டுக்கு எங்கே போவது என்று மண்டைகாய்ந்து, கடைசியில் ஒரு பெயிண்ட் கம்பெனியிடம் பெரிய amountக்கு ஒப்பந்தம் பேசி (அந்த கம்பெனியில் இருந்து டைரக்டருக்கு கமிஷனாம்) தயாரிப்பாளர் மாதக்கணக்கில் அலைந்துத் திரிந்து, நொந்து நூடுல்ஸ் ஆகிவிட்டிருக்கிறார். கடைசியில் சுற்றுச்சூழலை காரணம் காட்டி அனுமதி கிடைக்காததால் தயாரிப்பாளரின் கல்லாப்பெட்டிக்கு அவ்வளவு சேதாரமில்லை.

இதன் பிறகு நடந்ததுதான் பகீர். "நான் கேட்கிறதை எல்லாம் நீங்க செஞ்சிக் கொடுக்க முடியலை. படம் சுமாராதான் வரும்" என்று கைவிரித்து அழவைத்திருக்கிறார் இயக்குநர். இதையெல்லாம் கேட்க நல்லாவா இருக்கு?

பதினைந்து ரூபாய் திருட்டு டிவிடிக்கு மக்கள் அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள். தியேட்டர்களை இழுத்து மூடி திருமண மண்டபங்களாகவும், ஷாப்பிங் காம்ப்ளக்ஸுகளாகவும் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் வருடா வருடம் நூற்றுக்கணக்கான கோடிகளை கொட்டி மோசமான தரத்தில் மொக்கைப் படங்களை எடுத்து வெளியிடுவதால் யாருக்கும் எந்த பயனும் இல்லை. எல்லாப் பிரச்னைகளையும் தற்காலிகமாவது மூட்டை கட்டிவிட்டு தயாரிப்பாளர்களும், படைப்பாளிகளும், கலைஞர்களும் ஒன்று சேர்ந்து தாங்கள் கற்றுக் கொண்ட மொத்த வித்தையையும் இறக்கி சினிமாவை காப்பாற்ற வேண்டிய நேரமிது. இல்லாவிட்டால் ஒரு கோவணமும் மிஞ்சாது.

பெரும் அழிவிலிருந்து ஊரையோ /உலகையோ சினிமாவில் ஒரு ஹிரோ காப்பாற்றுவான். இது கற்பனைதான். ஆனால், இதேதான் நிஜத்திலும் இப்போது நடந்தாக வேண்டும். அப்போதுதான் திரையுலகம் பிழைக்கும்.

யெஸ், ஹிரோக்கள் தங்கள் சம்பளத்தை குறைத்துக் கொள்ள முன்வர வேண்டும் அல்லது தயாரிப்பில் பங்கேற்று லாபத்தையோ நஷ்டத்தையோ எது வந்தாலும் சரிசமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இது ஒன்றும் புதிய யோசனை அல்ல. தெலுங்கு, இந்தியில் தொடங்கி ஹாலிவுட் வரை இப்படித்தான் நடக்கிறது. நம்புங்கள், இந்திக்கு அடுத்தபடி அதிக லாபக் கணக்கு காட்டும் தெலுங்கில், முன்னணி ஹிரோக்களாக இருக்கும் நால்வரின் சம்பளம் படம் ஒன்றுக்கு எவ்வளவு தெரியுமா ? ரூ.14 கோடிக்குள்தான்.

தமிழிலும் இந்த நடைமுறை வந்தால்தான் இண்டஸ்டிரி பிழைக்கும்.

- யுவகிருஷ்ணா

MARSANS
SOLICITORS & ADVOCATES
"New Law Firm in the heart of London"

Areas of law:
- Immigration
- Civil/Commercial Litigation
- Business Crime /VAT
- Commercial & Residential Property
- India Desk

Tamil Speaking Barrister and Solicitors

Contact Marsans, Solicitors and Advocates for expert legal advice and assistance.

Languages: Tamil, Hindi, Telugu, Malayalam

Marasans have dual qualified lawyers with specialist knowledge to assist on India / UK related issues such as;
- Recovery of family properties
- Matrimonial /custodial disputes
- Immigration - Tier 4 and Tier 5 sponsor license
- Asset tracing
- Sponsor licences



FIRST FLOOR, 277-281 OXFORD STREET, LONDON, W1C 2DL DX 138882 MAYFAIR Mail : email@marsans.co.uk Web : www.marsans.co.uk

PHONE: 020 7499 0620 | MOB: 07837 450 397 | FAX: 020 7499 7109 | EMERGENCY: 020 7408 5080

# சினிமா



திரை விமர்சனம்

## காக்கா முட்டை

மழையில் ஸ்லோ மோஷனில்.. வில்லனை ஓட ஓட வெட்டும் காட்சிகள் இல்லாத..

சண்டைக்காட்சிகளில், ஹீரோவின் கால் தரையிலேயே பதியாமல் வானிலேயே சுற்றி 100 பேரை அடித்து வீழ்த்துகிற சோதனைகள் இல்லாத..

நான் யார் தெரியுமா ? என் பேரு ஏன் மாஸ் தெரியுமா? என் பேரு ஏன் சுறா தெரியுமா? போன்ற வசனங்கள் இல்லாத..

திரைக்கதை டொக்கடிக்கும் போதெல்லாம்,

மெழுகுச் சிலைப் போன்ற பெண்ணுடன் டுயட் என்ற பெயரில் ஹீரோ பண்ணும் அழிச்சாட்டியங்கள் இல்லாத..

எப்பபாரு வீர வசனம் பேசும் ஆண்கள், செண்டிமெண்ட்டுகளில் கரையும் பெண்கள்.. போன்ற நாடக மாந்தர்கள் இல்லாத...

கார்கள் பறக்காத, புல்லட்கள் க்ளோஸ் அப்பில் சீறாத..

பெண்களை இழிவு படுத்தி 4 காமெடி காட்சிகள், 10 வசனங்கள், 2 பாட்டுகள் இல்லாத..

ஒரு சினிமாவை, அதாவது ஒரு நிஜ சினிமாவை பார்ப்பதற்கே மனம் அவ்வளவு நிறைவாக இருந்தது, அதனை வழங்கிய இயக்குனர் மணிகண்டனுக்கு ஒரு சல்யூட்.

சென்னை, கூவம் ஆற்றங்கரையோரம் வாழும் ஐஸ்வர்யாவுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். ஏதோ சிறிய குற்றம் ஒன்றிற்காக சிறை சென்ற கணவனை ஜாமினில் எடுக்க பணத்திற்கு படாதபாடுபடும் ஐஸ்வர்யா, உடன் வயதான மாமியாரையும் வைத்து கொண்டு பாத்திர கம்பெனியில் வேலை பார்த்தபடி, வரும் வருமானத்தில் வயிற்றை கழுவவே கஷ்டப்படுகிறார். அதனால் பிள்ளைகளை படிக்க வைக்க வழியில்லாமல் அவர்களை ரயில்வே தண்டவாளத்தில் கூட்ஸ் வண்டிகளில் இருந்து விழும் கரியை பொறுக்க விடுகிறார்.

கரி விற்று வரும் காசில் குடும்பத்தை நடத்தியபடி கணவனை மீட்க போராடும் ஐஸ்வர்யாவை புரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளும் வயதிலும் இல்லாத சிறுவர்கள் இருவரும், ஏரியாவில் நடிகர் சிம்பு வந்து தொடங்கி வைக்கும் பீட்சா கடையில் பீட்சா திண்பதற்கு ஆசைப் படுகின்றனர். அந்த சிறுவர்களுக்கு எட்டாக்கனியாக இருக்கும் பீட்சா ஆசை பேராசையாக தெரிகிறது. அது நிராசை ஆனதா.?, தடை பல கடந்து நிறைவேறும் ஆசை ஆனதா.? என்பது தான் "காக்கா முட்டை" படத்தின் வித்தியாசமும், விறுவிறுப்புமான மீதிக்கதை !

படத்தில் இரண்டு சிறுவர்கள் சகோதரர்களாக நடித்திருக்கிறார்கள். இவர்களது தாயாக ஐஸ்வர்யா. ஜெயிலில் இருக்கும் தனது கணவரை எப்படியாவது வெளியில் கொண்டு வரவேண்டும் என்று ஐஸ்வர்யா முயற்சிகள் எடுத்து வருகிறார்.

எனினும் படத்தின் பெரும்பாதி இரண்டு சிறுவர்களான ரமேஷ், விக்னேஷ் ஆகிய இருவரை சுற்றியே பயணிக்கிறது. எந்த இடத்திலும் சற்றும் தொய்வில்லாமல் இவர்களது நடிப்பு கதையை தூக்கி நிறுத்தியிருக்கிறது. படத்தில் எந்த இடத்திலும் சிறுவர்கள் நடித்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியாத அளவுக்கு எதார்த்தமாக காட்சிகளில் பதிந்திருக்கிறார்கள்.

இவர்கள் மட்டுமல்லாமல், இவர்களுடைய நண்பர்களாக வரும் சிறுவர்களும் எதார்த்தம் மீறாமல் நடித்து கைதட்டல் பெறுகிறார்கள். முகம் நிறைய மேக்கப்பை பூசிக்கொண்டு நடிகைகளுக்கு மத்தியில், ஐஸ்வர்யா அழுக்கு முகத்தோடும், நல்ல நடிப்போடும் படம் முழுக்க கம்பீரமாய் வலம் வந்திருக்கிறார். இந்த படம் இவருக்கு தமிழ் சினிமாவில் மீண்டும் ஒரு ரவுண்டு வருவதற்கான வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் என்பது உறுதி.

இதுவரையிலான படங்களில் மிகவும் வலுவான கதாபாத்திரங்களை ஏற்று நடித்து வந்த ஜோ மல்லூரி, இந்த படத்தில் சிறுவர்களோடு சேர்ந்து சிறுவனாகவே மாறியிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். அதேபோல், சூது கவ்வும் ரமேஷ், யோகி பாபு ஆகியோரும் தங்கள் கதாபாத்திரங்களை சிறப்பாக செய்திருக்கிறார்கள்.

இயக்குனர் மணிகண்டன் தனது முதல் படத்தில் மிக அழுத்தமான பதிவை தமிழ் சினிமாவுக்கு செய்திருக்கிறார் என்றால் மிகையாகாது. வெளிவருவதற்கு முன்பே பல விருதுகளை வாங்கி குவித்திருக்கும் காக்கா முட்டை இவருக்கு சினிமாவில் ஒரு எனர்ஜியை கொடுத்திருக்கிறது என்று நம்பலாம். படத்தில் நடித்திருக்கும் ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் ரொம்பவும் திறமையோடு வேலை வாங்கியிருக்கிறார் என்பது திரையில் பார்க்கும் காட்சிகள் மூலம் தெரிகிறது. இவருடைய பலமே படத்தின் திரைக்கதைதான். எந்த இடத்திலும் படம் போரடிக்கிறது என்று சொல்ல முடியாத அளவிற்கு அழகாக திரைக்கதை அமைத்திருக்கிறார்.

ஜி.வி.பிரகாஷ் குமாரின் இசை பிரகாசம், இயக்குநர் வெற்றிமாறனின் உதவியாளர் எம்.மணிகண்டனின் ஒளிப்பதிவு மற்றும் இயக்கத்தில், பீட்சாவுக்காக அலையும் சிறுவர்கள் இருவரும், அப்பாவே வேணாம், பீட்சா தான் வேண்டும் என அம்மாவிடம் அடம்பிடிக்கும் சிறுவர்களின் பிடிவாதம், தெருநாய் குட்டியை ரூ.25 ஆயிரம் விலை பேசும் அறியாமை, க்ளைமாக்ஸில் பீட்சா கடை முதலாளி சிறுவர்கள் இருவரையும் கைகூப்பி வணங்கி கடைக்குள் அழைத்து சென்று பீட்சா சாப்பிட வைத்து, பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் லாவகம்.... உள்ளிட்ட ஒவ்வொரு காட்சிகளும் "காக்கா முட்டை" - "கலர்புல் முட்டை"யாக ஜொலிக்கிறது.

*பொக்கிஷம் வலைப்பதிவு*

## சினித்துளி

### எலி எப்போ ?



வடிவேலு நடிப்பில் வெளியாகவிருக்கும் படம் “எலி”. தணிக்கைக்குச் சென்ற இப்படம் 'யூ' சான்றிதழ் பெற்றுள்ளது. 60களில் நடக்கும் கேங்க்ஸ்டர் கதைத் தளமே எலி. வடிவேலுவின் முந்தைய படமான தெனாலி ராமன் இயக்கிய யுவராஜ் தான் இப்படத்தையும் இயக்கியுள்ளார். சதா நாயகியாக நடித்திருக்கிறார். இசை வித்யாசாகர். ஜூன் 12ம் தேதி படம் வெளியாகும் என்று சொல்லப்படுகிறது. வடிவேலு இப்படத்தில் ரகசிய போலீஸாக நடிக்கிறார்.

60களில் நடக்கும் கதை என்பதால் முழுக்க முழுக்க தோட்டா தரணியின் கலையில் உருவாகியிருக்கிறது.

### ‘டண்டணக்கா’ சிக்கல் தீர்ந்தது !



ஜெயம்ரவி ஹன்சிகா நடித்திருக்கும் ரோமியோ ஜூலியட் படம் ஜூன் 12 இல் வெளியாகப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப்படத்தில் டி.ராஜேந்தர் பேசுவது போலவும் அவருடைய வரியான டண்டணக்காவை வைத்து ஒரு பாடலையும் உருவாக்கியிருந்தார்கள். அதன்பின்னர் டி.ராஜேந்தர் தன்னைப் பற்றிய எந்தவிசயமும் படத்தில் இடம்பெறக் கூடாதென்று வழக்குப்போட்டுவிட்டார். இதனால் பல கட்டங்களில் அவரிடம் சமரசப்பேச்சுகள் நடந்தன.

எவ்வித சமரசத்துக்கும் அவர் ஒப்புக்கொள்ளவில்லையாம். அதோடு 'டண்டணக்கா' பாடல் ஆகியனவற்றைப் பயன்படுத்த பெரும்தொகை ஒன்றைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டதாகச் சொல்லப்படுகிறது. அவ்வளவு தொகை கொடுத்து அவர் சம்பந்தப்பட்ட காட்சிகளை வைக்கவேண்டாம் என்று படக்குழுவினர் முடிவுசெய்துவிட்டதாகத் தெரிகிறது.

### பாபநாசம் யூலை 17இல் !



மோகன்லால், மீனா உள்ளிட்ட பலர் நடிக்க ஜீத்து ஜோசப் இயக்கத்தில் வெளியான மலையாள படம் 'த்ரிஷ்யம்'. விமர்சகர்கள் மத்தியிலும், வசூலிலும் பெரும் வரவேற்பைப் பெற்றது. தமிழில் கமல், கௌதமி, சார்லி, கலாபவன் மணி உள்ளிட்ட பலர் நடிக்க ஜீத்து ஜோசப் இயக்கி இருக்கிறார். இத்திரைப் படம் அடுத்த மாதம் 17-ம் தேதி திரைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை இறுதியில் இந்தி ரீமேக் ரிலீஸாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆகஸ்ட்டில் இணையும் ரஜினி-ரஞ்சித் !



'அட்டகத்தி', 'மெட்ராஸ்' ஆகிய படங்களை இயக்கிய ரஞ்சித், ரஜினி நடிப்பில் மூன்றாவது படம் இயக்குகிறார். இதை தயாரிப்பாளர் தாணு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். தாணுவின் வி கிரியேஷன்ஸ் தயாரிப்பில் உருவாகும் இப்படத்துக்கு இன்னும் டைட்டிக் வைக்கவில்லை. இப்படத்துக்கு சந்தோஷ்நாராயணன் இசையமைக்கிறார். 'மெட்ராஸ்' படத்துக்கு ஒளிப்பதிவு செய்த ஒளிப்பதிவாளர் முரளி ஜி இப்படத்துக்கு ஒளிப்பதிவு செய்கிறார்.

கதாநாயகி உட்பட படத்தில் நடிக்கும் நடிகர்கள், நடிகைகள் தேர்வு தற்போது நடைபெற்று வருகிறது. ஆகஸ்ட் மாதம் மலேசியாவில் படப்பிடிப்பு தொடங்கி, 60 நாட்கள் நடைபெறுகின்றன.


Kayaal IT Solution Ltd
CCTV Camera Installation & Maintenance
EST Aug 2012

Friendly services by qualified Engineer.....








- CCTV Installation and Maintainance
- Shop and House Burglar Wireless Alarm Installation & Maintenance
- We are Offering cameras 1000 TVL at Different Prices from £25
- AHD - 720P, 1080p ,1.3 Megapixel Camera, CMOS 1000 TVL all available all day
- Wireless HD IP Cameras also available
- DVR all quality - Sunvision make



Only 500 Pounds
4 CH DVR, 500GB Hard Disk
Camera with Night Vision
Water proff, Big TVL Sony
Ipad Setup, 30 Meter Vision

Only 355 Pounds
1 Touch Panel, 5 PIR Motion Sensors
3 Door Sensor, 3 Keys
1 Solar Siren Good Big Size Outdoor
5 Numbers auto dial & all wireless

Please Contact : Jothy
Electrical & Electronic Engineer, Beng Hons
Microsoft certified for MCTC, MCP 2.0 & Guilds Certified for PAT test



Paying Method : By PayPal or Cash
83, Roberts Bridge Road,
Carshalton, SM5 1AH

Tel : 07859892657 | 02034416364
E-Mail : kayaalitsolutions@hotmail.com
Web : www.kayalcctv.com



உ

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

**Saiva Munnetta Sangam (UK)**


Tel / Fax: 020 8514 4732 Fax: 01268 5618
website: saivamunnettasangam.com e.mail: smsukinfo@gamil.com
Registered Charity No: 292085


**ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயம்**

2 Salisbury Road Manor Park London E12 6AB

# ஆனி உத்தர அலங்காரத் திருவிழா அழைப்பிதழ்

**ஆரம்பம்: திங்கட்கிழமை** 15.06.2015 **நிறைவு: புதன்கிழமை** 24.06.2015

**சிவனடியார்களே வணக்கம்**

சைவர்களுக்கு கோயில் என்னும் சொல்லிற்கு முதற் காரணமாகவும் விளக்கமாகவும் இருப்பது சிதம்பரம் எனப்படும் ஆகாயத் தலமாகும். எமது சங்கத்தில் சிதம்பரம் பொன்னம்பல சபையை ஒத்த தன்மையில் அமைக்கப்பட்ட தங்க மண்டபத்தில் சிவகாமி அம்பாளுடன் சிதம்பரேஸ்வரப் பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். எங்கள் சங்க சிதம்பரேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் சிதம்பரம் ஆனந்த நடராஜப் பெருமானின் ஆலயத்தில் இடம்பெறும் ஆனி உத்தரத் திருமஞ்சனம் எனப்படும் திருவிழாவைப் பின்பற்றி நடைபெற்று வருகின்றது.

இவ்வருடாந்த நிகழ்வு நிகழும் மன்மத ஆண்டு ஆனி மாதம் 1ஆம் நாள் **திங்கட்கிழமை 15.06.2015** தொடக்கம் ஆனி மாதம் 10ஆம் நாள் **புதன்கிழமை 24.06.2015** வரை நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

15.06.2015 முதல் 23.06.2015 வரை தினமும்

| | | |
|---|---|---|
| *மாலை* | *6.00 மணிக்கு ஸ்ரீஞானவிநாயகப் பெருமானுக்கு அபிஷேகம்* |
| *இரவு* | *6.30 மணிக்கு கூட்டுவழிபாடு* |
| *இரவு* | *7.00 மணிக்கு சிதம்பரேஸ்வரப் பெருமானுக்கு சிறப்பு அலங்கார உற்சவப் பூசை* |
| *இரவு* | *8.00 மணிக்கு சிறப்புரை* |
| *இரவு* | *8.20 மணிமுதல் கலை நிகழ்ச்சிகள்* |

**21.06.2015** ஞாயிற்றுக்கிழமை ஏழாம் திருவிழா ஆனி மகம் நாளன்று மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை இடம்பெறும்.

24.06.2015 புதன்கிழமை அன்று
காலை 6.00 மணிக்கு ஆனி உத்தர வழிபாடு

*காலை 6.00 முதல் ஹோமமும் தொடர்ந்து நடராஜப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகமும் இடம்பெற்று விசேட அலங்காரத்தின் பின் பூசையும் ஸ்ரீசிவகாமி அம்பாளுடன் சிதம்பரேஸ்வரப் பெருமான் புறப்பாடும் ஊஞ்சல் உற்சவமும் இடம்பெறும்.*

| திகதி | நாள் | சிறப்புச் சொற்பொழிவாளரும் பேசப்படும் கருப்பொருளும் ~ மாலை 8.00 மணிமுதல் | கலை நிகழ்ச்சி வழங்குபவர்கள் ~ மாலை 8.20 மணிமுதல் |
|---|---|---|---|
| 15.06.2015 | திங்கட்கிழமை மாலை | சிறப்புரை: Ilford செல்வ விநாயகர் ஆலய குருக்கள், பிரதான திருவண்ணாமலை பெரியபட்டம் சிவஸ்ரீ நடேச சுவாமிநாத சிவாச்சாரியார் - **"மெய்ப்பொருள்"** | நடனம்: பரதநாட்டிய கலைமணி திருமதி. ரட்ணலஷ்மி சோமசுந்தரம் அவர்களின் லஷ்மி கலாலயம் மாணவர்கள் |
| 16.06.2015 | செவ்வாய்க்கிழமை மாலை | சிறப்புரை: திரு. துரை சிவபாலன் "அ, ஆ இ உயிர் மொழி" தமிழ்ப் பாடநூலாசிரியர் - **"பக்தி இலக்கியத்தில் பெண்மை"** | நடனம்: பரதாலயா நடனப்பள்ளி ஆசிரியர் நாட்டிய கலைமணி பரதகலா வித்தகர் திருமதி கங்கா சுதாகரன் அவர்களின் மாணவர்கள் |
| 17.06 2015 | புதன்கிழமை மாலை | சிறப்புரை: என்பீல்ட் நாகபூஷனி அம்மன் ஆலய தலைமைச் சிவாச்சாரியார் கமலநாதக் குருக்கள் - **"நமச்சிவாய வாழ்க"** | புல்லாங்குழல் இசை: செல்வன் யதீசன் செல்வகுமார் |
| 18.06.2015 | வியாழக்கிழமை மாலை | சிறப்புரை: சமூக சீலர் யோகி ராம்சுந்தர் அவர்கள் - "சிவயோக சித்தாந்தம்" | நடனம்: Newham Youth Academy சிவபிரனாலயா நடனப்பள்ளி ஆசிரியர் நர்த்தன வித்தகி திருமதி சிவாந்தி சுசீந்திரன் அவர்களின் மாணவர்கள் |
| 19.06.2015 | வெள்ளிக்கிழமை மாலை | சிறப்புரை: திருமதி மாதவி சிவலீலன் - **"சிவனருளாலே"** | நடனம்: பிரேமாலயா நாட்டிய சேத்திரா ஆசிரியர் திருமதி பிரேமளாதேவி இரவீந்திரன் அவர்களின் மாணவர்கள் |
| 20.06.2015 | சனிக்கிழமை மாலை | சிறப்புரை: திருமதி. தயாளினி மோகனராஜ் - **"சமயமும் வாழ்வும்"** | நடனம்: நாட்டிய விசாரதா திருமதி ஜீவா பிரேம் அவர்களின் நாட்டிய கலாலயம் மாணவர்கள். |
| 21.06.2015 | ஞாயிற்றுக்கிழமை மாலை | சிறப்புரை: சைவப் புலவர், சைவ சித்தாந்த பண்டித சிவஸ்ரீ பா. வசந்த குருக்கள் B A (Hons.) -**"ஒளிவளர் விளக்கு"** | வாய்ப்பாதட்டு: செல்வி. ஆரணி ஆதீசன், செல்வன் சின்மயன் ஆதீசன் |
| 22.06.2015 | திங்கட்கிழமை மாலை | சிறப்புரை: கயிலை சிவஸ்ரீ நாகநாதசிவம் சிவாச்சாரியார் இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலய பிரதம குருக்கள் - **"நைமித்திய பூசையும் மகோற்சவமும்"** | இன்னிசைக் கச்சேரி: வாய்ப்பாட்டு: செல்வி. சிவஜனனி சுரேஷ் மிருதங்கம்: செல்வன். குமரன் ரவீந்திரதாஸ் வயலின்: செல்வன். குமரன் ரவீந்திரதாஸ் |
| 23.06.2015 | செவ்வாய்க்கிழமை மாலை | சிறப்புரை: திரு. க. ஒப்பிலாமணி – **"நாமும் திருமுறைகளும்"** | நடனம்: ஸ்ரீமீனாட்சி பரதநாட்டிய பள்ளி ஆசிரியர் நாட்டிய கலாசூடாமணி நாட்டிய விசாரதா திருமதி. சாந்தா அன்னபூரணி அவர்களின் மாணவர்கள் |
| 24.06.2015 | புதன்கிழமை காலை | சங்க நால்வர் தமிழ்க் கலை நிலைய பரத நாட்டிய ஆசிரியா பரதசூடாமணி திருமதி. ரஜி மோகனராஜ் அவர்களது மாணவர்களின் நடனம் ஆனி உத்தரப் பூசையின் போது நடராஜப் பெருமானுக்கு நாட்டி உபசாரமாக இடம்பெறும். | |

உங்களனைவரையும் இத்திருவிழா நாட்களில் ஆலயத்திற்கு வருகை தந்து இறைவனின் அபிஷேக, அலங்காரக் காட்சிகளைக் கண்டும், பூசைகளில் கலந்தும், சிறப்புச் சொற்பொழிவுகளைக் கேட்டும் மற்றும் கலை நிகழ்ச்சிகளைப் பார்த்தும் நடராஜப் பெருமானின் அருள் பெற்று இன்புறமாறு அன்பாக அழைக்கின்றோம்.


Most Trusted and Reliable Name in the Trade Since 1985



Door To Door

## GlenCarriers

Laksiri Seva

Services We Offer;

- இலங்கை மற்றும் உலகின் எப்பாகத்திற்கும் கடல் மற்றும் விமான மார்க்கமாக குறைந்த விலையில் பொதிகள் அனுப்பும் சேவை
- இலங்கையின் எப்பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை (Door to Door) *
- தனிப்பட்ட மற்றும் வர்த்தக சேவைகளும் உண்டு
- உங்கள் பொருட்களை நம்பிக்கையுடன் பாதுகாப்பாக உரிய நேரத்தில் அனுப்பி வைக்கவும் மேலும் 36 க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக நடாத்திச் செல்லப்படும் ஒரே ஒரு நிறுவனம் கிளென் கரியர்ஸ்

- Sea Freight and Air Freight
- Full Container (20ft and 40 ft)
- Pick-up and Delivery Services in UK and EU
- House Removals with FREE Survey

இலங்கையில் பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமிடங்கள் — Laksri Seva Customs Bonded Warehouses

**Colombo Warehouse**
Laksiri Seva Pvt Ltd.
66, New Nuge Road,
Peliyagoda, Colombo
+94 1129 177 29-31

**Eastern Province Warehouse**
Laksiri Seva Pvt Ltd.
26, Hmyl Lane, Main Street,
Addappallam, Ninthavur.
T: 0672 0510 50-51

Collection from £ 10 within London *

Collection from your door point in any part of UK or Europe*

2 x Tea Carton for £ 19.50 *

* Conditions Apply

# அழையுங்கள் : 020 8743 7353

Mon - Sat 9:30 am to 5:00 pm
10:30am to 2:30pm on all other public & bank holidays.
Closed on Sundays, Christmes day and Boxing day

Web : www.glencarriers.com email : info@glencarriers.com || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED